
கல்கி
ரூ. 2.
ஏழைமைக்கு மருந்துதரும் டாக்டர்கள்...


"டீரூ"வின்
மற்றொரு
புதிய படைப்பு.
short Vermicelli
ஷார்ட் வெர்மிசெல்லி
அதிக சுவையுள்ள உப்புமாவும் கிச்சடியும் தயாரிக்க
short Vermicelli
டீரூவின்
ஷார்ட் வெர்மிசெல்லி
• மிக உயர்ந்த தரத்தைக் குறிக்கும் கிரீம்-மஞ்சள் வண்ணம் கொண்டது.
• ஒட்டுவதை தவிர்க்க பருமனாகவும் வலிமையுடனும் தயாரிக்கப்பட்டது.
• மிக உயர்ந்த சுவையுடன் கூடிய கிச்சடி, உப்புமா, புலவ், பாயாசம், கீர் மற்றும் ஹல்வா தயாரிக்க மிகவும் ஏற்றது.
டீரூ
ஷார்ட் வெர்மிசெல்லி
உபயோகித்து அதன் மேன்மையை உணருங்கள்
டீரூ பிஸ்கட்டுகள், சேமியா, வேஃபர்ஸ் —
சிறந்த பொருட்களைக் கொண்டு அன்புடனும் அக்கறையுடனும் தயாரிக்கப்படுபவை
அறிமுகச் சலுகை
25 பைசா தள்ளுபடி
ஸ்டாக்குகள் தீரும் வரை
AFL 2808

ஒலிம்பிக் அரசியல்

ஒலிம்பிக் ஹாக்கியில் இந்திய அணியின் பரிதாப நிலைமையையொட்டிப் பல்வேறு தலைவர்களை போனிலேயே பேட்டி கண்ட போது......

ராஜீவ் காந்தி: ஒலிம்பிக் ஹாக்கியில் இந்திய அணி தோற்று விட்டதாக முதலில் என்னை நம்ப வைக்க வேண்டும். இதற்காகப் பத்திரிகைப் பிரதிநிதிகளுடன் நான் பேச்சு வார்த்தை நடத்தத் தயார். இந்திய அணி ஹாக்கியில் தோற்று விட்டதாகத் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தால் அதுவே அவர்கள் மனந்தளர்ந்து போகவும் வீழ்ச்சி அடையவும் வழிவகுக்கும். இத்தகைய அவதூறுகளைப் பரப்பித் தேச நலனுக்கு எதிராகப் பத்திரிகைகள் வேலை செய்வதைத் தடுக்கத்தான் நான் அவதூறு மசோதா கொண்டு வந்தேன். அது சட்டமாக முடியாதபடி ஆர்ப்பாட்டம் பண்ணுகிறார்கள். அவதூறு மசோதாவுக்கு அவசியம் இருப்பதை இப்போதாவது உணருங்கள்! சட்டம் இல்லாவிட்டாலும் அவதூறு இருக்கிறது; வெற்றி இல்லா விட்டாலும் ஹாக்கி இருக்கிறது!

ப. சிதம்பரம்: 'ஹாக்கி என்ன ஹாக்கி! அதை வேண்டுமானால் வைத்துக் கொள்வோம்; வேண்டாமென்றால் தூக்கி எறிவோம்! சடுகுடுவைத் தேசிய விளையாட்டாக வளர்ப்போம்! அதை ஒலிம்பிக்கில் சேர்க்கட்டுமே!' என்றெல்லாம் நான் சொல்லாததைச் சொன்னதாகப் பத்திரிகைகள் வெளியிட. அதற்கு நான் மறுப்புத் தெரிவித்து அறிக்கைவிட்டதை செம்பியன் படிக்கவில்லை என்றே நினைக்கிறேன். எல்லாரும் கிரிக்கெட் மோகம் பிடித்து அலைகிறார்கள்; கிளி தண்டு இல்லையா? இன்று கிரிக்கெட்டை அணிவோம்; நாளைக்குக் கழற்றி எறிவோம். யார் கேட்பது? நமக்காகத்தான் கிரிக்கெட்டே தவிர கிரிக்கெட்டுக்காக நாம் அல்ல. இருபது வருடத் திராவிடப் பாரம்பரிய ஆட்சி கிளி தண்டுக்காகவும் சடுகுடுவுக்காகவும் என்ன செய்தது? ஹாக்கியில் தோற்றதற்குக் குறை கூற வந்துவிட்டார்களே! இதிலிருந்தே இவர்கள் 'தமிழ், தமிழ்' என்று போலி நாடகம் ஆடுவது தெரியவில்லையா?

கருணாநிதி: சிதம்பரம் அப்படியா சொன்னார்? சிவகங்கை சின்னப் பையன் அறியாமல் பேசுகிறார். அவரை மன்னித்து விடுவோம். ஆங்கிலம் அந்நிய மொழியானாலும் நேரு உறுதி மொழிப்படி-ஹிந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் ஆட்சி

செம்பியன்




மொழியாக நீடிக்கும். அதேபோல், 'ஹாக்கியும் கிரிக்கெட்டும் வேண்டாம்' என்று ஹாக்கி, கிரிக்கெட் பிரியர்கள் முடிவெடுக்கும் வரை, அவை நம் நாட்டை விட்டுப் போகாது. மேலும் விளையாட்டுத் துறை அமைச்சர் என்று மத்தியில்தான் ஒருவர் இருக்கிறார் என்றும் மாநிலத்தில் இல்லை என்றும்சிதம்பரத்துக்கு நினைவூட்ட விரும்புகிறேன். திராவிட பாரம்பரிய விளையாட்டை ஒலிம்பிக்கில் சேர்ப்பதெனில் அது ஜல்லிக்கட்டு அல்லது மஞ்சி விரட்டாகத்தான் இருக்க முடியுமே தவிர, சின்னப் பையன் குறிப்பிடுவது போல அது கிளி தண்டு, கோலி அல்லது சடுகுடுவாக இருக்க முடியாது. ஜல்லிக்கட்டு ஒலிம்பிக்கில் இடம் பெற சிதம்பரம் சார்ந்திருக்கும் மத்திய அரசு போராடுமானால் அந்தமுயற்சிக்குத்தி. மு. க. கைகொடுக்கும். காளைகளை அடக்கும் காளைகளை உருவாக்கும் முயற்சியில் நாங்கள் பதவிக்கு வந்தால் ஈடுபடுவோம்.

ஜெயலலிதா: ஹாக்கியில் நாம் தோற்றதற்கு யார் யாரோ கூறிய ஏதேதோ காரணங்களைப் பத்திரிகைகளில் பார்க்கிறேன். அவை எதுவும் சரியல்ல. ஹாக்கியில் நாம் தோற்றோமென்றால் புரட்சித் தலைவரின் கருத்துப்படி அமைச்சர்கள் நடந்து கொள்ளாததுதான் காரணம். அன்று பிரிந்து போனவர்களும் இன்று உதிர்ந்து போனவர்களும் ஹாக்கிக்காக ஒரு துரும்பையாவது எடுத்துப் போட்டார்களா? புரட்சித் தலைவர் ஹாக்கிக்காகச் சேமித்த பணத்தை ஜானகி விணடிக்கிறாரேயன்றி உருப்படியாக ஏதும் செய்யவில்லை; அவரால் செய்யவும்முடியாது. நான் பதவிக்குவந்தால்ஹாக்கி மட்டைகளையும் ஹாக்கி பந்துகளையும் பாதி விலைக்குக் கிடைக்கச் செய்வேன். 'ஹாக்கி விளையாடுவது எப்படி' என்ற பிரசுரத்தை லட்சக்கணக்கில் அச்சடித்து ரேஷன் கடைகள் மூலம் இலவசமாக விநியோகிப்பேன். ஹாக்கி வளர்ச்சிக்கு இதைவிடச் சிறந்த யோசனை வேறு யாரிடமாவது உண்டா?

வி. பி. சிங்: மேல்நாடுகளில் பதுக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பணத்தைக் கொண்டு இங்கே இரண்டு லட்சம் கிராமங்களுக்குக் குடிநீர் வசதி அளிக்கலாம் அல்லது இருபதாயிரம் ஹாக்கி வீரர்களை உருவாக்கலாம். இவர்களில் ஒலிம்பிக் தரத்துக்கு இருபது பேர் தேர்வு பெற மாட்டார்களா? ஆக, இந்திய மக்களின் பணத்தைக் கொள்ளையடித்து அயல்நாட்டு வங்கிகளில் முடக்கும் துரோகிகள்தான் இந்தியா, ஒலிம்பிக் ஹாக்கியில் தோற்றதற்குக் காரணம். அமிதாப் பச்சன்களும் அஜிதாப் பச்சன்களும் இருக்கும் வரை நமது ஹாக்கி உருப்படாது. நண்பர்கள் என்பதால் இவர்களுக்கு அடைக்கலம் தரும் ராஜீவ், ஒலிம்பிக் ஹாக்கியில் நமது வெற்றி தோல்வி குறித்துப் பேசவே அருகதையற்றவர்.

செழியன்: எனக்குத் தி. மு. க. மீது கோபமில்லை. ஆனால் எனக்கு ஹாக்கி பற்றி ஒன்றும் தெரியாது என்று கருணாநிதி ஒரு முறை சொன்னார். அது ஹாக்கியையே இழிவுபடுத்துவதாகிறது. அதையும் நான் பொறுத்துக் கொண்டேன். ஹாக்கியில் நாம் வெற்றி பெற நமது அணி தனித்து ஆடாமல் வேறு சில நாடுகளுடன் கூட்டணி அமைத்து ஆடலாம். அப்போது மக்களுக்கு நமது ஹாக்கியில் நம்பிக்கை பிறக்கும். இவர்கள் ஒற்றுமை குலையாமல் விளையாடுவார்கள் என்று மக்கள் கருத ஆரம்பித்து விட்டால் ஹாக்கியில் நாம் ஒலிம்பிக் தங்க மெடலை வென்று விடலாம். ஆனால் ஒன்று: FRG, GDR, USA போன்ற மூன்றெழுத்து நாடுகளுடன் நாம் கூட்டணி அமைக்கக் கூடாது. அவை, நம் ஹாக்கித் தொண்டர்களுக்கு DMK என்ற மூன்றெழுத்தை நினைவூட்டினால் சரியாக ஆடமாட்டார்கள். வெற்றி வாய்ப்பு நழுவி விடும். ஆனால் ஒன்று. எனக்குத் தி. மு. க. மீது எந்தக் கோபமும் இல்லை!



- உப்புத் தொழிலாளர் ஸ்டிரைக்கில் உடன்பாடு — செய்தி.

('அதற்குள் உன் பாடு, என் பாடு என்று ஆகிவிட்டது' என்கிறார் ஒரு தொழிலாளி)

- வெளிநாடுகளுக்கு 'முருங்கைக்காய் பவுடர்' ஏற்றுமதி!

('ஒரிஜினல் 'முந்தானை முடிச்சு' பிரான்டா?' என்று கேட்கிறார் ஒரு பாக்யராஜ் ரசிகர்)

- நர்சரி பள்ளிகளின் மாநாடு சென்னையில் நடந்தது — செய்தி.

('மாநாட்டில் இன்னும் எப்படியெல்லாம் பெற்றோரிடமிருந்து பணம் கறப்பது என்று விவாதித்திருப்பார்கள்' என்று முணுமுணுக்கிறார் ஒரு குடும்பத் தலைவி)

- ஐந்தாம் வகுப்புத் தேர்வு எழுதிய கைதிகளில் 93 சதம் தேர்ச்சி — மத்தியப்பிரதேசச் செய்தி.

('கம்பிகளை எண்ணியே, கணக்குக் கற்றுக் கொண்டிருப்பார்களோ' என்று ஆச்சரியப்படுகிறார் ஒரு மாணவர்)

— மௌஷ்மி.



கல்கி
6-11-88
தீபாவளிச் சிறப்பிதழில்
திகிலூட்டும் தொடர்கதை ஆரம்பம்
இன்று இறப்பு விழா
ராஜேஷ்குமார்



* டாக்டர் ராஜரத்தினம் ஆபெல்.

ரூசா:



* பழனி


ஏழைமைக்கு மருந்து தரும் டாக்டர்கள்...

புதுமணப் பெண்ணுக்கே உரிய பெருமிதத்தோடு கைப்பிடித்த கணவனுடன் பெங்களூருக்குப் புறப்பட்டார் சாலம்மாள். கைப்பிடித்த கணவன் சொந்த அத்தை மகன் தான் என்றாலும், பெங்களூர் சென்றவருக்குப் பயங்கர அதிர்ச்சி. கணவன், உறவுக்கார விதவைப் பெண்ணிடம் தகாத உறவு வைத்திருந்ததன் விளைவு; தினமும் சண்டை. வசந்தமாக இருக்க வேண்டிய வாழ்வு புயலாக மாறியது. கூடிய விரைவில் தம் சொந்தக் கிராமமான மல்லிப்பட்டுக்கே திரும்பினார் சாலம்மாள்.

நாட்கள் மாதங்களாகி வருடங்களாகின. அவரது கணவன் கண்டு கொள்ளவே இல்லை. வேதனையால் வாடிக் கொண்டிருந்த போது மீண்டும் ஒரு கொடுமை. தொழுநோய் அவரைத் தொட்டுத் தழுவியது; உறவினரும், சமூகமும் அவரைத் தள்ளி வைக்க, வாழ்க்கை நரகமாகியது. தன்னந் தனியளாகிவிட்ட நிலையில், இது தான் சமயம் என்று நகைகளையும், நிலத்தையும் உறவினர்கள் பிடுங்கிக் கொண்டார்கள்!

இனி தற்கொலை செய்து கொள்ள வேண்டியதுதான் என்று அவர் முடிவு செய்த போதுதான் 'ரூசா' அவர் வாழ்வில் குறுக்கிட்டது. முதல் வேலையாக ஆதரவற்றோருக்கான பென்ஷன் பெற வழி செய்யப் பட்டது. பின்னர் 'ரூசா' சாலம்மாளுக்குப் பத்துக் கோழிக் குஞ்சுகளோடு கூடிய தாய்க் கோழியைக் கொடுத்துதவியது. நாளாக, நாளாக கோழிக் குஞ்சுகள் பெருகின. அவற்றை விற்று வந்த வருமானத்தில் வறுமை பறந்தோடி விட்டது! மோசமாக இருந்த வீட்டின் கூரையை மாற்றிப் போடு மளவுக்கு வசதி வந்தது. வாரத்திற்கொரு முறை 'ரூசா'வின் மருத்துவமனைக்குச் சென்று தொழுநோய்ச் சிகிச்சை பெற்றுக் கொண்டதால் அதுவும் கட்டுப்படுத்தப்பட்டுக் குணமானது. சாலம்மாவின் வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த எதிர்பாராத திருப்பத்திற்குக் காரணம் ரூசா.


நாகல் கிராமத்தைச் சேர்ந்தவர் கோவிந்தம்மாள். கணவருக்கோ சிறுநீரகக் கோளாறு. மூன்று குழந்தைகள். வறுமை



* ரூசா நலவாழ்வு மருத்துவமனை



* கோவிந்தம்மாள்



* இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி...



* தனம்மாள்

என்றால் சொல்ல முடியாத வறுமை. இந்தக் குடும்பத்தை அடையாளம் கண்டு கொண்டது 'ரூசா'. கோவிந்தம்மாளுக்கு நூறு ரூபாய் கொடுத்து உதவியது. அதை மூலதனமாகக் கொண்டு காய்கறிக் கடை ஆரம்பித்தார் அவர். இப்போது சாப்பாட்டுக்குப் பிரச்னையில்லை. 'ரூசா'வின் மூலம், கணவனுக்குப் பெட்டிக் கடை வைக்க வங்கி உதவி கிடைத்தது. அது மட்டுமல்ல; இனி கோவிந்தம்மாளின் கணவருக்கு வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் இலவசச் சிகிச்சை வசதியும் உண்டு. தடம் புரண்டிருந்த அவர்கள் வாழ்வு மறுபடியும் சீரான வாழ்க்கைத் தண்டவாளத்தில் ஏறியது.

கஷ்டப்படுகிறவர்களுக்குக் கை கொடுக்கும் இந்த 'ரூசா'வைப் பற்றி வட ஆர்க்காடு மாவட்டம் கே. வி. குப்பம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் யாரைக் கேட்டாலும் சொல்லுவார்கள்.

காட்பாடியில் இருந்து குடியாத்தம் போகும் பாதையில் இருக்கிறது காவனூர் கிராமம். அங்குதான் 'ரூசா' என்று சொல்லப்படும் RURAL UNIT FOR HEALTH AND SOCIAL AFFAIRS (சுகாதாரம் மற்றும் சமூக நலன்களுக்கான கிராமப்புற இயக்கம் RUSHA) ஸ்தாபனத்தின் தலைமை நிலையம் இருக்கிறது. 'ரூசா'வின் தற்போதைய இயக்குனரான டாக்டர் ராஜரத்னம் ஆபெல்லைச் சந்திக்கிறோம். ஸ்நேகம் சிரிப்பாக மலர நம்மை வரவேற்கிறார்.

''1977–ம் ஆண்டுதான் 'ரூசா' ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியும் அருகிலுள்ள மூன்று பஞ்சாயத்து யூனியன்களில் அடிப்படைச் சுகாதாரத்தைக் கவனிக்க வேண்டும் என்று இந்திய மருத்துவக் கழகம் சொல்லியுள்ளது. அந்த அடிப்படையில்தான் சி.எம்.சி. மருத்துவக் கல்லூரியின் 'ரூசா' பிரிவு கணியம்பாடி பஞ்சாயத்து யூனியனில் சுகாதாரப் பணியை மேற்கொண்டு விட்டுக் கே.வி. குப்பம் பகுதிக்கு வந்தது. கே. வி. குப்பம் பகுதிக்குள் செயல்பட ஆரம்பித்த பின்னர், மருத்துவப் பணிகளுக்கு இடையில் சமூகப் பிரச்னைகளிலும் கவனம் செலுத்த ஆரம்பித்தது. இந்த மாறுதலுக்கு முக்கிய காரணம்

அப்போது இதன் டைரக்டராக இருந்த டாக்டர் தலீப் முகர்ஜிதான்.

''நாங்கள் நடத்தும் மருத்துவ மனைகளுக்கு அடிக்கடி குழந்தைகளுடன் விஜயம் செய்யும் தாய்மார்களிடம் பேசிப் பார்த்தோம். குழந்தைகள் நோயில் விழக் காரணம், சத்தான உணவு கொடுக்கப்படாதது தான். அந்த தாய்மார்களால் சாதாரண உணவையே கொடுக்க முடியவில்லை. ஆக நோய்க்கான மூல காரணமே வறுமைதான் என்பதைக் கண்டோம். எனவே, நோய்க்கான மூலகாரணத்தையே கெல்லி எறிய — அவர்களின் வறுமையைப் போக்க எங்களால் இயன்றதைச் செய்ய முடிவு செய்தோம்.

''ஒரு லட்சம் மக்கள் தொகை கொண்ட கே. வி. குப்பம் பஞ்சாயத்து யூனியனில் எண்பதுக்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. இவர்களுக்கு எவ்வாறு சேவை செய்வது? பணத்துக்கு எங்கே போவது? எங்கள் 'ரூசா' குழுவினர் கலந்தாலோசித்த போது ஒரு வழி புலப்பட்டது. அரசு போடும் பல திட்டங்கள் கிராம மக்களுக்கு முறையாகச் சென்றடைவதில்லை. அரசு, அரசுடைமையான வங்கிகளுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக அமைந்து, ஏழ்மையில் மூழ்கியுள்ளவர்களுக்கு உதவினால் என்ன? என்று தோன்றியது. அவ்வாறே செயல்பட ஆரம்பித்தோம். அதே நேரத்தில் எங்கள் சேவைத் தொண்டர்களைக் கொண்டு கிராமங்களில் முதியோர் கல்வியை ஆரம்பித்தோம். கிராமப்புற மக்களுக்கு அடிப்படை சுகாதாரத்தைப் போதித்தோம். குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போட வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொன்னோம். குழந்தைகளுக்கு வரக்கூடிய நோய்களைப் பற்றித் தாய்மார்களுக்கு விளக்கினோம்.

''எங்கள் தலைமை நிலையத்தில் வசதியுள்ள ஆஸ்பத்திரியொன்று ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருந்தது. அதன் அருகிலேயே தொழில் பயிற்சி நிலையம் ஆரம்பித்தோம். பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் டைலரிங், டைப்ரைட்டிங், சைக்கிள் ரிப்பேர் மொபெட் ரிப்பேர், டீ.வி. ரேடியோ ரிப்பேர், எரிசாண வாயு அடுப்புக் கட்டுவது ஆகியவற்றில் பயிற்சி கொடுத்தோம். கிராமம், கிராமமாகச் சென்று சுயவேலை வாய்ப்பைப் பெருக்க, வங்கிக் கடன்களை ஏற்பாடு செய்தோம். கடனை வாங்கிக் கொடுத்து விட்டுக் கண்டு கொள்ளாமல் இருப்பதில்லை. பணத்தைத் திரும்பச் செலுத்துவது, பணம் பெற்றவர்களின் கடமை என்பதை வலியுறுத்தினோம்....''

டாக்டர் சொன்னது உண்மைதான் என்பது நாகல் கிராமத்தைச் சேர்ந்த தனம்மாளைச் சந்தித்த போது தெரிந்தது. 1980—ல் ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கிச் சின்ன இட்லி கடையை ஆரம்பித்தார் தனம்மாள். பின்னர் கடனை அடைத்து விட்டு மீண்டும் ஆயிரம் ரூபாய் வாங்கினார். பின்னர் அதையும் அடைத்து விட்டு 2500 ரூபாய் கடன் வாங்கி இருக்கிறார். இப்போது இட்லி தவிர வேறு பலகாரங்களும் போடுகிறார். கூடிய விரைவில் இந்தக் கடனையும் அடைத்து விட முடியுமென்று உற்சாகமாகக் கூறுகிறார் அவர்.

அதே போல் ஆடு வளர்க்க நான்காயிரம் ரூபாய் கடன் வாங்கிய பழனி, மூவாயிரத்தைத் திருப்பிக் கட்டி விட்டார். ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற சுப்பிரமணியம் 'ரூசா' தலைமை நிலையத்தில் கோழி வளர்ப்புப் பயிற்சி பெற்று, 'ரூசா'வின் உதவியோடு வங்கியில் 16,000 ரூபாய் கடன் வாங்கிக் கோழிப் பண்ணையை ஆரம்பித்து இப்போது வெற்றிகரமாக நடத்தி வருவதுடன் கடனையும் தவணை தவறாது கட்டி வருகிறார்.

காங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த அன்னக்கிளி 'ரூசா'வால் சைக்கிள் ரிப்பேர் தொழிலைக் கற்றுக் கொண்டார். வங்கியின் உதவியோடு வாடகை சைக்கிள் நிலையம் ஆரம்பித்தார். இப்போது வாங்கிய கடனைத் திருப்பி அடைத்தும் விட்டார்.

கடன் வாங்கிக் கொடுத்தவுடன் பொறுப்புக் கழிந்தது என்று விட்டு விடாமல், கடன் பெற்றவர்களைத் தொடர்ந்து கண்காணித்துக் கடனைத் திருப்பி அடைக்க ஊக்குவிக்கும் 'ரூசா'வின் இந்தப் பணி, இந்தப் பகுதியிலுள்ள வங்கி ஊழியர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்திருக்கிறது.

ரூசாவின் குடும்ப நலத் தொண்டர்கள் தினமும் காலையில் வீடு வீடாகச் சென்று, தாய்மைக் காலத்தில் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டியவை, குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டால் அது துவண்டு போகாமல் இருக்கக் கொடுக்கப்படும் சர்க்கரை — உப்பு கரைசல் தயாரிப்பது முதலியவை பற்றிப் போதிக்கிறார்கள். குடும்பக் கட்டுபாடு செய்து கொள்ள விரும்பும் பெண்களை மருத்துவமனைக்கு அழைத்து வரும் பொறுப்பையும் குடும்ப நலத் தொண்டர்களே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். கிராமங்களின் தன்னிறைவின் அடையாளமாக இந்தக் குடும்ப நலத் தொண்டர்களை அந்தந்தப் பகுதியிலுள்ள இளைய சமுதாயத்திலிருந்தே தேர்ந்தெடுத்துப் பயிற்சியளித்துச் சேவை செய்ய வைத்திருப்பதுதான் ரூசாவின் தனிச் சிறப்பு!

வட ஆர்க்காடு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் நிரந்தர வறட்சியில் பீடிக்கப்பட்டிருப்பவைதான். கே. வி. குப்பம் பகுதியும் அப்படித்தான். இதை மனத்தில் கொண்டு ரூசா ஒரு திட்டம் போட்டது. வாழை, கரும்பு போன்ற தண்ணீர் நிறையத் தேவைப்படும் பயிர்களை விட்டு விட்டு, மாமரம், மல்லிகைத் தோட்டம் என்று தண்ணீர் குறைவாகத் தேவைப்படும் பயிர்களைப் போடுமாறு ரூசா விவசாயிகளைக் கேட்டுக் கொண்டது. முதலில் விவசாயிகள்

உங்கள் குழந்தைக்கு
அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது: பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்.

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து


6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

RK SWAMY/FSL/5112/TAM



காலையில் எழுந்தவுடன் உங்கள் முகம் இப்படியா சொர சொரவென்று இருக்கிறது?

உங்களுக்கே தெரியும் உங்கள் முரடான தாடியை வசப்படுத்த தேவை ஒரு விசேஷமான பிளேடு.

முரட்டு தாடி உள்ளவர்களுக்கு உறுதியோடு உருவான இரட்டை பிளேடுகளை இதோ அளிக்கிறது வில்டெக். புதிய ஸாவேஜ் 2.

மிகச் சிறந்த ஸ்டீலிலிருந்து தயாரிக்கப்பட்டது. இணையற்ற கூர்முனை கொண்டது. மூன்று முறை விசேஷ அமிலங்களால் பூசப்பட்ட ஸாவேஜ் 2. மிகவும் எளிதான முறையில், சுத்தமான, மழமழப்பான சவரங்களை அளிக்கிறது.





மேலும் ஸாவேஜ் 2, சர்வதேச "ஃபிக்ஸட்" மற்றும் "ஸ்விவல்" ரேசர்களுக்கும் பொருத்தமானது.

காத்திருப்பானேன்! இன்றே ஸாவேஜ் 2 தரும் புதிய அனுபவத்தைப் பெறுங்கள்!

புதிய

ஸாவேஜ் 2

இரட்டை பிளேடுகள்

முரட்டு தாடியை வசப்படுத்துகிறது.

OBM 2759 TAM



* 'ரூசா'வின் களப்பணியில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள்

தயங்கினாலும் ரூசாவின் இந்தத் திட்டத்திற்கு வரவேற்புக் கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. ஏகலப்பாக்கம் என்ற கிராமத்தில் மல்லிகை போட்ட விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் இப்போது ஜெட் வேகத்தில் உயர்ந்து விட்டது. இன்னும் பல கிராமங்களில் மாந்தோட்டம் வர இருக்கிறது.

இதையெல்லாம் விட பெரிய சாதனை கே. வி. குப்பம் பகுதியில் இளம்பிள்ளை வாதம் என்று சொல்லப்படும் போலியோ வியாதியை ரூசா அறவே ஒழித்ததுதான். கடந்த ஒரு வருடமாக அந்தப் பகுதியில் எந்தக் குழந்தைக்கும் போலியோ பீடிக்கவில்லை என்று சொல்கிறார் டாக்டர் ராஜரத்னம். இதற்குக் காரணம் ரூசா செயல்படுத்தும் போலியோ தடுப்பூசி முறைதான். போலியோ சொட்டு மருந்துதானே உண்டு; இன்ஜெக்ஷனும் உண்டா என்று கேட்கிறீர்களா? ஆம்! கே. வி. குப்பம் பகுதியில், இந்தியாவிலேயே முதன் முதலில், போலியோ தடுப்பு ஊசி முறையை அமுல்படுத்தியிருக்கிறது ரூசா.

போலியோ சொட்டு மருந்தை குறிப்பிட்ட சீதோஷ்ணத்திலேயே வைத்திருந்து கொடுக்க வேண்டும். அந்த அளவுக்குக் கிராமப்புறங்களில் வசதியில்லாததால், கொடுக்கப்படும் சொட்டு மருந்தின் வீரியம் குறைந்து, குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். இதனால்தான் இப்போது இன்ஜெக்ஷன் முறையைக் கையாண்டிருக்கிறது ரூசா. குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசிக்கு பதிலாக இப்போது போலியோ மருந்தையும் சேர்த்து நாற்தடுப்பு ஊசி போடப்படுகிறது. ஆனால் ஒன்று. இதில் மிகுந்த கவனமும் முன்னெச்சரிக்கையும் ஊசி போட்ட பின் தொடர்ந்த கண்காணிப்பும் தேவை. ரூசாவிடம் இதனை எதிர்பார்க்க முடியும்.

மனித நேயம், மகளிர் மேம்பாடு ஆகியவற்றில் ரூசா காட்டும் ஈடுபாடு குறிப்பிடத்தக்கது. கிராம மக்களுக்குச் சுற்றுப்புறச் சூழல், தாய்சேய் நலம், சமூக விழிப்புணர்ச்சி ஆகியவற்றையும் எடுத்துச் சொல்கிறார்கள். இது தவிர, இளைஞர் குழு, விவசாயிகள் மன்றம் ஆகியவையும் உண்டு. இவர்கள் மகளிர் மன்றத்துடன் இணைந்து சமூக விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும் தெரு நாடகங்களைக் கூடப் போடுகிறார்கள்!

ரூசாவின் பணிகளைக் கண்டு பிரமித்துப் போய், "நீங்கள் இன்னும் சில பகுதிகளை தத்தெடுத்துக் கொண்டால் என்ன?" என்று நம் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறோம்.

"நோ.... நோ..... அது சாத்தியமில்லை. சக்திக்கு மீறிக் காரியங்களை இழுத்துப் போட்டுக் கொண்டால் எதையும் சரியாகச் செய்ய முடியாது போகும். ஆனால் அரசு ஒரு காரியம் செய்யலாம். பல சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்தும் போக்கை அரசாங்க அதிகாரிகள் கையில் மட்டும் ஒப்படைக்காமல், எங்களைப் போன்ற சேவை ஸ்தாபனங்களுடன் இணைந்து செயல்பட்டால், ஒவ்வொரு பகுதியும் கே. வி. குப்பம் மாதிரி மாறிவிட வாய்ப்பு உண்டு. அதே போல் எந்த மக்களுக்காக நாம் திட்டம் போடுகிறோமோ அவர்களைக் கலந்து ஆலோசித்தே அந்தத் திட்டங்களைப் போடுவதோடு அந்தந்தப் பகுதி மக்களைக் கொண்டே அந்தத் திட்டங்களைச் செயல்படுத்தத் துவங்க வேண்டும். நாங்கள் அப்படிச் செய்வதால்தான் எல்லாம் வெற்றிகரமாக நடக்கிறது...." என்று அடக்கத்துடன் கூறி முடிக்கிறார் டாக்டர் ராஜரத்னம் ஆபெல்.

உடற்பிணிக்கு மட்டுமல்ல; வறுமைப் பிணிக்கும் மருந்து கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ரூசா டாக்டர்களை வாழ்த்தியபடி விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட போது ரூசாவின் பணி சிறக்கும் பல இடங்களில் [illegible] பழைய கவிதையொன்றை ஆங்கிலத்தில் எழுதிவைத்திருப்பதைக் கண்டோம்.

ஏழை மக்களிடம் செல்லுங்கள்;
அவர்களோடு வாழுங்கள்;
அன்பு செலுத்துங்கள்.
உங்கள் பணிதனை,
அவர்களுக்கு என்ன தெரியுமோ
அதிலிருந்து துவங்குங்கள்...
அவர்களிடம் என்ன இருக்கிறதோ
அதைக் கொண்டு தொடங்குங்கள்!
பணி முடிந்ததும் —
இலக்கை அடைந்ததும்
'அட! இதை நாமல்லவோ
சாதித்தோம்!' என்ற பெருமிதத்தில்
அவர்கள் பூரிக்க வேண்டும்.
அப்படி பூரிக்கச் செய்பவனே
உன்னதமான தலைவன்.'


— **ப்ரியன்.**

அட்டை வண்ணப்படங்கள் மற்றும் புகைப் படங்கள்:

கே. வி. ஆனந்த்.







தோல்விக்குப் பதக்கங்கள் கொடுத்தால்... சந்தேகமென்ன இந்தியாவுக்குத் தான் தங்கம்!



கல்கி

1988 அக்டோபர் 9
மலர் 47 இதழ் 10
விபவ புரட்டாசி 23



ஒலிம்பிக் மனப்பான்மை

ஒலிம்பிக் விளையாட்டுக்களை விட முக்கியம் ஒலிம்பிக் மனப்பான்மை. அது என்ன? 'கடமையைச் செய் பலனைக் கருதாதே' என்கிறது கீதை. 'லட்சியம் எவ்வளவு முக்கியமோ அதே போல் அதனை அடையும் மார்க்கமும் முக்கியம்' என்றார் மகாத்மா. உலக அமைதிக்காகப் புறாவைப் பறக்க விட்ட நேரு, பஞ்ச சீலத்தை வகுத்துத் தந்தார்.

ஒலிம்பிக் விளையாட்டுக்களில் நாம் தோற்றாலும் வென்றவரைப் பார்த்துப் பொறாமை கொள்ளாமல் மகிழவும் மனம் நிறைந்து வாழ்த்தவும் வேண்டும். இதன் மூலம் பல்வேறு நாடுகளிடையே நேசம் வளரவும் ஒற்றுமை ஓங்கவும் வேண்டும். இதுவே ஒலிம்பிக்கின் அடிப்படை நோக்கம்.

ஒருவர் வெற்றி பெற்று விடலாம்; ஆனால் அண்ணல் சுட்டிக் காட்டியது போல், வெற்றி பெற்றதற்கான வழி சரியில்லாது போனால் வெற்றி தோல்வியாவது மட்டுமல்ல, அவமானமும் அவரைச் சூழ்கிறது. பென் ஜான்ஸன் மருந்துகள் உட்கொண்டு சக்தி பெற்று வென்றார் என்று நிரூபணமானதால் அவரது தங்கப் பதக்கம் பறிக்கப்பட்டது. தாற்காலிக மகிழ்ச்சிக்காகவும் பணத்துக்காகவும் ஆசைப்பட்டு மோசடியில் இறங்கியதால் அவர் மட்டுமல்ல, அவரை அனுப்பி வைத்த கனடா தேசமும் தலைகுனிய நேரிட்டிருக்கிறது. இன்று ஜான்ஸன் செய்த தவறு அம்பலமாகி விட்டது. ஆனால் நாளை நடக்கக் கூடிய மோசடிகளைக் கண்டுபிடிப்பதே கூடக் கஷ்டமாக இருக்கும். ஏனெனில் விளையாட்டு வீரருக்குத் தேவைப்படும் சமயத்தில் கூடுதல் சக்தியை அளிக்கும் விஞ்ஞான நுணுக்கங்கள் நாளுக்கு நாள் முன்னேறி வருகின்றன. 'இது செயற்கை சக்தி' என்று நிரூபிக்க முடியாமலே போகும்! எனவே குற்றவாளியைக் கண்டுபிடிப்பதை விடக் குற்றம் புரியும் எண்ணமே ஏற்படாத வகையில் ஒலிம்பிக் மனப்பான்மையை வளர்ப்பதுதான் முக்கியமானது.

இனி கீதைக்கு வருவோம். 'பலனைக் கருதாதே' என்றதால் ஒலிம்பிக்கில் நமக்கு ஏற்பட்ட படுதோல்விகளை நாம் பொருட்படுத்தாமலும் அவற்றால் பாதிக்கப்படாமலும் இருக்கலாம். ஆனால் கடமையை ஒழுங்காகச் செய்தோமா என்று பார்க்க வேண்டும். கடமையைச் செவ்வனே செய்யாதிருந்து விட்டுப் 'பலனைக் கருதவில்லை' என்று பெருமைப்படுவது அபத்தம். ஹாக்கியில் நாம் அடைந்த படுதோல்விக்கு மன்னிப்பே கிடையாது. 'ஆசிய நாடுகள் எதுவுமே ஹாக்கியில் வெற்றி பெறவில்லை' என்றும் 'பாகிஸ்தானும் தோற்று விட்டதே' என்றும் ஆறுதல் அடைவது முட்டாள்தனம். ஆசிய விளையாட்டுக்களில் பி. டி. உஷா தங்க மெடல்களைக் குவித்ததால் ஒலிம்பிக்கிலும் அவரே அமர்க்களப்படுத்தி விடுவார் என்று எதிர்பார்த்தது அசட்டுத்தனம். எந்த ஒருவரின் ஆற்றலும் உச்சிக்குச் சென்ற பின் சரியவே செய்யும். இதனை உணர்ந்து புதிய புதிய பி. டி. உஷாக்களை நாம் தேடிப் பிடித்து உருவாக்கியிருக்க வேண்டும். தவறி விட்டோம். வேறு பல விளையாட்டுக்களிலும் இதே போலத்தான், வீரர்கள் உருவாக நாம் காத்திருக்கிறோமே தவிர உருவாக்குவதில்லை.

இத்தனைக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில் விளையாட்டுக்களுக்கு என்று முந்நூறு கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டொன்றுக்கு அறுபது கோடி! எங்கே போகிறது? யார் முழுங்குகிறார்கள்? மூலைக்கு மூலை எழும் கட்டடங்களாலும் உருவாகும் ஸ்டேடியங்களாலும் பயனில்லை. மையமாக ஒரே ஒரு பயிற்சிக் கூடம் இருந்தாலும் போதும். அங்கு ஆற்றல் மிக்க இளைஞர்களை நாடெங்கும் சல்லடை போட்டுத் தேடிக் கண்டுபிடித்து அழைத்து வர வேண்டும். அகில உலக நிபுணர்களைத் தருவித்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அவர்களுக்குத் தேவையான உபகரணங்களையும் போஷாக்கான உணவையும் கிடைக்கச் செய்ய வேண்டும். விளையாட்டுத் தவிர இதர பாடங்களும் அவர்களுக்குப் போதிக்க வேண்டும். பொது அறிவை வளர்க்க வேண்டும். செய்திருக்கிறோமா? இல்லையென்றால் யார் தவறு? ஸியோலிலிருந்து வெறும் கையுடன் இந்திய அணி திரும்புகிறது. விளையாட்டுத் துறை அமைச்சர் பொறுப்பேற்று ராஜினாமா செய்வாரா? செய்தாலும் பிரதமர் அதை விளையாட்டாகக் கருதாமல் ஏற்பாரா?

ஒலிம்பிக் மனப்பான்மை நமது அரசியலிலும் ஆழ வேரூன்றினாலன்றி நாட்டுக்கு விமோசனமில்லை.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



வீட்டு வசதி சாதனங்கள் பலவற்றைத் தயாரிக்கும் "நேஷனல்" என்ற ஜப்பானியப் பெயர் இன்று உலகப் பிரசித்தம். 'நேஷனல்' டூ இன் ஒன், கால்குலேட்டர், வீடியோ காமெரா, டெக் முதலியன பற்றி அறியாதார் யார்? அதன் அதிபர் கோனோசுகே மட்ஷிதா தொழில்துறையில் தமது ஆரம்ப கால வரலாற்றில் ஒரு நிகழ்ச்சியை இங்கு விவரிக்கிறார்:

"என்னால் முடியுமென்று எனக்குத் தெரியும்"

அறுபது வருடங்களுக்கு முன்:

எனக்கு அப்போது சுமார் முப்பது வயது இருக்கும். சைக்கிள்களுக்கு, பாட்டரியால் இயங்கும் சதுர வடிவ விளக்கு ஒன்றைக் கண்டுபிடித்து, 'நேஷனல்' என்று அதற்குப் பெயரும் சூட்டிவிட்டேன். நாடு முழுக்க, வீட்டுக்கு வீடு அது தேவைப்படும் என்ற கருத்தில் அந்தப் பெயரை வைத்தேன்.

இந்த சைக்கிள் – விளக்கை எப்படிப் பிரபலப்படுத்துவது என்று மூளையைக் குடைந்து கொண்டு யோசித்தேன். பிறகு பத்தாயிரம் விளக்குகளை இலவசமாக, மொத்த – சில்லறை வியாபாரிகளுக்கு எல்லாம் விநியோகிப்பது என்று தீர்மானித்தேன். வியாபாரத்துறையில் இப்படிச் செய்வது என்பது பெரிய சூதாட்டம் மாதிரிதான். வந்தால் வந்தது; போனால் போயிற்று! இருந்தாலும் துணிந்தேன். நேரே டோக்கியோவுக்குப் போய், ஷசோ ஒகாடாவைச் சந்தித்து, பத்தாயிரம் செட் பாட்டரி செல்களை இலவசமாகத் தர முடியுமா என்று கேட்டேன்! ஒகாடா, ஜப்பானிய பாட்டரி செல் வியாபாரத்தில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தார்.

என்னுடைய கோரிக்கையைக் கேட்டதும் அவர் அப்படியே ஆடிப் போய்விட்டார். என்னைப் போலவே இந்த விளக்கு விற்பனையில் அவருக்கும் ஆர்வம் இருந்தாலும், இது மாதிரி ஒரு வியாபார முறை அவர் கேள்விப்படாதது; கையாளாதது. இந்த அதிரடி யோசனை ஒகாடாவைப் பேச்சு மூச்சில்லாமல் செய்துவிட்டது!

நான் தொடர்ந்து கூறினேன்: "எனக்கே தெரியும் – என் கோரிக்கை ரொம்ப விசித்திரமானது. ஆனால் என் தயாரிப்பு, சக்கைப் போடு போடும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். எப்படியும் இதைச் செய்து பார்த்துவிடத் தீர்மானித்துவிட்டேன். பத்தாயிரம் செட் பாட்டரி செல்களை உங்களிடம் இலவசமாகக் கேட்கும் அளவுக்கு நான் முன் யோசனை இல்லாதவன் அல்ல. நிச்சயமாக இது பலன் அளிக்கும். இப்போது என்ன, ஏப்ரல் மாதமா? இந்த வருடக் கடைசிக்குள் என் சைக்கிள் விளக்குகள் விற்பனை மூலம் உங்களுடைய இரண்டு லட்சம் பாட்டரிகளையும் விற்றுவிடுவேன் என்று உறுதி கூறுகிறேன். நான் இதில் வெற்றி பெற்றால் பத்தாயிரம் பாட்டரி செல் செட்களை இலவசமாகக் கொடுங்கள். இரண்டு லட்சத்தில் ஒரு பாட்டரி நான் குறைவாக விற்றாலும், நீங்கள் ஒரு பாட்டரி கூட இலவசமாகத் தர வேண்டியதில்லை. என்னால் முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் பத்தாயிரம் பாட்டரி செல் செட்களை இலவசமாகக் கொடுக்கிற பட்சத்தில், இப்போதே கொடுத்து விடுங்கள். அப்போதுதான் இலவசமாக விளக்குகளை என்னால் விநியோகிக்க முடியும். என்ன சொல்லுகிறீர்கள்?"

என் ஆர்வம் உண்மையானதாக இருந்ததால் ஒகாடா ஒப்புக் கொண்டார்.

ஏற்கெனவே தீர்மானித்தபடி, தயாரிப்பிலும் விற்பனையிலும் தீவிரமாக இறங்கினேன். வருடக் கடைசியில் பார்த்தால்! 4,70,000 பாட்டரிகள் விற்பனையாகியிருந்தன. நான் ஒகாடாவிடம் சொன்ன எண்ணிக்கையையும் விட இரண்டு மடங்குக்கும் மேலே!

ஜனவரி மாதம் இரண்டாம் தேதி —

டோக்கியோவிலிருந்து புறப்பட்டு, ஒகாசாவிலிருக்கும் என் வீட்டுக்கு நேரில் வந்தார் ஒகாடா. புது வருட வாழ்த்துச் சொன்னார். சைக்கிள் விளக்குக்காக என்னைப் பாராட்டினார். பத்தாயிரம் பாட்டரிகளுக்குண்டான தொகையை போனஸாக என் கையில் வைத்தார்.

ஒகாடாவின் பாராட்டுதல்களும், அவர் கண்களில் தெரிந்த பரவசமும் எனக்குப் பணத்தைவிடப் பத்து மடங்கு மகிழ்ச்சி அளித்தன.

ஆதாரம்: இன்டர்செக்ட்


தகவல்: சித்தார்த்.



ADWAVE/NCC/3621

நீங்கள் உபயோகிக்கும் கொசுவிரட்டி உங்களுக்கு எரிச்சலூட்டுகிறதா?





நீங்கள் உபயோகிக்கும் கொசுவிரட்டியின் பாதிப்பை நினைத்துப் பாருங்கள்.

கொசுவர்த்திச் சுருள்கள் அறை முழுதும் புகை கிளப்பி, தொண்டையிலும், கண்களிலும் எரிச்சலூட்டுகின்றன.

க்ரீம்களோ, பிசுபிசுப்பாக தோலில் ஒட்டிக்கொண்டு, துணிகளை கறைபடுத்தும். மேலும் தாங்க முடியாத நெடி வேறு!

இத் தொல்லைகளையெல்லாம் விரட்ட வருகிறது மைலால் கொசு விரட்டி.



மைலால்—மேனிமேல் இருப்பதை உணரமாட்டீர்கள். நெடியேதுமில்லை.

அது தடவியதே தெரியாது! ஆம், மைலால் நிறமற்றது. மணமற்றது. பிசுபிசுப்பே இல்லாதது.

பயன்படுத்த எளிது

சில துளிகள் மைலால் மேனியிலே லேசாக தடவினால் போதும், கொசுக்களிலிருந்து கண்ணுக்கு தெரியாமல் பாதுகாக்கும்.

மைலால்

திரவ வடிவ கொசுவிரட்டி.

கொசுக்களை விரட்டும். உங்களை அல்ல.

HTA 2356

நூல் அரங்கம்:



நிம்மதியாக வாழ்வது எப்படி?

மனிதன் தன்னைத்தானே உள்நோக்கிப் பார்த்துத் தன்னைச் செப்பனிட்டுக் கொண்டு வாழ்க்கையை அனுபவிக்கவும், அனுபவித்தபடியே முன்னேறவும் முடியும் என்ற நம்பிக்கையுடன் எழுதப்பட்ட நூல் How to win Friends and Influence People. இதைத் தொடர்ந்து இதே பாணியில் ஏரான நூல்கள் எத்தனையோ மொழிகளில் எழுதப்பட்டு விட்டன. தமிழிலும் குறைவில்லை. இவற்றுள் சிவசங்கரி எழுதிய "சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப்படுத்துவது?" என்ற நூல் அண்மையில் ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் நினைவுப் பரிசாக ரூ. 20,000 பெற்றுள்ளது. இது எளிய தமிழில், எளிய சம்பவங்கள் மூலம், எளிய மக்களுக்கு வாழவும் முன்னேறவும் வழிகாட்டுகிறது. புத்தகத்திலிருந்து ஒரு பகுதி:

வாழ்க்கையின் அர்த்தம் என்ன?

உயிர் வாழ்தல்.

எப்படி உயிர் வாழ்தல் அவசியம்?

நிம்மதியோடு....

சரி, இந்த நிம்மதியை அடைவது எப்படி?

நம்மைச் சுற்றி இருக்கும் எல்லா ஜீவ ராசிகளுடன் சரியான உறவை உண்டாக்கிக் கொள்வதன் மூலம்...

இது எப்படி சாத்தியம்?

அது நாயோ, பூனையோ, மனிதரோ, யாராக இருப்பினும் முழுமையான தொடர்பு கொள்வதன் மூலம் சரியான உறவை ஸ்தாபித்து! எரிச்சல், சண்டை, கோபதாபங்கள், பொறாமை ஆகியவற்றைத் தவிர்த்து விட்டால் நிம்மதியாக வாழ்வது சாத்தியம்தானே?

நிம்மதி, நிம்மதி என்கிறீர்களே, சந்தோஷமாக வாழ வேண்டாமா என்று குறுக்குக் கேள்வி எழலாம் — நியாயமான கேள்வி. பத்து லட்சம் லாட்டரியில் பரிசு விழுந்தவர் சந்தோஷமாக இருப்பார்; ஆனால் அவர் நிம்மதியாகவும் இருக்கிறார் என்று கூற இயலுமா? சந்தோஷத்துக்குள் நிம்மதி அடங்குவதில்லை. இது உறுதி. ஆனால் எப்போது நிம்மதி ஒருவரை வியாபிக்கிறதோ, கண்டிப்பாய் அவருள் திருப்தி, சந்தோஷம் ஆகிய உணர்வுகளும் நிறைந்தே இருக்கும்.

மாடிப்படியின் மேல்படியாக நிம்மதி இருக்கிறதாக வைத்துக் கொண்டால், அதை நோக்கிச் செல்ல, காலெடுத்து வைக்க வேண்டிய முதல் படி — நிச்சயம் அடுத்தவருடன் சரியாகத் தொடர்பு கொள்ளுவதுதான்.

அன்றாட வாழ்க்கையில், நம்மைச் சுற்றி இருப்பவர்களுடன் பக்குவமாக உறவுகளை அமைத்துக் கொள்ள முயற்சி செய்யாததே, நம்முடைய பல பிரச்னைகளுக்கு அஸ்திவாரமாகிறது என்கிற உண்மையை நம்மில் எத்தனை பேர் உணர்ந்திருக்கிறோம்?

சரியான தொடர்பு என்பதைப் பற்றிப் பேசுகையில் பிரபலமான ஒரு விளையாட்டு என் நினைவுக்கு வருகிறது.

பதினைந்து அல்லது இருபது பேர் வட்டமாய் உட்கார்ந்து கொள்ள வேண்டும். முதல் நபர் ஒரு காகிதத்தில் நாலு வரியில் ஒரு சேதியை எழுதி வைத்து விட்டு, பிறகு அதையே அடுத்த நபரின் காதில் சொல்ல வேண்டும். கேட்டுக் கொண்ட விஷயத்தை இரண்டாமவர், மூன்றாமவரின் காதில் சொல்ல, இப்படி விவரம் கடைசி ஆளிடம் வர வேண்டும். அதை அவர் உரக்கச் சொன்னால் — நம்ப மாட்டீர்கள் — சத்தியமாய் முதல் நபர் எழுதி வைத்திருக்கும் சமாசாரத்துக்கும் இதற்கும் ஸ்னானப் பிராப்திகூட இருக்காது.

எதற்குமே கண், காது, மூக்கு வைத்துப் பேசுவதும், நமக்குப் பிடிக்காததைத் தவிர்ப்பதும் பலரிடம் இயல்பாக இருப்பதால், முருகன் — குமரன் ஆகியிருப்பான்; பிள்ளை, செக்ஸ் மாறிப் பெண்ணாகியிருப்பான்; பணக்காரன் ஏழையாகி நடுத் தெருவில் நின்று கொண்டிருப்பான்!

ஒரு தரம், 'ராமேஸ்வரத்தில் குருவி தங்காது' என்கிற பழமொழியைக் கேட்டு விட்டு, அர்த்தமில்லாமல் இருக்கும் இது, கண்டிப்பாய் மாறாட்டக் கேஸ்தான் என்பதை உணர முடிய, விடாமல் அதன் வேரைத் தேடினேன். எத்தனையோ பேரிடம் கேட்ட பிறகு ஒரு பெரியவர், 'ராம சரம் குறி தப்பாது' — என்று அதன் தாயைக் காட்டிக் கொடுத்தார்!

விளையாட்டாகச் சில காரியங்களைச் சிரித்துத் தள்ளி விடலாம் என்றாலும், விழிப்புணர்வு இல்லாமல் பல காரியங்களில் ஈடுபட்டு, அடுத்தவருடன் அரைகுறையாகத் தொடர்பு கொண்டு, நாமும் நிம்மதி இழந்து அவர்களையும் தொந்தரவு பண்ணிக் கொண்டே இருக்கிறோமே — இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டாமா?

பிரசுரம்: வானதி பதிப்பகம், சென்னை—17.
விலை ரூ. 22

செந்தூரப்பூவே!

சிவந்த விழிகள். அழுக்கு டிரஸ். ஜல தோஷக்குரல். இணைபிரியாத சால்வை. விஜய்காந்த் (ஓல்டு). ஆர்மி கேப்டனாக இருந்தவர் என்பதால் இந்த நிமிஷத்திலும் டிஷ்யூங், டிஷ்யூங்கிற்கு உடம்பு வளைந்து கொடுக்கும், தலையில் ஹெமரேஜ் பிராப்ளம் இருந்தாலும்!

ராம்கி சிவப்பு உடம்பு. வளைந்து எழும்பி (இவரும்) டிஷ்யூங், டஷ்யூங். காதலிக்கத் தோதான இளமை முகம்.

நிரோஷா. கண்களிலும், உதடுகளிலும் கவர்ச்சி இருக்கும்போது உயரம் ஒரு பொருட்டல்ல — காதலிப்பதற்கு. இந்தப் படத்தில் க்ளோஸ் அப்களில் நன்றாகவே அழவும் செய்திருக்கிறார். குட்.

மூடப்பட்ட ஆல்பத்தைத் திறந்து பார்ப்பது போல் ஸ்ரீப்ரியா. விஜய்காந்தின் மனைவியாக ஓ. கே. காதலியாகக் காட்டியிருக்க வேண்டாமோ?

மறந்தே விட்ட ஆல்பத்தைத் தூசு தட்டியது போல் விஜயலலிதா, வில்லி அம்மா. விழிகளில் கொடுமை கொப்புளிக்கிறது.

இப்படி சிறுகுறிப்புகள் வரைந்து கொண்டே போகலாம்.

இரு வெவ்வேறு கதைகளை ஜிப் போட்டுக் கோத்திருக்கிறார்கள் — அழகாக.

இளம் காதலர்கள் தப்பிக்க ரயிலடிக்கு ஓடிவந்து, கடைசி நிமிடத்தில் மனம் மாறி இறங்கிவிடும் ஆரம்ப ஸீனே களைகட்டுகிறது. காரணம் காமிரா, துடிப்பாக நகர்ந்து கொண்டேயிருக்கிறது — கடைசி வரை.

காதலர்களைச் சேர்த்து வைப்பதற்காக விஜய்காந்த் உழைக்கிறார். சரி, அதற்காகப் பெண் கேட்டுப் போகிற ஸீனில் கூடவா விறைப்பு தேவை?

சீரியஸாகக் கதை சொல்லிக் கொண்டே போகையில் இடை இடையே சில கோமாளித்தனமான காட்சிகள் எதற்காக? உதாரணத்திற்கு — புடைவை ஏலம் விடுவார்களாம். அந்தப் புடைவையின் பின்னே ஒளிந்து நாயகன் காவல் மீறி வீட்டுக்குள் நுழைவானாம்! படித்த, பொறுப்பான டாக்டர், இருக்கும் பிராக்டீஸை விட்டு விட்டுக் குறிப்பிட்ட நோயாளிக்காக, போலீஸின் உதவியைச் சரியாக நாடாமல் தனியே புறப்பட்டு வருவாராம். வந்த இடத்தில் நோயாளியின் லட்சியத்தில் தாமும் பங்கு கொள்வாராம்.

கடைசி சில நிமிடங்களை (ரீல்களை?) ரயிலுக்கென்று ஒதுக்கி விட்டார்கள். எத்தனை ஆங்கிள்கள்? எத்தனை வகைச் சண்டைகள்! சற்றே திகட்டிப் போனாலும் சமீபத்திய தமிழ்ப்படங்களில் இவ்வளவு நீளமான — அதே சமயம் நாற்காலி முனைக்குக் கொண்டு வருகிற — க்ளைமாக்ஸ் எடுக்கப்பட்டதில்லை.

பாடல்களுக்கு இனிய — சற்றே பழைய நெடி வீசும் இசை — மனோஜ்கியான்.

பிலிம் இன்ஸ்டிடியூட் மாணவர்கள் அடிக்கடி பழைய சினிமாக்களைப் பார்த்து மனம் கலைந்து விடாமல் புதிதான காட்சியமைப்புக்களுக்கும், கதையமைப்புக்கும் முயற்சி செய்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

— ஜெயமன்மதன்.



ஸ்ரீ தேவியின் பேரருளைப் பெற நவராத்திரியில்

	ஒன்பது பொருள்களைக் கொண்டு	ஒன்பதுவிதமா கோலங்கள் போட வேண்டும்.	சுமங்கலிகளுக்கும் கன்னி பெண்களுக்கும் நீராடக் கொடுக்க வேண்டும்.		சக்தியுள்ளவர்கள் பெண்களை வீட்டுக்கு அழைத்து நவரத்தினம் கொடுக்கலாம்.	வசதியற்றவர்கள் இவைகளைக் கொடுக்கலாம்.
நாள் 1	அரிசிமா	பொட்டு	பச்சிலை	எண்ணெய்	பொன்	சோழி
2	கோதுமைமா	சட்டம்	பூலாங்கிழங்கு	மஞ்சள்	வெள்ளி	குன்றிமணி
3	முத்து	மலர்	சண்பக மொட்டு	குங்குமம்	முத்து	தட்டைப் பவளம்
4	அட்சதை	படிக்கட்டு	கஸ்தூரி மஞ்சள்	பன்னீர்	பவளம்	கிளிஞ்சல்
5	கடலை	பறவையினம்	திரவியப்பட்டை	சந்தனம்	வைடூரியம்	செப்பு
6	பருப்பு	தேவிநாமம்	காசுக்கட்டி	வாசனைத் தைலம்	கோமேதகம்	பதுமை
7	மலர்	இட்டாணி	லாக்ஷாரஸம்	நலங்கு மஞ்சள்	புஷ்பராகம்	அம்மானை
8	காசு	பத்மம்	கஸ்தூரிகா பத்ரம்	மருதோன்றி	மரகதம்	பந்து
9	கற்பூரம்	ஆயுதம்	கோரோஜனம்	புஷ்பநீர்	வைரம்	கழற்சிக்காய்

இவைகளைச் செய்ய முடியாதவர்கள் கீழ்க்கண்ட எமது இனிப்பு கார வகைகளை வாங்கி விநியோகிக்கவும்.

இனிப்பு வகைகள் : மங்களூர் போளி, தேங்காய்ப் போளி, ரஸமலாய், ஸோன் பப்டி, கேக், மாலாடு, ரவா லாடு, பாம்பேகாஜா, இனிப்பு சோமாஸ், முந்திரி கத்திலி, கடலை உருண்டை, பொரிவிளங்காய் உருண்டை, தேங்காய் கோவா, கோதுமை ஹல்வா.


காரவகைகள் : தட்டை, தேன்குழல், கைமுறுக்கு, சீடை, ஸ்பெஷல் மிக்ஸர் நவரத்ன மிக்ஸர், உருளைக் கிழங்கு சிப்ஸ், வாழைக்காய் சிப்ஸ், வறுபயறு, ரிப்பன் பக்கோடா, விஜிடபிள் சமோசா, ரயில் கட்டிடம், சீப்புச் சீடை.

செய்ய வேண்டிய சில அனுஷ்டானங்கள்!

வீடு தேடி வரும் குமரிகளுக்கும், சுமங்கலிகளுக்கும், பக்தியுடன் தன் கையால் பொட்டு இடலாம்.	தினசரி காலை, மாலை கீழ்க்கண்ட ராகங்களில் ஸ்ரீ தேவி சம்பந்தமாக பாடலாம்.	கீழ்க்கண்ட வாத்தியப் பின்னணிகளுடன் பாடலாம்.	கீழ்க்கண்ட மலர்களைத் தொண்டு மாலை அணிவிக்கலாம்!	கீழ்க்கண்ட தழைகளைக் கட்டு மாலைகளாகக் கட்டி சார்த்தலாம்.	பெண் குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் இவ் விதமாகக் கொடுக்கலாம்.	பாலா என்னும் பருவச் சிறுமியின் மகிழ்ச்சிக்காக	கீழ்க்கண்ட பிரசாதங்களை விநியோகிக்கலாம்.
புனுகு	தோடி	மிருதங்கம்	மல்லிகை	வில்வம்	வாழை	கண்டல்	வெண்பொங்கல்
ஜவ்வாது	கல்யாணி	புல்லாங்குழல்	முல்லை	துளசி	மா	வறுவல்	புளியோதரை
கஸ்தூரி	காம்போதி	வீணை	சம்பங்கி	மரு	பலா	துவையல்	சர்க்கரைப் பொங்கல்
அரகஜா	பைரவி	கொட்டு வாத்தியம்	ஜாதி	கதிர்ப்பச்சை	கொய்யா	பொரியல்	கதம்பம்.
சந்தனம்	பந்துவராளி	ஜலதரங்கம்	பாரிஜாதம்	விபூதிப்பச்சை	மாதுளை	அப்பளம்	ததியோதனம்
குங்குமம்	நீலாம்பரி	பேரி	செம்பருத்தி	சந்தனஇலை	நாரத்தை	வடகம்	தேங்காய்சாதம்
சாந்து	பிலஹரி	படகம்	தாழம்பூ	தும்பைஇலை	பேரிச்சை	சூரணம்	எலுமிச்சம்பழம் சாதம்
ஸ்ரீசூர்ணம்	புன்னாக வராளி	கும்மி	ரோஜா	பன்னீர் இலை	திராட்சை	முறுக்கு	பாயஸான்னம்
மை	வஸந்தா	கோலாட்டம்	தாமரை	மருக் கொழுந்து	நாவல்	திரட்டுப் பால்	அக்கார அடிசில்

பொடி வகைகள் : கருவேப்பிலை பொடி, பருப்புப் பொடி, இட்லி பொடி, சாம்பார் பொடி, ரசப்பொடி, ஊறுகாய் மிளகாய் பொடி.

திருமண வைபவங்களுக்கு : சீர் முறுக்கு, சீர் அதிரசம், முள்ளுத் தேன்குழல் பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுபபால், அப்பம் முதலியன.



துப்பறியும்
சூர்யா - கிரண்
நவின் பிரதாப் முல்லிக்
மாளிகையில் சிறை வைக்கப்பட்ட கிரண் ஜன்னல் வழியே பார்த்தாள்.
நீச்சல் குளம்! தப்பிக்க இது உதவுமா? ஆபத்தான முயற்சியில் இறங்க வேண்டியதுதான்!
மறுநாள் காவலன் சாப்பாட்டுடன் வர......
அடைத்து கிடக்கிறேன். வியர்த்துக் கொட்டுகிறது. நீச்சல் குளத்தை நான் பயன்படுத்தலாமா?
அழகான பெண்! உன்னைக் குளிக்க வேண்டாம் என்பேனா?
அவன் சென்றதும் கிரண் ஆடைகளை மூட்டை கட்டி...
© INDIAN FEATURES SYNDICATE Bombay-400002
ஜன்னல் வழியே எறிந்தாள்....
பத்து நிமிஷம்தான் அனுமதி...! ம்... சீக்கிரம்!
கிரண் குளத்துக்குள் பாய்ந்தாள்.
(தொடரும்)
10

நாங்கள் ஒரு காலத்தில் சந்தனுவைக் கேலி செய்து வந்தோம். ஏனென்றால் அவன் கல்லூரியில் படிக்கும்போதே கலியாணம் செய்து கொண்டு விட்டான். அதுவும் பொம்மை மாதிரி ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணை. அதிகம் படிக்காத அந்தப் பதின்மூன்று – பதினான்கு வயதுப் பெண் முகம் முழுவதையும் முக்காட்டால் மறைத்துக் கொண்டு முன்னால் வந்து நின்ற போது சிரிப்பு வந்து விட்டது எனக்கு.

நான் இந்தச் செய்தியை நீலிமாவுக்குச் சொன்னேன். அவள் மூலம் மற்ற மாணவிகளுக்கும் பரவி அவர்கள் கைகொட்டிச் சிரித்தார்கள்.

சந்தனுவின் மனைவியுடன் நீலிமாவை ஒப்பிட்டுப் பார்த்த போது எனக்கு மிகவும் பெருமையாயிருந்தது. கல்லூரி முழுவதிலும் நீலிமாவுக்கு இணையான பெண் வேறொருத்தி இருந்தாளா என்பது சந்தேகந்தான். அவள் அப்படியொன்றும் அசாதாரண அழகி அல்ல. ஆனால் அவளிடம் ஏதோ ஒரு கவர்ச்சி இருந்தது. யாரும் அவளைக் கவனிக்காமலிருக்க முடியாது. அவளிடம் ஓர் அலாதியான நளினம் இருந்தது; முகத்தில் களை இருந்தது. அவள் முகத்தில் சுருக்கம் விழாமல் கண்களாலேயே சிரிக்கும் அழகு. அவளது குரலின் இனிமை இவற்றில் சொக்கிப் போய்க் கல்லூரி மாணவர்கள் அவளுடன் பேசும் வாய்ப்புக்காக ஏங்குவார்கள்.

இப்படிப்பட்ட நீலிமா என் நண்பி. எனக்குப் பெருமையாக இருக்காதா?

அன்றாட வழக்கப்படி அன்றும் வகுப்புக்கு 'கட்' அடித்து விட்டு நாங்கள் நகரத்தின் தெருக்களில் சுற்றிக் கொண்டிருந்தோம். நீலிமா சிரித்துக் கொண்டே கேட்டாள். ''ரசகுல்லாவோட பெண்டாட்டியைப் பார்த்து விட்டு வந்தீங்களா?''

சந்தனுவுக்கு நாங்கள் வைத்திருந்த கேலிப் பெயர் 'ரசகுல்லா.'

''ஆமா, பார்த்தேன்'' – நான் சொன்னேன்.

''எப்படியிருக்கா?''

''கறுப்பா, கழுக்குமொழுக்கென்று இருக்கா..... குலாப்ஜாமூன்தான்....''

நீலிமா சிரித்துக் கொண்டு சொன்னாள், ''நீங்களும் அவ மாதிரி ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணைக் கலியாணம் செஞ்சுக்கங்க. நல்லாச் சமைச்சுப் போடுவா. நீங்க காலேஜுக்குக் கிளம்பற போது உங்களுக்கு வெத்திலை மடிச்சுக் கொடுப்பா.....''

நீலிமா குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்...



இறுதித் தேர்வுக்கு ஒரு சில மாதங்களே இருந்தன. ஒருநாள் திடீரென்று சந்தனு என்னிடம் சொன்னான், ''படித்து டிகிரி வாங்க எனக்கு ரொம்ப ஆசை.... அந்த ஆசையில் மண்!''

''ஏன்?''

''நம்ப காலேஜிலே பெண்களும் படிக்கறாங்கன்னு கேட்டதிலேருந்து என் அம்மா என்னைப் படிச்சது போதுங்கறா. தவிர, நான் பெண்சாதியைக் கிராமத்திலேருந்து கூட்டிக்கிட்டு வரணும்னா, உடனே ஒரு வேலை தேடிக்கச் சொல்றா.... என்ன செய்யறது! படிப்பை நிறுத்திட்டு வேலை தேடப் போறேன்... உங்க பாடு தேவலைப்பா....!

இந்தச் செய்தியைக் கேட்டு ஏளனமாகச் சிரித்தாள் நீலிமா.

நாங்கள் எங்கள் காதலைப் பற்றி வெளிப்படையாகப் பேசிக் கொள்ளவில்லைதான். இருந்தாலும் நாங்கள் எதிர்காலத்திலும் இணைந்து வாழப் போகிறவர்கள் என்று உள்ளூர உறுதியாக நம்பினோம்.

என் கல்லூரிப் படிப்பு முடிந்தது. நீலிமாவைக் கேட்டேன், ''என்ன செய்வது?''

'''வேலை பாருங்க.''

நீலிமா படிப்பைத் தொடர்ந்தாள்.

எனக்கு ஒரு வேலை கிடைத்து விட்டது. இனி நீலிமாவிடம் கலியாணப் பேச்சை எடுக்கலாம் என்று நினைத்த அதே சமயத்தில் இன்னொரு பயமும் தோன்றியது, என் ஒருவனின் வருமானத்தை நம்பிக் குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொள்வது சரியா என்று.

அது எவ்வளவு அசட்டுத்தனமென்பது அன்று சந்தனுவை சந்தித்த போது புரிந்தது.....

நானும் நீலிமாவும் ஒரு சினிமா பார்த்து விட்டு வெளியே வந்து கொண்டிருந்தோம். நீலிமா என் கையை மெதுவாகக் கிள்ளி, ''அதோ பாருங்க, ரசகுல்லா'' என்று கிசுகிசுத்தாள்.

ஆம், சந்தனுதான். அவன் எங்களைப் பார்த்துச் சற்றுக் கூச்சத்துடன் சிரித்தான்.

''எப்படி இருக்கே சந்தனு?''

''அதை ஏன் கேக்கறே போ! ரொம்பத் திண்டாட்டமாயிருக்கு. நூறு ரூபாய்தான் சம்பளம். ரெண்டு குழந்தைகள். ஒரு குழந்தைக்கு மருந்து வாங்கப் போயிக்கிட்டிருக்கேன்.... உங்க பாடு ஜாலி.....!'' சந்தனு போய் விட்டான்.

நீலிமாவால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ''நான் ஒரு வேலை பார்த்துக்கிட்டுத்தான் கலியாணம் பண்ணிக்குவேன்....'' என்றாள்.

அவள் சொல்வது சரிதானே! இந்தக் காலத்தில் இன்பமாகக் குடும்பம் நடத்தப் பணம்தானே முக்கியம்? வெறும் அன்பு இருந்தால் போதுமா? பணமில்லா விட்டால் சம்சாரம் நரகந்தான்!

நீலிமா படிப்பை முடித்து விட்டு வேலைக்கு முயற்சி செய்தாள். அவளுக்கு ஒரு பள்ளியில் ஆசிரியை வேலை கிடைத்து விட்டது.

நாங்கள் திருமணம் செய்து கொண்டு ஒரு சிறிய ஃப்ளாட்டில் குடியேறினோம். குடித்தனம் நடத்த ஏற்பாடுகளில் உற்சாகமாக ஈடுபட்டாள் நீலிமா. சமையலுக்கும் எடுபிடி வேலைகளுக்கும் ஒரு பையனை அமர்த்தினாள். குக்கர் வாங்கி வந்தாள். ஏலக் கடைக்குப் போய் கட்டில், மேஜை, நாற்காலி வாங்கினாள். மெத்தை தைக்க ஆர்டர் கொடுத்தாள். ஜன்னல் திரைக்கான துணியைத் தேர்ந்தெடுத்தாள்.

ஒரு சில நாட்களில் அந்தச் சிறிய ஃப்ளாட் சுவர்க்கமாக மாறி விட்டது. பொழுது இன்பமாகக் கழியத் தொடங்கியது.....

நாட்கள் கழிந்தன.

ஒரு செய்திப் பத்திரிகை அலுவலகத்தில் செய்தித் துறையில் எனக்கு வேலை. இடையிடையே இரவு ஷிப்ட் உண்டு. அப்போது ரொம்பக் கஷ்டமாயிருக்கும்.

நீலிமா சில சமயம் சொல்லுவாள், ''இந்த வேலையை விட்டுடுங்க.''

''வேறே வேலை கிடைச்சால்தானே விடலாம்!''

ஆனால் அவ்வளவு சுலபமாக வேறு வேலை கிடைத்து விடுமா?

இந்த இடைஞ்சலிலும் நான் திடீரென்று ஒருநாள் சீக்கிரம் வீட்டுக்கு வந்து அவளை வியப்பிலாழ்த்துவதும் உண்டு.

அன்றொரு நாள் பௌர்ணமி. எனக்கு உடல்நிலை சரியில்லையென்று சொல்லி விட்டு இரவில் சீக்கிரமே வீடு திரும்பினேன். வீட்டுக்குள் நுழைந்ததுமே நீலிமாவிடம் சொன்னேன், ''வா, மொட்டை மாடிக்குப் போகலாம். இந்த நிலாவை வீணாக்க மனசில்லே எனக்கு.''

''ஐயையோ, இந்தப் பேப்பரையெல்லாம் யார் திருத்தறது? எல்லாத்தையும் நாளைக்குக் கொடுத்தாகணுமே!'' — நீலிமா படுக்கையின் மேல் விரித்துக் கிடந்த விடைத்தாள்களைக் காட்டினாள்.

நான் வேறு வழியின்றிப் படுக்கையில் படுத்துக் கொண்டு தூங்க முயற்சி செய்தேன். நள்ளிரவில் ஒரு தடவை நான் உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட போதும் நீலிமா இன்னும் விடைத்தாள்களைத் திருத்திக் கொண்டிருந்தாள்......!

வசதியாக வாழ்க்கை நடத்த இரண்டு பேர்களின் வருமானங்கூடப் போதாதென்று தோன்றத் தொடங்கவே நான் அவ்வப்போது கட்டுரைகள் எழுதத் தொடங்கினேன். நாலைந்து புத்தகங்கள், பத்திரிகைகளைப் படித்து விட்டு, 'இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை', 'சுதந்திரமும் மகாத்மாவும்' என்ற தலைப்புகளில்

ரமாபத சௌதுரி



''என்னோட ''சிறப்புச் சொற்பொழி' வைப் பற்றி, ஜனங்கள் என்ன பேசிக்கிறாங்க...?''

''மூணு மணி நேரம் பேசினார்... என்ன பேசினாருன்னு ஒண்ணுமே புரியலையென்னு, பேசிக்கிறாங்க...!''

''நல்லவேளை! எங்கே ஜனங்கள் புரிஞ்சுக்குவாங்களோன்னு நான் பயந்துக்கிட்டேயிருந்தேன் ...!''

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.

கட்டுரை எழுதுவது என்ன கஷ்டம்? அதன் மூலம் கொஞ்சம் பணம் கிடைத்தால் நல்லதுதானே!

அன்று அதிகாலையில் கட்டுரை எழுத உட்கார்ந்ததேன். நீலிமா என்னிடம் வந்து சொன்னாள், ''ரேணு அக்கா நம்மளை மதிய சாப்பிட வரச் சொல்லியிருக்கா. வாங்க. போகலாம்.''

''ஐயய்யோ, எனக்கு இன்னிக்கே இந்தக் கட்டுரையை முடிக்கணுமே!''

நீலிமாவுக்குக் கோபம் வந்து விட்டது. ''அதுக்காக அழைக்கிறவங்க வீட்டுக்குக் கூடப் போக வேண்டாமா?''

வேறுவழியின்றி எழுந்தேன்.

இம்மாதிரி நிகழ்ச்சிகளால் என் மனத்தில் நீலிமா மேல் எரிச்சலுணர்வு வளர்ந்து கொண்டிருந்தது.

வாழ்க்கை வசதிக்கு உபரி வருமானம் அவசியம் என்பதை நீலிமாவும் உணர்ந்திருந்தாள் என்பது சில நாட்களுக்குப் பின் புரிந்தது......

நாள் முழுதும் ஆபீஸில் மாடாக உழைத்து விட்டுக் களைத்துப் போய் வீடு திரும்பிய போது இரவு மணி ஏழரையாகி விட்டது. வீட்டுக்குள் நுழையும் போதே நீலிமாவின் குரல் கேட்டது.

சுமார் பன்னிரண்டு வயதுள்ள ஒரு பெண்ணுக்குப் பாடங் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தாள் நீலிமா.

நான் பக்கத்து அறையில் போய் உட்கார்ந்து கொண்டேன். மனம் கசந்தது.

நீலிமாவின் குரல் காற்றில் மிதந்து வந்தது. ''அசோகன் கலிங்கப் போரில் வெற்றி பெற்ற போது, ஆயிரக்கணக்கான பிணங்களைப் பார்த்துப் பச்சாதாபங் கொண்டான்......''

ஒன்பது மணிக்குப் பின் மாணவிக்கு விடையளித்து விட்டு அறைக்குள் நுழைந்த நீலிமா சொன்னாள், ''முன்னாலே உங்ககிட்டே சொல்லல்லே. டியூஷன் சொல்லிக் கொடுக்க ஆரம்பிச்சிருக்கேன். தினம் சாயங்காலம் கொஞ்ச நேரம்....''

நீலிமாவின் மேல் எரிச்சல் வந்தது எனக்கு. என் அதிருஷ்டத்தை நொந்து கொண்டேன்.

ஆம், இப்போதெல்லாம் அதிருஷ்டத்தை நம்பத் தொடங்கி விட்டேன் நான்.

என் முகத்திலிருந்தே என் உணர்வுகளைப் புரிந்து கொண்டாள் நீலிமா. அவள் தன் மிருதுவான விரல்களால் என் தலைமுடியை அளைந்தவாறு என்னைச் சமாதானப்படுத்தினாள், ''கோவமா உங்களுக்கு?..... ரேணு அக்கா, கமலா அக்கா எல்லாருந்தான் டியூஷன் வச்சுக்கிட்டிருக்காங்க..... தவிர, நீங்க எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை பார்க்கறீங்க.... எனக்கு ஒரு சிரமமும் இல்லே......''

ஒரு நிமிடத்தில் என் எரிச்சல் தணிந்து விட்டது. நீலிமா பாவம், எனக்காகத்தான் இவ்வளவு கஷ்டப்பட்டு....

ஆனால், நீலிமாவின் நிலையை உணர்ந்தும் ஒருநாள் எனக்கு அவள் மேல் இவ்வளவு கோபம் வரும் என்று நானே கொஞ்சங் கூட எதிர்பார்க்கவில்லை......

ஒருநாள் பகல் ஷிப்ட். வேலை முடிந்ததும் ஒரு திரைப்படக் காட்சிக்கு இரண்டு டிக்கட்டுகள் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தேன். நீலிமாவுக்கு சர்ப்ரைஸாக இருக்கட்டும்! அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் அவளுக்கு டியூஷன் வேலை இல்லை.

வந்ததும் சொன்னேன், ''வா, சினிமா போகலாம்.''

நீலிமா திடுக்கிட்டாள், ''என்கிட்டே சொல்லாமலே டிக்கட் வாங்கிக்கிட்டு வந்துட்டீங்களா?''

''அதனாலென்ன? இன்னிக்குத்தான் டியூஷன் இல்லையே!''

சோகமாகச் சிரித்தாள் அவள். ''மாணவி படிக்க வர மாட்டாள். ஆனால் நானே மாணவிதான். அடுத்த வாரம் எனக்கு டிபார்ட்மென்ட்டல் பரீட்சை எழுதணுமே! அதிலே தேறினால் சம்பளம் உயரும்....''

''பரீட்சை அடுத்த வாரந்தானே......!''

''நல்லாயிருக்கே நீங்க சொல்றது.....? எனக்கு எல்லாம் மறந்து போச்சு. பாடமெல்லாம் மறுபடி படிக்கணும்......!''

''சம்பளம் உயரலேன்னாப் போறது...'' என்று சொன்னேன்.

நீலிமா கேட்கவில்லை. ''இது வெறும் பணம் சம்பந்தப்பட்ட விஷயமில்லே. ஸ்கூல்லே எல்லா டீச்சரும் பரீட்சை எழுதப் போறாங்க. நான் மட்டும் எழுதலேன்னா, அல்லது எழுதி ஃபெயிலானேன்னா என் பிரஸ்டீஜ் என்ன ஆறது?''

எரிச்சலடைந்து வீட்டை விட்டு வெளியேறினேன். பணம், பிரஸ்டீஜ், ஸ்கூல், டியூஷன், ப ரீ ட் சை! நீலிமா வராவிட்டால் போகட்டும். யாராவது தெரிந்தவர் கிடைத்தால் அவரோடு சினிமாவுக்குப்

உங்கள் நேரத்தையும், பணத்தையும் வீணாக செலவிட்டு, சிரமப்பட்டு, ஒரு மரக் கப்போர்ட் வாங்கி, அது ஈரம்பட்டு, கறையான் பிடித்து, விலைமதிப்பான உங்கள் பொருட்கள் நாசம் அடைவதை விட...



வாங்குங்கள், ஒரு கோத்ரெஜ் ஸ்டோர்வெல்

தோற்றப் பொலிவு, இடவசதி, கவர்ச்சி மற்றும் நல்ல மெருகு கொண்ட ஒரு கப்போர்ட், கோத்ரெஜ் ஸ்டோர்வெல்.

இது முதன்மைத் தர ஸ்டீலினால், நூதனத் தயாரிப்பு முறையில் உருவானது. இயந்திர முறை உருவாக்கம் என்பதால், பூச்சி பொட்டுகளில் இருந்து நிச்சயமான பாதுகாப்பு. பல்வேறு கட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ள தேய்மான-எதிர்ப்புத்திறன் மற்றும் ஒவன்-பேக் முறையில் பூசப்பட்டுள்ள, அல்கைட் அமீனோ வண்ணப்பூச்சு காரணமாக, கீறல் விழாத புதுமை மெருகுடன் ஆண்டுக் கணக்கில் திகழ்கிறது. தவிரவும் வழக்கமான மரம் அல்லது ஸ்டீல் கப்போர்ட்களில் இல்லாத, விசேஷ மும்முனைப் பூட்டமைப்புடன் கூடிய 6 லீவர் கோத்ரெஜ் பூட்டும் இதில் உண்டு.

கோத்ரெஜ் ஸ்டோர்வெல், தேர்ந்தெடுக்க வசதியாக, பலவிதங்களில் கிடைக்கிறது. பல்வேறு மாடல்கள், வண்ணங்கள் மற்றும் சிறப்பு அம்சங்களோடு — உதாரணமாக அட்ஜஸ்ட் செய்யக்கூடிய ஷெல்புகள், கண்ணாடிகள் மற்றும் உறுதியான லாக்கர்கள், மாதிரிக்குச் சில. தேவைக்குத் தகுந்தபடி டிசைன் செய்து, ஒரு கப்போர்ட் உண்டாக்குவதில், பராமரிப்பதில் உள்ள சிரமம் உங்களுக்கு ஏற்படாமல் தடுக்கிறது.

கோத்ரெஜ் ஸ்டோர்வெல், நீங்கள் கொடுக்கும் பணத்திற்குக் கூடுதல் மதிப்பைத் தருகிறது.

இப்போது

ஹார்லிக்ஸ் கூடுதல் கால்ஷியத்துடன்




"அப்படி என்ருல் ஒவ்வொருவருக்கும் கூடுதல் ஆரோக்கியம்"

ஹார்லிக்ஸ் இப்போது கூடுதல் கால்ஷியத்துடன் செறிவூட்டப் பட்டிருக்கிறது—வளரும் குழந்தைகளின் வலுவான பற்களுக்கும், ஆரோக்யமான எலும்புகளுக்கும், குடும்பத்தினர் அனைவரின் ஆரோக்யத்திற்கும் ஹார்லிக்ஸ் மிகவும் முக்கியமானது. கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு மிகவும் தேவையான கூடுதல் கால்ஷியம் கிடைப்பதிலும் இது உதவுகிறது.

ஹார்லிக்ஸ் முழுவதும் இயற்கை ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது—புரோட்டீன், விட்டமின்கள், மினரல்கள், மற்றும் கார்போஹைட்ரேட்டுகள்—இவை சக்தியும், ஊட்டமும் அளிக்கின்றன. இப்போது கூடுதல் கால்ஷியத்திஞல், கூடுதல் ஆரோக்யம்.

சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்



HTA 6038 TAM

போகத் தீர்மானித்தேன்.

தற்செயலாக ஒருவன் எதிரில் வந்தான். கையில் குடை, காலில் பழைய கான்வாஸ் செருப்பு, சற்றே கூனல்.

முதலில் அடையாளம் தெரியவில்லை. உற்றுப் பார்த்த பின்தான் புரிந்தது.

சந்தனுதான்!

அவன் சிரித்தான். "என்ன சௌக்கியமா? கலியாணம் பண்ணிக்கிட்டியா?"

"ஆமா. நீலிமாவைத்தான்.... சரிவா, சினிமாவுக்குப் போகலாம்."

சந்தனுக்கு ரொம்ப சந்தோஷம். சினிமா பார்க்கும் வாய்ப்பு அவனுக்கு அதிகம் கிடைப்பதில்லை என்பது புரிந்தது.

சினிமா பார்த்துக் கொண்டிருக்கும் போது சந்தனு நடுநடுவே சொன்னான், "படம் ரொம்ப நல்லாயிருக்கு. என் மிஸஸையும் கூட்டிக்கிட்டு வந்திருக்கலாம். நான் மட்டும் தனியே போனேன்னு என்னைக் கோவிச்சுக்கப் போறா....."

காட்சி முடிந்ததும் வெளியே வந்தோம். திடீரென்று சந்தனு சொன்னான், "என் வீட்டுக்கு வந்து டீ சாப்பிட்டுட்டுப் போகலாமே!"

போனேன்.

ஒரு சிறிய அறை, குறுகலான வராந்தா. ரொம்பப் பழைய வீடு. பல இடங்களில் காரை பெயர்ந்த சுவர். அறை கொள்ளாமல் சாமான்கள் — கட்டில், தகரப் பெட்டிகள், ஒரு மோடா.... துணியில் வேலைப்பாடு செய்த கிளியின் படம், காளி படம் ஒன்று, மூன்று காலண்டர்கள் சுவரில் தொங்கின.

இத்தனை அடைசலில் மூச்சுத் திணறுவது இயற்கை. ஆனால் ஏனோ எனக்கு அங்கே உட்காரப் பிடித்துத்தானிருந்தது.

இளைத்து மெலிந்த ஒரு பெண் படுக்கையில் தூங்கிக் கொண்டிருந்தாள். சந்தனு ஒரு கைக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வராந்தாவில் சமையல் செய்து கொண்டிருந்த தன் மனைவியிடம் போய் ஏதோ சொன்னான்.

பிறகு அவன் மறுபடி அறைக்குள் வந்து ஒரு பனையோலை விசிறியை எடுத்துக் கொண்டு வராந்தாவுக்குப் போனான். கதவு வழியே கவனித்தேன், சந்தனு அடுப்புக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு விசிறிக் கொண்டிருக்கிறான்.

சற்று நேரத்தில் சந்தனுவின் மனைவி ஒரு தட்டில் சில பழங்களை எடுத்துக் கொண்டு வந்தாள்.....

அவள் முன்னைவிட இன்னுங் கறுத்துப் போயிருந்தாள். முக்காடு இப்போது முகத்தை முழுதும் மறைக்கவில்லை. ஆனால் அவளது புன்சிரிப்பில் முன்பு போல் தான் நாணம் கலந்திருந்தது.

"இந்தப் பழமெல்லாம் எதுக்கு? வெறும் டீ மட்டும் கொடுங்க, போதும்."

"அதெல்லாமில்லே, எங்க வீட்டுக்கு வந்திருக்கீங்க. சாப்பிடத்தான் வேணும்."

சாப்பிட்டேன். சாப்பிட மகிழ்ச்சியாகத் தானிருந்தது.

சந்தனுவின் மனைவி தன் வேலைக்கு நடுவில் அவ்வப்போது வந்து இரண்டு வார்த்தை பேசினாள்.

அவள் படுத்திருந்த பெண்ணின் உடலைத் தொட்டுப் பார்த்து விட்டு "இப்போ ஜுரம் இல்லை" என்றாள்.

சந்தனு சொன்னான், "என் பெண்ணுக்கு நல்ல உடம்பு இல்லே. ஒண்ணு மாத்தி ஒண்ணு வியாதி........"

"இன்னிக்கு தட்சிணேஸ்வர் போறதாயிருந்தோம். இவளுக்கு உடம்பு சரியில்லாததாலே போக முடியல்லே" என்றாள் மிஸஸ் சந்தனு.

"தட்சிணேஸ்வருக்கா? ஏன்?" நான் கேட்டேன்.

புன்சிரிப்புடன் பதிலளித்தாள் அவள். "சும்மா பொழுதுபோக்காத்தான்.... நாங்க ஒவ்வொருஞாயித்துக்கிழமையும்ஒவ்வொரு இடத்துக்குப் போவோம்....."

"பாக்கி நாட்கள் என்ன செய்வீங்க?" நான் கேட்டேன்.

சந்தனு தன் மனைவியைப் பார்த்துச் சிரித்து விட்டுச் சொன்னான், "இவ வந்தப்பறம் மத்த நாட்களிலே நேரம் எங்கே இருக்கு? காலையிலே மார்க்கெட், பிறகு ஷேவ், பிறகு ஆபீஸ். சாயங்காலம் ஆபீசிலேருந்து கொஞ்சம் தாமதமா வந்தால் இவ கதவைத் திறக்க மாட்டா..... ஆகையாலே ஆபீஸ் முடிஞ்சதும் நேரா வீட்டுக்கு வந்து குழந்தைகளைப் பார்த்துப்பேன், இவ சமையலைக் கவனிப்பா.... "இவளுக்கு ஒத்தாசையா அடுப்பு விசிறுவேன், கரி உடைச்சுக் கொடுப்பேன்.... உங்க பாடு தேவலைப்பா. ரெண்டு பேரும் வேலை பார்க்கறீங்க, பணத்தட்டு இல்லே. ஜாலியா இருக்கீங்க...."

வீடு திரும்பும் போது எனக்குச் சந்தனு மேல் பொறாமையாயிருந்தது.

வீட்டில் நீலிமா ஏதோ நெட்டுருப் பண்ணிக் கொண்டிருந்தாள்... பரீட்சை, சம்பள உயர்வு, பிரஸ்டீஜ்......

நான் சொன்னேன், "இன்னிக்கு சந்தனுவோட வீட்டுக்குப் போயிருந்தேன். பணக் கஷ்டமிருந்தாலும்....."

"ரசகுல்லா வீட்டுக்குப் போனீங்களா....? குலாப்ஜாமுனைப் பார்த்தீங்களா?" சிரித்துக் கொண்டே கேட்டாள் நீலிமா.

"ஆமா.... ரெண்டு குழந்தைகள். சிரம ஜீவனம்....."

"இப்படிப்பட்டவங்க ஏன்தான் கலியாணம் பண்ணிக்கிட்டுக் குடித்தனம் செய்யறாங்களோ?" என்றாள் நீலிமா. ஆனால் அவளும் குலாப்ஜாமுன் மேல் பொறாமைப் படுகிறாள் என்று எனக்குத் தோன்றியது.

"நீங்க தேவலைப்பா.... ஜாலியா இருக்கீங்க...." என்று சந்தனு கூறியது என் நினைவுக்கு வந்தது.

அதுதான் எனக்கு ஆறுதலாயிருந்தது. சந்தனுவும் எங்களைப் பார்த்துப் பொறாமைப்படுகிறான்.......!

தமிழாக்கம்:

சு. கிருஷ்ணமூர்த்தி.

Colour Photo: Yoga.



GOKULAM



— the favourite Children's monthly

96 Pages Price : Rs. 3.00

October Highlights :

* Jason and the Golden Fleece.
* Dussera Special : Toyland Tales.
* The Story of the Gentle Giant.
* Chanchal, the dancing deer.
* The childhood days of M.S. Subbulakshmi.

Annual Subscription : Rs. 36.00 (India)
Overseas : Rs. 270.00 (Air Mail)
: Rs. 120.00 (Sea Mail)

For agency and subscription contact :
GOKULAM, Guindy, Madras - 600 032.
Telephone : 434157, 434190.

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 40
ஆனைமங்கலம்

நம் கதாநாயகிகளில் ஒருத்தியான வானதி அடிக்கடி நினைவு இழக்கும் வழக்கம் வைத்துக் கொண்டிருக்கிறாள் அல்லவா? இந்த ஒரு தடவை மட்டும் நேயர்கள் அதைப் பொறுக்கும்படி வேண்டுகிறோம். ஏனெனில், அவளுடைய நோய் நீங்கும் காலம் நெருங்கிவிட்டது.

வானதிக்கு நினைவு சிறிது வந்த போது முதலில் அவள் ஊசலாடுவது போலத் தோன்றியது. பின்னர் அவள் தான் வானவெளியில் பிரயாணம் செய்து கொண்டிருப்பதாக எண்ணினாள். ''ரிம் ரிம்'' ''ஜிம் ஜிம்'' என்று மழைத் தூறலின் சப்தம் கேட்டது. குளிர்ந்த காற்று குப் குப் என்று உடம்பின் மீது வீசிற்று. அதனால் தேகம் சிலிர்த்தது. சரி, சரி, மேக மண்டலங்களின் வழியாக வானுலகிற்குப் போய்க் கொண்டிருக்கிறோம் என்று எண்ணினாள். சுற்றிலும் இருள் சூழ்ந்திருந்தது. இடையிடையே மின்னல் வெளிச்சம் பளிச்சிட்டு மறைந்தது.

முதன் மந்திரி கடைசியாகக் கஜேந்திர மோட்சத்தைப் பற்றிக் கூறியதும், யானை அதன் துதிக்கையினால் தன்னைச் சுற்றி வளைத்துத் தூக்கியதும் இலேசாக நினைவு வந்தன. முதன் மந்திரி அநிருத்தர் கூறியபடியே நடந்துவிட்டது. மண்ணுலகில் என் ஆயுள் முடிந்து இப்போது மோட்சத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். மோட்ச உலகில் தேவர்களையும் தேவிகளையும் பார்ப்பேன்.

ஆனால் எல்லாத் தேவர்களிலும் என் மனத்துக்குகந்த தெய்வமாகிய அவரை அங்கே நான் பார்க்க முடியாது. மனத்துக்கு இன்பமில்லாத அத்தகைய மோட்ச உலகத்துக்குப் போவதில் என்ன பயன்?

'அடேடே! இது என்ன ஊசலாட்டம்! உடம்பை இப்படித் தூக்கித் தூக்கிப் போடுகிறதே! ஆனால் தலைவைத்திருக்கும் இடம் மெத்தென்று சுகமாயிருக்கிறது. தாயின் மடியைப் போல் இருக்கிறது. ஏன்? தாயைக் காட்டிலும் என்னிடம் பிரியம் வாய்ந்த இளைய பிராட்டியின் மடியைப் போலவும் இருக்கிறது!... ஆ! குந்தவைதேவி இப்போது பழையாறையில் என்ன செய்து கொண்டிருக்கிறாரோ? என்னைப் பற்றிய செய்தி அவருக்கு இதற்குள் எட்டியிருக்குமா?

மோட்ச உலகத்துக்கு வானவெளியில் மேக மண்டலங்களின் வழியாகப்

அமரர் கல்கி

பிரயாணம் செய்வது சரிதான். ஆனால் என்ன வாகனத்தில் பிரயாணம் செய்கிறேன்? சொர்க்க லோகத்துப் புஷ்பக விமானமா இது? அல்லது தேவேந்திரனுடைய ஐராவதம் என்ற யானையா? அப்பா! யானை என்றாலே சிறிது பயமாகத்தானிருக்கிறது! யானையும் அதன் துவண்டு வளையும் துதிக்கையும்! — அப்படித் துவளும் துதிக்கையில்தான் எவ்வளவு பலம் அதற்கு? — போனது போயிற்று! இனி அதைப் பற்றிப் பயம் என்ன? கவலை என்ன?

ஆனால் தலை வைத்திருக்கும் இடம் இவ்வளவு பட்டுப்போல் மிருதுவாயிருக்கும் காரணம் யாது? சுற்றிலும் இருளாயிருப்பதால் ஒன்றும் தெரியவில்லை. கையினால் துழாவிப் பார்க்கலாம். உண்மையில், பட்டுத்திரைச் சீலைமாதிரிதான் தோன்றுகிறது. கொஞ்சம் ஈரமாயும் இருக்கிறது.

ஆகா! இது என்ன? என் கன்னங்களை யார் தொடுகிறது? மல்லிகைப் பூவைப் போன்ற மிருதுவான கரம் அல்லவா தொடுகிறது?''

''வானதி! வானதி!''

இளைய பிராட்டி குந்தவை தேவியின் குரல் அல்லவா இது? என்ன விந்தை! இப்படியும் இருக்க முடியுமா? அக்காவும் ஒருவேளை என்னுடன் சொர்க்கத்துக்கு வருகிறார்களா?

''வானதி! வானதி!''

''அக்கா! நீங்கள்தானா?''

''நான்தான்! வேறு யார்?''

''நீங்கள் கூட என்னுடன் மோட்ச உலகத்துக்கு வருகிறீர்களா?''

''மோட்ச உலகத்துக்குப் போக அதற்குள் உனக்கு என்னடி அவசரம்? இந்த உலகம் அதற்குள்ளே வெறுத்துப் போய் விட்டதா?''

''பின்னே, நாம் எங்கே போகிறோம்?''

''என்னடி? அதுகூட மறந்து போய் விட்டதா? ஆனைமங்கலத்துக்குப் போகிறோம் என்று தெரியாதா?''

''என்ன ஊர்? இன்னொரு தடவை சொல்லுங்கள்!''

''சரியாப் போச்சு! ஆனைமங்கலத்துக்குப் போகிறோம்! ஆனையின் முதுகில் ஏறிக் கொண்டு போகிறோம்!''

''ஐயோ! யானையா?''

''அடி பைத்தியமே! உன் உடம்பு ஏனடி நடுங்குகிறது! யானை என்ற பெயரைக் கேட்டாலே பயப்படத் தொடங்கி விட்டாயா?''

''அக்கா! சற்று முன் நான் தூங்கிப் போய் விட்டேனா?''

''ஆமாம், ஆமாம்! யானைமேல் அம்பாரியில் பிரயாணம் செய்கிற சொகுஸில் ஆனந்தமாய்த் தூங்கி விட்டாய்!''

''ஆனந்தம் ஒன்றுமில்லை, அக்கா! பயங்கரமான கனவுகள் கண்டேன்!''

''அப்படித்தான் தோன்றியது! ஏதேதோ பிதற்றினாய்!''

''என்ன அக்கா பிதற்றினேன்?''

''காளாமுகர் என்றாய்! பலி என்றாய்! கஜேந்திர மோட்சம் என்றாய்! யானைத் துதிக்கை என்றாய்! அப்புறம் முதன் மந்திரி அநிருத்தரைப் 'பாவி, பழிகாரன்' என்று திட்டினாய். அந்தப் பிரம்மராயருக்கு நன்றாய் வேண்டும்! நீ தூக்கத்தில் அவரைப் பற்றித் திட்டியதையெல்லாம் அவர் கேட்டிருந்தால், பல நாள் தூங்கவே மாட்டார்!''

''அதெல்லாம் நடந்தது நிஜமாகக் கனவுதானா, அக்கா!''

''நிஜமாகக் கனவா? பொய்யாகக் கனவா? எனக்கு என்ன தெரியும்? நீ என்ன சொப்பனம் கண்டாய் என்பதே எனக்குத் தெரியாது.''

''காளாமுகர்கள் என்னைப் பிடித்துக் கொண்டு போனார்கள். முதன் மந்திரி என்னிடம் இளவரசரைப் பற்றிய இரகசியத்தைக் கேட்டார். நான் சொல்ல மறுத்து விட்டேன். உடனே யானையை அழைத்து என்னைத் தூக்கி எறிந்து கொல்லும்படி கட்டளையிட்டார். அப்போது நான் கொஞ்சங்கூடக் கலங்காமல் தைரியமாக இருந்தேன், அக்கா! அப்போது உங்கள் ஞாபகமும் வந்தது. நீங்கள் அங்கே இல்லையே, என்னுடைய தைரியத்தைப் பார்ப்பதற்கு என்று.''

''போகட்டும்; சொப்பனத்திலாவது அவ்வளவு தைரியமாக நடந்து

கொண்டாயே? அதன் பொருட்டுச் சந்தோஷம்!''

வானதி சற்றுச் சும்மா இருந்து விட்டு ''என்னால் நம்ப முடியவில்லை!'' என்றாள்.

''உன்னால் என்னத்தை நம்ப முடியவில்லையடி?''

''நான் கண்டதெல்லாம் கனவு என்று நம்ப முடியவில்லை.''

''சில சமயம் சொப்பனங்கள் அப்படித்தான் இருக்கும். நிஜமாக நடந்தது போலவே தோன்றும். நான்கூட அப்படிப்பட்ட சொப்பனங்கள் பல முறை கண்டிருக்கிறேன்.''

''அப்படி என்ன சொப்பனம் கண்டிருக்கிறீர்கள்? சொல்லுங்களேன்?''

''ஏன்? என் தம்பிகூடத்தான் அடிக்கடி என் கனவில் வருகிறான். இலங்கைக்கு அவன் போய் எத்தனை மாதம் ஆயிற்று? ஆனால் இரவில் கண்ணை மூடினால் அவன் தத்ரூபமாக என் முன்னால் வந்து நிற்கிறான்......''

''நீங்கள் அதிர்ஷ்டசாலி, அக்கா!''

''என் அதிர்ஷ்டத்தை நீதான் மெச்சிக் கொள்ள வேண்டும். அவன் கடலில் குதித்த செய்தி வந்ததிலிருந்து என் மனம் எப்படித் துடித்துக் கொண்டிருக்கிறது என்று உனக்குத் தெரியாது.''

''அப்படியானால் அதுவும் ஒரு பயங்கர சொப்பனம் அல்லவா? அவர் கடலில் முழுகியது மட்டும் நிஜமான செய்திதானா?''

''அதுவும் ஒரு துர்ச் சொப்பனமாயிருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்குமே? அது மட்டும் நிஜந்தானடி, வானதி! இளவரசன் கடலில் குதித்ததை நேரில் பார்த்தவர் வந்து சொன்னாரே! அதை நம்பாமல் என்ன செய்வது?''

''வாணர்குல வீரரைத்தானே சொல்கிறீர்கள்? அவரே இளவரசரைப் பற்றி வேறு ஏதோ சொல்லவில்லையா? ஓடக்காரப் பெண்ணைப் பற்றியும் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தைப் பற்றியும் ஏதோ சொல்லவில்லையா?''

''இதெல்லாம் உன் சொப்பனமாயிருக்க வேண்டும். ஆம், ஓடக்காரி பூங்குழலியைப் பற்றியும் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தைப் பற்றியும் நீ தூக்கத்தில் பிதற்றினாய்! புத்த பிக்ஷுணி ஆகப் போவதாகக்கூட உளறினாய்! அதற்குள் உனக்கு என்னடி இந்த உலக வாழ்க்கையின் மீது அவ்வளவு வெறுப்பு? எதற்காக நீ புத்த பிக்ஷுணி ஆக வேண்டும்!''

''அக்கா! என் மனது உங்களுக்குத் தெரியாதா? அவரைக் கடல் கொண்டு விட்டது என்று கேட்ட பிறகு எனக்கு இந்த உலகில் என்ன வாழ்வு வைத்திருக்கிறது? சொப்பனத்தில் கண்டபடியே யானை என்னைத் துதிக்கையால் தூக்கி எறிந்து கொன்றிருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது!''

''அடி பாவி! நீயும் போய் விட்டால் என் கதி என்னடி ஆகிறது?''

''உங்கள் விஷயம் வேறு, அக்கா! நீங்கள்......''

''ஆமாம், ஆமாம்! அருள்மொழியிடம் என்னைக் காட்டிலும் உனக்கு அதிக ஆசை! இல்லையா?''

''அக்கா! அப்படி ஒன்றும் நான் சொல்லவில்லை. தங்களைப் போல் நான் மனோ தைரியம் உள்ளவள் அல்ல. அவர் இறந்து விட்ட பிறகு....''

''சீச்சீ! என்ன வார்த்தை சொல்கிறாய்? அவன் 'இறந்தான்' என்று நீ ஏன் சொல்ல வேண்டும்? உனக்கு நிச்சயமாய்த் தெரியுமா? பழுவேட்டரையர்களும், பழுவூர் ராணியும், பேதை மதுராந்தகனும் அப்படிச் சொல்லிக் கொம்மாளம் அடிப்பார்கள். நீயும் நானும் அப்படி ஏன் சொல்ல வேண்டும்? அல்லது ஏன் நினைக்கத்தான் வேண்டும்?''

''பின்னே, என்ன சொல்கிறீர்கள்? அவர் சுழிக் காற்றில் கடலிலே குதித்த பிறகு.... வேறு என்ன ஆகியிருக்க முடியும்? பிழைத்திருந்தால் இத்தனை நாள் வந்திருக்க மாட்டாரா?''

''அடி பைத்தியமே! கடலில் குதித்தால், அவனைக் கடல் கொண்டு விட்டது என்று அர்த்தமா?''

''கரை ஏறியிருந்தால் இத்தனை நாள் தெரியாமலா இருக்கும்?''

''என் தகப்பனாரின் கதை உனக்

குத் தெரியுமா? அவர் இளம் பிராயத்தில் பல மாத காலம் இருக்குமிடமே தெரியாம லிருந்தது. தேடிப் பிடித்துக் கொண்டு வந்து இளவரசுப் பட்டம் கட்டினார்கள். என் பாட்டனார் அரிஞ்சய சோழர் தக்கோலம் யுத்தத்துக்குப் பிறகு அடியோடு மறைந்து விட்டார். பல வருஷங்களுக்குப் பிறகு தான் அவர் இருக்குமிடம் தெரிந்தது. நான் சொல்கிறேன், கேள், வானதி! காவேரித் தாய் ஒரு சமயம் என் தம்பியைக் காப் பாற்றிக் கரை சேர்த்தாள். அதுமாதிரியே சமுத்திரராஜனும் பொன்னியின் செல்வ னைக் கரை சேர்த்திருப்பார். நமது கடற் கரைக்கும் இலங்கைத் தீவுக்கும் மத்தியில் எத்தனையோ சிறிய சிறிய தீவுகள் இருக் கின்றன. அத்தீவுகளில் ஒன்றில் அருள் மொழி ஒதுங்கியிருக்கக்கூடும் அல்லவா? அவனைத் தேடும் வேலையை நன்றாய்ச் செய்யும்படி தூண்டுவதற்காகவே நான் இந்தப் பிரயாணம் புறப்பட்டேன், உன் னையும் அழைத்துக் கொண்டு. உனக்கு இதெல்லாம் ஞாபகமே இல்லை போலிருக் கிறது. உன் பேரில் தப்பு இல்லை. இளவர சனைப் பற்றிய செய்தி வந்ததிலிருந்து உன் புத்தியே பேதலித்து விட்டது. இப்போது தான் கொஞ்சம் தெளிவாகப் பேச ஆரம் பித்திருக்கிறாய்!''

வானதி சிறிது நேரம் மௌனமாயிருந்து விட்டு, ''அக்கா! நாம் எந்த ஊருக்குப் போகிறோம் என்று சொன்னீர்கள்!'' என் றாள்.

''ஆனை மங்கலத்துக்கு.''

''அது எங்கே இருக்கிறது?''

''நாகைப் பட்டினத்துக்கு அருகில் கடற் கரை ஓரத்தில இருக்கிறது. நீ ஏதோ சொப் பனம் கண்டு உளறினாயே? அந்தச் சூடா மணி விஹாரத்துக்கும் ஆனைமங்கலத்துக் கும் கொஞ்ச தூரந்தான். நீ புத்த பிக்ஷுணி யாவதாயிருந்தால் கூட, அதற்கும் சௌகரி யமாகவேயிருக்கும். ஆனால் நீ மணி மேகலையாவதற்கு அவசரப்பட வேண் டாம். பொன்னியின் செல்வனைப் பற்றித் திடமான செய்தி கிடைத்த பிறகு முடிவு செய்து கொள்ளலாம்!'' என்று குந்தவை கூறிவிட்டு இலேசாகச் சிரித்தாள்.

''அக்கா! இது என்ன நீங்கள் சிரிக்கிறீர் கள்! சிரிப்பதற்கு எப்படி உங்களுக்கு மனம் வருகிறது? இளவரசர் பிழைத்திருப்பார் என்று உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை இருக்கிறதா?''





''நம்பிக்கை இல்லாவிட்டால், நான் இப்படி இருப்பேனா வானதி! நான் பார்த்து வைத்திருக்கும் ஜோசியங்கள் எல்லாம் பொய்யாகப் போகவில்லை. என் தம்பியின் கையில் உள்ள சங்கு சக்கர ரேகைகளும் பொய்யாகப் போகவில்லை. இதுவரையில் எல்லாம் சரியாகத்தான் நடந்து வந்திருக்கிறது.''

''என்ன சரியாக நடந்து வந்திருக்கிறது? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே?'' என்றாள் வானதி.

''உனக்கு ஏன் தெரியப் போகிறது? நீதான் சித்தப்பிரமை பிடித்து அலைகிறாயே? அருள்மொழிக்கு இளம் வயதில் பல கண்டங்கள் நேரும் என்று சொன்னார்கள். அதன்படி நேர்ந்து வந்திருக்கின்றன. பின்னே, மற்றவையும் நடந்துதானே ஆக வேண்டும்?''

''மற்றவை என்றால்?''

''எத்தனையோ தடவை நான் சொல்லியாகி விட்டது. நீயும் கேட்டிருக்கிறாய். மறுபடியும் எதற்காகச் சொல்லச் சொல்கிறாய்? பேசாமல் தூங்கு! பொழுது விடிந்து பார்த்துக் கொள்ளலாம்.''

வானதி மீண்டும் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்து விட்டு, ''இராத்திரியெல்லாம் யானை மீது பிரயாணம் செய்யப் போகிறோமா, அக்கா! எதற்காக?'' என்று கேட்டாள்.

''அதுகூடவா உனக்கு ஞாபகம் இல்லை? பகலில் நாம் பிரயாணம் செய்தால் வழியில் உள்ள ஊர்களிலெல்லாம் ஜனங்கள் நம்மைச் சூழ்ந்து கொள்வார்கள். 'பொன்னியின் செல்வன் எங்கே?' 'சோழ நாட்டின் தவப் புதல்வன் எங்கே?' என்று கேட்பார்கள். பழுவேட்டரையர் மீது குற்றம் சுமத்துவார்கள். பழுவூர் இளைய ராணியைச் சபிப்பார்கள். சக்கரவர்த்தியைக் கூட நிந்தித்தாலும் நிந்திப்பார்கள். அதையெல்லாம் நாம் எதற்காகக் காதினால் கேட்க வேண்டும்? நான்தான் ஜனங்களை அப்படியெல்லாம் தூண்டி விட்டதாகப் பழுவேட்டரையர்கள் சொன்னாலும் சொல்லுவார்கள். எதற்காக அந்த வம்பு என்றுதான் இராத்திரியில் புறப்

பட்டேன். இதையெல்லாம் பழையாறையிலிருந்து புறப்படும் போதே உனக்குச் சொன்னேன். மறுபடியும் கேட்கிறாய். நல்ல சித்தப் பிரமை பிடித்து உன்னை ஆட்டுகிறது! சூடாமணி விஹாரத்துப் புத்த பிக்ஷுக்களிடம் சொல்லித்தான் உன் சித்தப் பிரமையைப் போக்க வழி தேட வேண்டும்! 'போனால் போகட்டும்; நீ இப்போது தூங்கு! எனக்கும் தூக்கம் வருகிறது. இந்த ஆடும் குன்றின் மீது உட்கார்ந்தபடியேதான் இன்று இரவு நாம் தூங்கியாக வேண்டும்'' என்றாள் இளையபிராட்டி.

வானதி இனி ஒன்றும் பேசக் கூடாது என்று தீர்மானித்து மௌனமானாள். அவளுடைய உள்ளம் ஒரே குழப்பமாயிருந்தது. அன்று நடந்ததையெல்லாம் ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்துக் கொண்டாள். எல்லாம் உண்மையாக நிகழ்ந்த சம்பவங்களாகவே தோன்றியது. 'எனக்குச் சித்தப்பிரமை ஒன்றுமில்லை; அக்காதான் என்னைப் பைத்தியமாக அடிக்கப் பார்க்கிறாள்' என்று சிலசமயம் எண்ணினாள். யானை தன்னைத் துதிக்கையினால் சுற்றித் தூக்கிய பிறகு என்ன நடந்தது என்பதை எண்ணி எண்ணிப் பார்த்தாள். ஒன்றும் நினைவுக்கு வரவில்லை. என்னதான் நடந்திருக்கும்? தன் உயிருக்கே ஆபத்தான அந்த வேளைக்கு அக்கா சரியாக அங்கே வந்து தன்னைக் காப்பாற்றியிருக்க வேண்டும். அக்காவைப் பார்த்ததும் முதன் மந்திரி நடு நடுங்கிப் போயிருக்க வேண்டும். ஆயினும் யானைத் துதிக்கையின் பிடியிலிருந்து காப்பாற்றுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமா?..... ஒருவேளை இவ்வாறு இருக்குமோ?.... தன்னைத் துதிக்கையால் சுட்டித் தூக்கிய யானைதானா இது? மேலே அம்பாரி இருந்தது அந்த இருட்டிலும் சிறிது தெரிந்தது. இளையபிராட்டி அந்த அம்பாரியிலேயே இருந்திருக்கலாம். யானை துதிக்கையினால் தூக்கித் தன்னைத் தூர எறிவதற்குப் பதிலாக மேலே அம்பாரியில் விட்டிருக்கக் கூடும். அந்த மாதிரி செய்ய யானைகள் பழக்கப்பட்டிருப்பதை வானதி பலமுறை பார்த்ததுண்டு. முதன் மந்திரியும் இளையபிராட்டியும் சேர்ந்து இம்மாதிரி சூழ்ச்சி செய்திருக்கிறார்களோ? எதற்காக? நான் தனியாகப் பிரயாணம் செய்வதைத் தடுக்கும் பொருட்டுத்தான். என்னுடைய தைரியத்தைச் சோதிப்பதற்காகவும் இளையபிராட்டி இம்மாதிரி செய்திருக்கலாம். பொம்மை முதலையை என் அருகிலே விட்டு ஒருசமயம் சோதனை செய்யவில்லையா? எப்படியாவது இருக்கட்டும்; நான் இன்று தனி வழியே புறப்பட்டது பெருந்தவறு. இப்போது அக்காவின் மடியில் தலையை வைத்துப் படுத்திருப்பது எவ்வளவு நிம்மதியாயிருக்கிறது? அக்காவின் வார்த்தைகள் எவ்வளவு தைரியமும் உற்சாகமும் அளிக்கின்றன? பொன்னியின் செல்வர் எங்கேயோ பத்திரமாயிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஒருவேளை இந்தப் பிரயாணத்தின் முடிவில் அவரைச் சந்திப்போமா?.... இவ்வாறு எண்ணிய போது வானதியின் உள்ளத்தில் அளவிலாத கிளர்ச்சி ஏற்பட்டது. மனச் சோர்வுக்கு நேர் மாறான உற்சாக இயல்பு இப்போது அவளை ஆட்கொண்டது.

யானை கம்பீரமாக நடந்து சென்று கொண்டிருந்தது.

யானை மேல் அம்பாரி ஆடி அசைந்து கொண்டிருந்தது.

முன்னும் பின்னும் காவற்படைகள் போய்க் கொண்டிருந்தன.

மழை சிறு தூறலாயிற்று. பிறகு தூறலும் நின்றது.

வானத்தில் மேகக் கூட்டங்கள் சிதறிக் கலைந்தன.

நட்சத்திரங்கள் எட்டிப் பார்த்தன.

வானதி யானையின் அம்பாரிக் கூரை வழியாக மேலே வானத்தில் தெரிந்த நட்சத்திரங்களைப் பார்த்தாள்.

வான வெளியில் சஞ்சரிக்கும் நட்சத்திரங்களுக்கும் பூலோகத்தில் வாழும் மனிதர்களின் வாழ்க்கைக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்க முடி

யுமா என்று அதிசயப்பட்டாள்.

பொன்னியின் செல்வர் உதித்த நட்சத்திரத்துக்கும் தான் பிறந்த நட்சத்திரத்துக்கும் உள்ள பொருத்தத்தைப் பற்றி ஜோதிடர்கள் சொல்வதில் ஏதேனும் உண்மையிருக்குமா?

தன் வயிற்றில் பிறக்கும் மகன் மூன்று உலகத்தையும் ஆளப் போகிறான் என்று ஜோதிடர்களுடன் சேர்ந்து அக்காவும் சொல்வது உண்மையாகுமா?

வால் நட்சத்திரம் தோன்றுவது ஏதோ உற்பாதத்துக்கு அறிகுறி என்று ஜனங்கள் பேசிக் கொள்கிறார்களே, அது எவ்வளவு தூரம் நிஜமாயிருக்கும்?

அப்படி என்ன உற்பாதம் நடக்கும்?

பொன்னியின் செல்வர் கடலில் மூழ்கியதுதான் அந்த உற்பாதமா?

அக்கா கொண்டுள்ள நம்பிக்கையின்படி அவர் திரும்பி வருவாரா?

அப்படியானால், வேறு என்ன உற்பாதம் நடக்கக் கூடும்?......

இம்மாதிரியெல்லாம் வெகு நேரம் சிந்தனை செய்து கொண்டிருந்த பிறகு வானதி இலேசாகக் கண்ணயர்ந்தாள்.

அவள் கண் விழித்துப் பார்த்த போது, பொழுது புலர்ந்திருந்தது.

புள்ளினங்கள் உதய கீதம் பாடின.

இளையபிராட்டியும் விழித்துக் கொண்டிருந்தாள். அம்பாரியின் பட்டுத் திரையை விலக்கிக் கொண்டு வெளியே பார்த்து, "இதோ ஆனைமங்கலம் வந்து விட்டோம். சோழ மாளிகையின் வாசலுக்கே வந்து விட்டோம்" என்றாள்.

இரு இளவரசிகளும் யானை மீதிருந்து இறங்கினார்கள்.

மாளிகைக்குள்ளே பிரவேசித்தார்கள். அங்கே ஆயத்தமாயிருந்த அரண்மனைத் தாதிமார்கள் இளவரசிகள் இருவரையும் மாளிகையின் எல்லாப் பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று காட்டினார்கள்.

கடைசியில், மாளிகையின் கீழ்ப்புறத்துக்கு வந்து, அங்கிருந்த அலங்கார முன்றின் முகப்பில் நின்றபடி கடலுடன் கலந்த கால்வாயைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

"அக்கா! இளவரசரைத் தேடுவதற்கு ஏற்பாடு செய்யப் போவதாகச் சொன்னீர்களே? என்ன செய்திருக்கிறீர்கள்?" என்றாள் கொடும்பாளூர் இளவரசி.

"ஆமடி வானதி! தேடுவதற்கு ஏற்பாடு ஆரம்பமாகி விட்டது. அதோ பார் ஒரு படகு வருகிறது! அதில் வருகிறவர்கள் ஒருவேளை ஏதேனும் செய்தி கொண்டு வந்தாலும் கொண்டு வருவார்கள்!" என்றாள் குந்தவை.

வானதி திரும்பிப் பார்த்தாள். சற்றுத் தூரத்தில் மரக் கிளைகளின் இடைவெளியில் ஒரு சிறிய படகு வருவது தெரிந்தது. அதில் இருவர் இருந்தார்கள்.

"அக்கா! அந்தப் படகில் வருவது யார்?" என்று வானதி கேட்டாள்.

"படகு தள்ளுகிறவன் சேந்தன் அமுதன். தஞ்சாவூர்ப் பாதாளச் சிறையிலிருந்து நாம் அன்றொரு நாள் விடுதலை செய்தோமே, அவன்! உட்கார்ந்திருப்பவள் பூங்குழலி!"


வானதிக்கு உடம்பு சிலிர்த்தது.

"அக்கா! நான் அந்தப் பெண்ணைப் பார்க்க விரும்பவில்லை. உள்ளே போகிறேன்!" என்றாள்.

"என்னடி அவளைக் கண்டு அவ்வளவு பயம்! உன்னை அவள் விழுங்கி விடுவாளா, என்ன? நான் பார்த்துக் கொள்கிறேன். நீ பயப்படாமல் சும்மா இரு!" என்றாள் குந்தவை.

படகு நெருங்கி வந்து கொண்டிருந்தது.

யானைத் துதிக்கையில் அகப்பட்ட வானதி எப்படி உயிர் பிழைத்தாள்? இதைக் குறித்து அவள் இரண்டாவதாகச் செய்த ஊகந்தான் சரியானது. யானை துதிக்கையைச் சுழற்றி அவ



"அந்த பேஷண்ட் எப்படிப் பிழைச்சாராம்?"

"கடைசி நேரத்தில் டாக்டர் ஆபரேஷனைக் கைவிட்டு விட்டதால்தான்!"

— கீழை. அ. கதிர்வேல்.

ளைத் தூர எறியவில்லை. மேலே தூக்கி அம்பாரியின் அருகில் இலேசாக வைத்தது. அங்கே திரை மறைவில் ஆயத்தமாயிருந்த குந்தவை அவளை வாரி அணைத்து மடியில் போட்டுக் கொண்டாள்.

பிறகு முதன் மந்திரியும் பல்லக்கில் ஏறினார். "தேவி! போய் வரட்டுமா? உன் பிரயாணம் இனிதாயிருக்கட்டும். அதன் முடிவும் இனிதாயிருக்கட்டும்!" என்று சொன்னார்.

"ஐயா! தங்கள் உதவிக்கு மிக்க நன்றி!" என்றாள் இளையபிராட்டி.

"கொடும்பாளூர்க் கோமகளைக் கோழை என்றாயே? அவளைப் போல் நெஞ்சழுத்தக்காரப் பெண்ணை நான் பார்த்ததேயில்லை."

"முன்னேயெல்லாம் அவள் கோழையாகத்தானிருந்தாள். கொஞ்ச நாளாகத்தான் அவளுக்கு இவ்வளவு தைரியம் வந்திருக்கிறது" என்றாள் குந்தவை.

"எல்லாம் உன்னுடைய பயிற்சிதான். அந்தப் பெண் என்னைப் பயங்கர ராட்சதன் என்று எண்ணியிருப்பாள். போனால் போகட்டும். என்னைப் பற்றி எவ்வளவோ பேர் எத்தனையோ விதமாக எண்ணிக்கொண்டிருப்பார்கள். நான் அதற்காகவெல்லாம் கவலைப்படுவதில்லை. போய் வருகிறேன், அம்மா!"

இவ்விதம் முதன் மந்திரி கூறியதும் அவருடைய பல்லக்கும் நாலு வீரர்களும் மட்டும் மேற்குத் திசையில் செல்ல, யானை குதிரை பரிவாரங்கள் எல்லாம் கிழக்கு நோக்கிச் சென்றன.

முதன் மந்திரியின் பல்லக்குப் புறப்பட்ட சிறிது நேரத்துக்கெல்லாம் மழை பிடித்துக் கொண்டது. மழையைப் பொருட்படுத்தாமல் சிவிகை தூக்கிய ஆட்களும் சிவிகையைக் காத்த வீரர்களும் சென்று கொண்டிருந்தார்கள்.

மழை குறைந்து தூறல் நிற்கும் சமயத்தில் திடீரென்று பல்லக்கு நின்றது.

"ஏன் நிற்கிறீர்கள்?" என்று முதன் மந்திரி கேட்டார்.

"சுவாமி! அந்த மரத்தடியில் யாரோ கிடப்பது போலத் தெரிந்தது!" என்றான் முன்னால் சென்ற காவலர்களில் ஒருவன்.

முதன் மந்திரி அவன் சுட்டிக் காட்டிய திசையை உற்றுப் பார்த்தார். பளிச்சென்று ஒரு மின்னல் மின்னியது.

"ஆமாம்; யாரோ கிடக்கிறதாகத்தான் தெரிகிறது. இறங்கிப் பார்க்கிறேன்" என்றார் முதன் மந்திரி.

சிவிகையிலிருந்து இறங்கி அருகில் சென்ற போது மரத்தடியில் கிடந்த மனிதன் முனகும் சத்தம் கேட்டது.

"யார் இங்கே?" என்றார் அநிருத்தர்.


அதற்குப் பதிலாக "முதன் மந்திரி போலிருக்கிறதே!" என்ற தீனமான குரல் கேட்டது.

"ஆம்; கேட்பது முதன் மந்திரிதான்! இங்கே கிடப்பது யார்?"

"ஐயா! தெரியவில்லையா? நான்தான் மதுராந்தகன்!"

"இளவரசே! இது என்ன கோலம்? இங்கே எப்படி வந்தீர்கள்? என்ன நேர்ந்தது?" என்று பரபரப்புடன் கேட்டுக் கொண்டே முதன் மந்திரி மதுராந்தகரைத் தூக்கி நிறுத்த முயன்றார்.

(தொடரும்)


நான் ஸின்த்தால் உபயோகிக்கிறேன். நீங்கள்?
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
வினோதின் உடலுக்கும் உள்ளத்திற்கும் தன்னம்பிக்கை தருவது ஸின்த்தால்.
MADISON-G-001-TAM

ஒரு பாத்திரத்தில் வறுத்தும்
மற்றொன்றில் பொரித்தும்
மூன்ருவதில் வதக்கியும்
நான்காவதில் வேக வைத்தும்
அவதிப்படும் ஒவ்வொரு
குடும்பத்தலைவிக்கும்.

மூன்று வார்த்தைகள் கொண்ட
ஓர் அறிவுரை...

பிரெஸ்டீஜ்

பிரஷர் பேன்

இதனை உபயோகித்து எத்தனை
விரைவாக என்னவெல்லாம்
செய்கிறது என்பதை உணருங்கள்



Prestige
PRESSURE PAN ©

சாதாரண, அல்லது உயர்ந்த மூடியும் கிடைக்கும்.
உங்களிடம் முன்பே பிரெஸ்டீஜ் பிரஷர்
குக்கர் இருந்தால் மூடியின்றி பிரஷர் பேன்
மட்டும் வாங்கினால் போதும்

ttk தயாரிப்பு

MAA COMMUNICATIONS PP 2870 TAM

போட்டிக்
கதை — 6

நேசமாய்

நான் மாலை அலுவலகத்திலிருந்து வந்ததிலிருந்தே கவனித்தேன். மாலா என்னவோ கேட்கநினைக்கிறாள். தயக்கமோ, பயமோ, வெட்கமோ என்ன காரணமோ மென்று விழுங்கிக் கொண்டு போய்விடுகிறாள். 'என்ன வேணும்' என்று வலியக் கேட்டதற்கும் 'ஒண்ணுமில்லே' என்கிற முறுவல்தான் பதில். அந்த ஒண்ணுமில்லே என்ற சொல்லை உச்சரித்த விதமே ஏதோ விசேஷம் இருக்கிறது என்பதை உணர்த்துகிறாற் போல...

மாலா என்னுடைய இளம் மனைவி. வருகிற ஜூன் பதினைந்தன்று கல்யாணமாகி நாலு மாதம் ஆகிறது. இப்போதுதான் ஒருவரை, ஒருவர் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிற காலம்.

கல்யாணத்திற்கு முன்னால் உல்லாசப் பறவைகளாக ஊர் சுற்றி, வாய்வலிக்கப் பேசி, விஷயமே இல்லாமல் சிரித்து... இப்படியெல்லாம் இருக்க முடியாமல் போனதில் வருத்தம்தான். கதை, கவிதை, இலக்கியம் என பித்துப் பிடித்து அலைகிற (அம்மா பாஷையில்) எனக்கு, வரப்போகிறவள் என் கதைகள் படித்திருக்கிறாளா என்பது தெரியாவிட்டால் தலை வெடித்து விடும் போலிருந்தது. அட, கதைப் புத்தகம் படிக்கிற வழக்கமாவது உண்டா? இதெல்லாம் தவிர முக்கியமாய் இன்னொரு கேள்வி கேட்க ஆசைப்பட்டேன். என்னை நிஜமாலுமே விரும்பி மணந்து கொள்கிறாளா, இல்லை பெற்றவரின் வற்புறுத்தலுக்காகவா?'

மேற்படி கேள்விகளை அதிகபட்சமாக மாமனாரிடம்தான் கேட்க முடிந்தது. ஏதோ ஹாஸ்யத்தைக் கேட்டவர் மாதிரி சிரித்தார். பல்லெல்லாம் வெற்றிலைக் கறை. நாக்கு வெந்து சுண்ணாம்புக் காளவாய் மாதிரி. பன்னீர்ப் புகையிலையை உள்ளங்கையில் வைத்துக் கொண்டு விரல்களால் உருட்டினபடி ஏதோ யோசித்தார். வாயில் அடக்கிக் கொண்டு பேச ஆரம்பித்தார். சத்தியமாய் அட்சரம் புரியவில்லை. எனக்கு எரிச்சல் வந்தது. பட்டிக்காட்டில் வந்து பெண் எடுத்தால் இப்படித்தான்.

கல்யாணம்முடிந்தகையோடு அவளைத் தனியே அழைத்து 'என்னை நிஜமாலுமே பிடித்திருக்கிறதா?' என்றேன். இதென்ன கேள்வி பைத்தியக்காரத்தனமாய் என்பது மாதிரி பார்த்தாள். நான் வற்புறுத்தினதும் 'பிடிச்சுத்தானே ஆகணும்' என்றாள் பிடி கொடுக்காமல். நான் பதறிப் போய், 'கட்டாயத்தினால்தான் என்னை மணந்து கொண்டாயா...? வேறு யாரையும் மனசால்...' என்றபோது, 'அய்ய... அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க... என்று அவசரமாக மறுத்தவள் கண்களை நேருக்கு நேராகப் பார்த்தபடி சிரிப்புடன் 'பிடிச்சிருக்கு' என்றாள்.

"என்ன, அய்யா கனவுல மூழ்கியாச்சா?" — என்றபடி ஒரு கையில் ஒரு காப்பியும், மற்றொரு கையில் அன்றைக்கு வந்திருந்த கடிதங்களோடும் வந்தாள் மாலா. நான் வேண்டுமென்றேவிரல்களை உரசினபடி காப்பியை வாங்கிக் கொண்டேன். அம்மா வீட்டில் இல்லாததை அப்போதுதான் கவனித்தேன். "அம்மா எங்கே?"

"கோவிலுக்கு."

"அடடே... கல்கி காம்ப்ளிமென்டரி வந்திருக்கா! குட். கதை படிச்சியோ?" என்றபடி பரபரவெனத் தேட ஆரம்பித்தேன்.

"தேட வேண்டாம்னுதானே அடையாளம் வச்சிருக்கேன்."

'மாருதி'யின் கைவண்ணத்தில் படம் தெளிவாய்... 'என்னைப் படியேன்' என்று கண்டிபிழுக்கிறாற் போல...

"உங்கிட்டே கொஞ்சம் பேசணுமே" — என்றபடி மாலா, கீழே சிந்தியிருந்த தண்ணீரை இழுத்துக் கோலம் போட ஆரம்பித்தாள்.

"ம்கூம்... நீர்க்கோலம் போடாதே மாலா. என்ன கேட்கணுமோ கேளேன். பீடிகை என்ன வேண்டியிருக்கு?"

"உங்கள் கதைகள்..."

"என்னோட கதையெல்லாம் உண்மையில் நிகழ்ந்த சம்பவங்களின் வெளிப்பாடுதான். கவர்ச்சிக்காக அங்கங்கே கொஞ்சம் கற்பனை முலாம் பூசப்பட்டதே தவிர, கருத்துக்கள் நிஜங்கள். அப்பழுக்கில்லாத நிஜங்கள். நான் சமுதாயத்தைப் பிரதிபலிக்கிற வெறும் கண்ணாடிதான்... என்னோட கதைல வசந்த் கேரக்டர் 'இலக்கிய வாசகர் சந்திப்பு'ல பேசற இடம் தானே மாலா. இந்த இடம் உனக்குப் பிடிச்சிருக்கா... வார்த்தை பிசகாம ஒப்பிக்கிறியே!"

"அதுல சொன்னது..." என்ற மாலா ஏதோ ஆரம்பித்த போது அம்மா உள்ளே நுழைந்தாள்.

"வாடாப்பா ரமேஷ்... உன்னோட கதை பத்திரிகைல வந்திருக்கு போலிருக்கே! இன்னிக்கு பங்குனி உத்திரம். உன்னோட பேருக்கு அர்ச்சனை பண்ணலாம்னு போனேன். இந்தா பிரசாதம்..."

மாலா எழுந்து உள்ளே போய் விட்டாள். மாமியாரிடம் பயமா, மரியாதையா?

"கதை படிச்சியா அம்மா... எப்படி?"

தமிழ்நேசன்

"வரவர முன்னே மாதிரி படிக்க முடியறதில்லேடா... கண் மங்கிண்டே வர்றது. டெஸ்ட் பண்ணிண்டு ரொம்ப நாளாயிடுத்து. டாக்டரிடம் போனாத் தேவலை. ஓய்ந்து போய் நீ வரச்சே சொல்லவும் கஷ்டமாயிருக்கு. வயசான காலத்திலே இப்படி கஷ்டப்படணும்னு வச்சிருக்கானே ஆண்டவன்.''

அடடா பிள்ளையார் பிடிக்கக் குரங்கான கதையாக விஷயம் எங்கேயோ வழி மாறுகிறதே...

"வர்ற ஞாயிற்றுக்கிழமை அழைச்சிண்டு போறேம்மா...'' என்று அந்தப் பிரச்னைக்கு முற்றுப் புள்ளி வைத்து, "தட்டுப் போடு மாலா'' என்று எழுந்தேன்.

சாப்பிட்டு முடிகிறவரை ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை.

சாப்பிட்டு முடிந்ததும் "வேலையை முடிச்சுட்டு மாடிக்கு வா'' என்று மாலாவிடம் சொல்லிவிட்டு, டிரான்சிஸ்டரை எடுத்துக் கொண்டு மாடிக்குப் போனேன். நிலா வெளிச்சத்தில் அலைவரிசை துழாவி விவிதபாரதி வைத்தால் டி. எம். எஸ். 'எங்கே நிம்மதி... எங்கே நிம்மதி' என்று மனம் வெறுத்துப் போய் பாடிக் கொண்டிருந்தார். இதென்ன இந்த நேரத்திற்குப் பொருத்தமில்லாமல்... படக்கென அணைத்துவிட்டு, வானத்துத்துண்டு நிலாவை வெறித்தபடி படுத்துக் கிடந்தேன்.

"தூங்கிட்டேளா!''

"வா... வா சஸ்பென்ஸா நிறுத்திட்டேயே... சொல்லு என்ன கேக்கணும்னு நினைச்சே?''

"வந்து... வசந்த் கேரக்டர் மூலமா நீங்க சொன்ன விஷயங்கள் உங்களுக்குப் பொருந்துமில்லையா?''

"குட்... யூ ஆர் ரைட்! வசந்த் என்கிற எழுத்தாளரின் பாத்திரமே என்னுடைய பிரதிபலிப்புதான். சரியாகக் கண்டு பிடித்து விட்டாயே... க்ரேட்!''

"அங்கேதான் பிரச்னையே. அந்தக் கதையில் வருகிற மற்ற சம்பவங்களும் உண்மையா? என்னைத் தப்பாகப் புரிந்து கொள்ளாதீர்கள். எனக்கு உங்களை மாதிரி எழுதவோ, பேசவோ வராது. கடவுளே இதெல்லாம் நிஜமாக இருக்கக் கூடாது என்றுதான் என் மனம் அடித்துக் கொள்கிறது. உங்கள் கதையில் வருகிற வசந்தின் மனைவி மாதிரி நானும் மண்டுதான். இலக்கியத்தை ரசிக்கத் தெரியாத ஞானசூன்யம்தான். அதற்காக... அதற்காக என்னை விட்டுப் போய்விட மாட்டீர்களே...'' — பேசி முடிப்பதற்குள் கண்ணீர் திரையிட முழந்தாளில் முகம் புதைத்துக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

ஓ... கதை எழுதுவதில் இப்படியெல்லாம் பிரச்னை இருக்கிறதா? அந்தக் கதையைத் தன்னோடு, தன் வாழ்க்கையோடு ஒப்பிட்டு மருண்டு போகிறாள். துளிகூட விட்டுக் கொடுக்க மறுக்கிற, எதையுமே சந்தேகத்தோடு பார்க்கிற, அடுத்தவர் குறையைப் பெரிதாக்கிக் காட்டி, அடுத்தவர் மனத்தை நோகடிக்கிற இயல்புள்ள ஒரு பெண்ணை நிர்ப்பந்தங்களினால் வசந்த் என்கிற எழுத்தாளன் மணந்து கொள்கிறான். வாழ்க்கையில் சிறிதுகூட இன்பமில்லாத அவனுக்குக் கதையும், கவிதைகளுமே வடிகால். அவனுக்கு இலக்கியங்களில் ஈடுபாடுள்ள ஒரு ரஸிகையின் பரிச்சயம் ஏற்படுகிறது. இருவரும் மனம் விட்டுப் பழக ஆரம்பிக்கிறார்கள். இலக்கியக் கூட்டங்கள், வாசகசாலைகள் என்று நட்பு நெருக்கமாக நீடிக்க, வீட்டிற்கும் அவளை அழைத்து வர ஆரம்பிக்கிறான். மனைவி, இவர்கள் நட்பைக் கொச்சையாய் விமர்சிக்கிறாள். தாம்பத்யத்தின் விரிசல் பெரிதாகி வாழ்க்கை நரகமாகிறது அவனுக்கு. கடைசியில் மனைவியைத் துறந்து ரசிகையிடம் அடைக்கலமாகிறான்...

'பரஸ்பரம் புரிந்து கொண்டு, ஒருவரை ஒருவர் நேசித்து, விட்டுக் கொடுத்து, தன்



எதிர்காலம் வரப்போகிறவரிடத்துச் சிறப்பாக, பத்திரமாக இருக்கும் என்கிற நம்பிக்கையில் முகிழ்க்கிற காதல்தான் சாகாது. அருவி எப்படிப் பள்ளத்தை நோக்கி, யாரும் வழி காட்டாமலேயே தேடி ஓடுகிறதோ அதே போலத்தான் மனமும். எங்கே அதன் எண்ணங்கள் மதிக்கப்படுகின்றனவோ, ரசிக்கப்படு



கின்றனவோ அங்கேதான் தாவும். ஆறு எப்படி கடலோடு சங்கமத்தைத் தேடி ஓடி வந்து, ஆசையாய் ஆயரம் கைகளால் அணைத்துக் கொள்கிறதோ, அது போலத் தன்னை மனிதனாக மதித்த, எண்ணங்களை ஆமோதித்த ரசிகையோடு சங்கமமானான் வசந்த்...' என்கிற உணர்ச்சிப் பெருக்கான வரிகளோடு கதைமுடிந்தது.

இந்த வரிகள் மாலாவைப் பாதிக்கும் என்பது எனக்கு எப்படிப் புரியாமல் போயிற்று. இவள்மேல் எனக்கிருக்கிற அளவு கடந்த காதலை, இவளைத் தவிர்த்து வேறு ஒரு பெண்ணைக் கற்பனை கூடச் செய்ததில்லை என்கிற உண்மையை, இவளை நினைத்ததும் என் நெஞ்சில் பிரவாகிக்கிற காதலை எப்படிச் சொல்வேன். இதுபோல ஓர் ஆணின் கற்பைச் சந்தேகித்த கதை, காவியங்களில் கூட வந்ததில்லை... இந்த சந்தேகமும், பயமும் அளவு கடந்த அன்பினால் வந்ததுதான். கதையின் சம்பவங்களும், பெயர்களும் கற்பனையே என்று அச்சடித்து நிச்சயம் செய்தாலும், இவள் மனத்தில் பதிய வைப்பது எப்படி?

''மாலா... ஸ்... இப்படிக் குழந்தை மாதிரி அழாதே. கமான், அது வெறும் கதை. நிஜமில்லை. சத்தியம். என்னை நம்பு. இந்த ஆயுசுக்கும் என் கண்ணம்மாவை விட்டுப் பிரியமாட்டேனாம்... ப்ராமிஸ்'' என்று அவள் தலைமீது கை வைத்துச் சத்தியம் செய்தேன்.

''சித்த முந்திதானே, 'வசந்த் கேரக்டர் என்னோட பிரதிபலிப்புத்தான்' அப்படின்னு சொன்னீங்க...'' என்று மூக்கை உறிஞ்சினாள்.

''மாலா... அந்தக் கதையோட தீம், கரு உண்மைதான். மனசு ஒன்றுபடாத வாழ்க்கை, கட்டாயக் கல்யாணம் இப்படித்தான் பாதியில் விரிசல் கண்டு எல்லோருக்கும் தொல்லை தரும் என்பது தான் நான் சொல்ல வந்த விஷயம். மற்ற கேரக்டர்களும், சம்பவங்களும் கற்பனை. கதைக்கு அழகூட்ட... சரி, நமக்குக் கல்யாணம் நடந்த அன்னிக்குக் கல்யாணச் சத்திரத்தை எப்படி அலங்கரிச்சிருந்தாங்க? சொல்லு பார்க்கலாம்...?''

''இப்ப எதுக்கு அதைப் பத்தி?''

''சொல்லேன்.''

''வாசலில் வாழைமரம் கட்டி, கலர் கலரா பல்ப் எரியவிட்டு, அந்த பல்பை வச்சே 'நல்வரவு' எழுதி, குருத்தோலைல வரிசையாத் தோரணம் கட்டி, பந்தல் பூரா காகித அலங்காரங்கள்... ஜிகினாப் பேப்பர்ல வேறே தோரணம். இதற்கெல்லாம் சிகரம் மாதிரி வாசல்ல தெருவை அடைச்சுண்டு படிக்கோலம்...'' — அவள் கண்களில் அந்தக் கற்பனை விரிந்தது. ஏதோ அப்போதுதான் மணவறையில் உட்கார்ந்திருக்கிற மாதிரி, முகத்தில் சந்தோஷம்.

''சரி... கல்யாணம் நமக்குத்தானே, சத்திரத்திற்கு எதற்கு இத்தனை அலங்காரங்கள், வாழைப்பந்தல், தோரணம் எல்லாம்!''

''ஆங்... அதெப்படிங்க... வீட்டுக்குள்ளே உட்கார்ந்து தாலி கட்டிக்கிட்டாக் கல்யாணம் ஆயிடுச்சா... ஊர்ல இருக்கிறவங்களுக்குத் தெரிய வேணாம்? தோரணம் கட்டி, ஸ்பீக்கர் செட்டோட நாதஸ்வர கச்சேரி வைக்காட்டி எப்படி கல்யாண வீடுன்னு தெரியுமாம்... அதான் கல்யாண வீட்டடம் களை கட்டி இருக்கு... அப்படின்னு பழமொழியே உண்டே.''

''தட்ஸ் குட். மாலா, சத்திரத்திற்கு எப்படித் தோரணமும் வாழை மரமும், அலங்காரமும் 'இங்கே கல்யாணம் நடக்கிறது' என்று விளம்பரப்படுத்த வேண்டுமோ அதே மாதிரிதான் இந்தச் சம்பவங்களும். இதெல்லாம் கதைக்கு வார்த்தைத் தோரணங்கள். இது இல்லாமல் எந்தக் கதையும் களை கட்டாது. வாசகனைக் கப்பென்று பிடித்துக் கதைக்குள் தள்ளி விடுவதற்கான உத்திதான் இது. இப்போது புரிந்ததா...!''

கொட்டாவி விட்டபடி, பெரிதாக பூம் பூம் மாடு மாதிரி தலையாட்டினாள். நான் சொன்னது புரிந்து தலையாட்டினாளா, இப்படி உவமானங்களோடு என் கற்பைப் புரிய வைக்கப் பரிதாபமாய்க் கெஞ்சியதால் மனமிரங்கி தலையாட்டினாளா... தெரியவில்லை.

''வாங்க... கீழே போகலாம்...''

ஒவ்வொரு படியாய் நிதானமாய் இறங்கி, கொலுசொலி சப்திக்காமல், ஹாலில் தூங்கின அம்மாவைக் கடந்து உள்ளே போய்ப்படுக்கையில்விழுந்தோம். படுத்த நிமிஷமே மாலா தூங்கிப் போய் விட்டாள்... அவள் மனத்திலிருந்த சஞ்சலம் அகன்றிருக்க வேண்டும்... மனத்தில் குழப்பமிருந்தால் இப்படி நிம்மதியாய்த் தூக்கம் வருமா...?

புரண்டு, புரண்டு படுத்தாலும் பிடிவாதமாய் உறக்கம் வர மறுத்தது. என் கதைக்கு இப்படியொரு புதிய கோணம் இருக்கிறதா...? வேடிக்கைதான். அவளுடைய மனக்குழப்பத்தை என்னிடம் தந்துவிட்டு, நிம்மதியாகத் தூங்கி விட்டாளே... கெட்டிக்காரிதான்.

எவ்வளவு நேரம்தான் இப்படித்தூக்கம் வராமல் படுத்துக் கிடப்பது? சத்தியமாய் இப்போதைக்குத் தூக்கம் வரப் போவதில்லை. இருட்டில் துழாவி, ஸ்விட்ச் போட்டு, தலைமாட்டில் இருந்த நோட்டை எடுத்து, தலையணையை மடிமேல் எழுத வாகாக வைத்துக் கொண்டு,

''தோரணம்.

நான் மாலை அலுவலகத்திலிருந்து வந்ததிலிருந்தே கவனித்தேன். மாலா என்னவோ கேட்க நினைக்கிறாள்...'' — என எழுத ஆரம்பித்தேன்!

நீரில் மிதக்கும் நிலா

10

சுபா

சிவராம்தான் என்று நடராஜன் சொன்னவுடன் மதுமதி லேசாகத் திடுக்கிட்டாள். ஆச்சரியத்துடன், கேள்விக்குறியுடன் நடராஜனைப் பார்த்தாள்.

''நீயே பாக்கப் போறேம்மா...''

உண்மைதான். வீட்டில் நுழைந்தவுடன் ஆளுயரத்திற்கும் மீறிய பரிமாணத்தில் சிவா புகைப்படத்தில் சிரித்துக் கொண்டிருந்தான். சட்டென்று கைநீட்டி நேரே தொடப் போகிறான் என்று பிரமையூட்டும் உயிர்ப் படம். உயிரில்லை என்பதற்குச் சாட்சியாய், மணமாய், கும்மென்ற ஊதுவத்தி வாசம். அலையும் புகை. வாடாத ரோஜா மாலை.

அங்கிருந்து பிரதான ஹாலுக்கு வந்தார்கள். சுவரெங்கும் சிவராமன்.

அரை டிராயரும், தலைநிறைய முடியுமாய் கையில் பிடித்த கிரிக்கெட் மட்டையுடன் என்று தொடங்கி, ஒவ்வொரு படியாய் வளர்ந்து, நேற்றைய இனிய சிவா வரை.

கடைசிப் படத்தைப் பார்த்ததும் மதுமதிக்குத் திக்கென்றது.

சிவா அந்த அபாயப் பாறையின் உச்சியில் கால்களைப் பரப்பி நின்று கொண்டு வானம் பார்த்துப் புன்னகை செய்தான்.

''இங்கயா அங்கிள்?'' என்று கேட்கும் போது மதுமதிக்குக் குரல் கம்மியது.

''ஆமாம்மா. கடைசியா விஜி எடுத்த ஃபோட்டோ. எப்படி சிரிச்சிக்கிட்டிருக்கான் பாரு. நாந்தான் ராஜாங்கற மாதிரி....''

துவாரகா மாளிகையின் ஒவ்வொரு சதுர அங்குலமும் 'சிவா' 'சிவா' என்றது.

''மதுமதி, நீ இங்கயே வந்துட்டா, சிவராமே இங்க இருக்கற மாதிரி எங்களுக்கும் திருப்தி வரும். உனக்கும் சந்தோஷமா இருக்கும். என்ன சொல்ற?''

''வேணாம் அங்கிள்.''

''உன் இஷ்டம்மா. ஆனா நீ வர்ற வரைக்கும் இந்த வீடு உனக்காக மட்டுந்தான் காத்திட்டிருக்கும். தினம் இதை சுத்தப்படுத்திச் சீரா வச்சிக்க ஆளு போட்டிருக்கேன். இங்க தங்கறதுக்கு உரிமை இருக்கற ஒரே ஆளு நீதாம்மா.''

வெளியே வந்து காரில் ஏறிக் கொண்ட போது மதுமதிக்குக் குழப்பமாயிருந்தது. அவளுக்கு அப்பாவை, அம்மாவை, மீராவை, சத்துருவை எல்லாரையும் பார்க்க வேண்டும் போல் இருந்தது. முக்கியமாக திருவான்மியூர்த் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலிருந்தது.

''நான் உடனே மெட்றாஸ் போகணும் அங்கிள்'' என்றாள் மதுமதி, கண்களை மூடிக் கொண்டு.

கல்லூரிக்குள் நுழைந்ததுமே இவளைப் பார்த்து விட்டு ரம்யா ஓடிவந்தாள்.

''கங்கிராட்ஸ் மது. யூ ஹாவ் டன் இட்'' என்று கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

''பாஸ் பண்ணிட்டேனா ரம்யா?''

''பாஸா?'' நீதான் ஃபர்ஸ்ட். சாதாரண ஃபர்ஸ்ட் இல்ல. யூனிவர்சிடி ஃபர்ஸ்ட். ராஜதுரை மூஞ்செல்லாம் பல்லாக இளிச்சிட்டிருக்கார். போன தடவை நம்ம காலேஜுக்கு ராங்க் வரலையே. நீதான் இந்தத் தடவை நம்ம காலேஜ் மானத்தைக் காப்பாத்திட்டன்னு குதிச்சிட்டிருக்கார்.''

''நெஜமாவா ரம்யா?''

புரொஃபசர் ராஜதுரை உண்மையிலேயே முகம் நிறைந்த சந்தோஷத்துடன் அவளை வரவேற்றார். காப்பி வரவழைத்தார். சந்தோஷத்தை வார்த்தைகளில் எவ்வளவு தூரம் பகிர்ந்து கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் பகிர்ந்து கொண்டார்.

மதுமதிக்குக் கண்ணில் நீர் கோத்துக் கொண்டது.

'நீங்க சொன்ன மாதிரியே நான் யூனிவர்வர்ஸிடி ஃபர்ஸ்டா வந்துட்டேன் சிவா.'

அவர்களிடமிருந்து விடுபட்டவுடன் பரபரவென்று வெளியே வந்து பஸ்ஸில் ஏறினாள்.

திருவான்மியூர் செல்லும் பஸ்.

'என் சந்தோஷத்தை முதலில் உங்களுடன்தான் பகிர்ந்து கொள்ளப் போகிறேன் சிவா.'


மதுமதி நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

எதிரே அரைவட்டமாய் உட்கார்ந்திருந்த ஐந்து பேரையும் கண் தாழாமல் பார்த்துப் புன்னகை செய்தாள்.

இண்டர்வியூ முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று அவளுக்குப் புரிந்தது.

பெரிய கம்பெனி. பருத்தித் துணிகளை மிடியாகவும், சுடிதாராகவும், மாக்ஸியாகவும், ஃப்ராக் ஆகவும் மாற்றி அழகழகாய் டிசைன்களைப் பிரிண்ட் செய்து ஏற்றுமதி செய்வதில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கும் ஸ்தாபனம். உள்ளூர் வியாபாரத்திலும் காலை ஊன்றப் பொது மக்களுடன் தொடர்பு வைத்திருக்க வேண்டிய வேலைக்கு விண்ணப்பம் கேட்டிருந்தார்கள்.

"மிஸ் மதுமதி. யூ ஆர் செலக்டட்."





ஐந்து பேரில் டை கட்டியிருந்தவன் நிதானமாக அந்த வாக்கியத்தைச் சொன்னான்.

''தாங்க்யூ'' என்று எழுந்து கொண்டாள் மதுமதி.

''**நீ** ஒண்ணும் வேலைக்குப் போக வேண்டாம்மா. ரிடையர் ஆனவுடனே வர பணத்தை வெச்சி ஒனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிடலாம்னு இருக்கேம்மா.''

''அப்புறம் அம்மா, நீங்க, மீரா மூணு பேரும் என்னப்பா செய்வீங்க?''

''எனக்கு ஏதாவது வேலை கெடைக்காமயா போய்டும்?''

''இந்த வயசுக்கப்புறமும் நீங்க வேலை செய்யணும். நான் சும்மா இருக்கணும். அப்படித்தானேப்பா?'' மதுமதி அப்பாவிடம் ரோஷமாகக் கேட்டாள்.

''எனக்கென்னவோ ஒரு கவர்ன்மென்ட் உத்யோகம் போல இது அவ்வளவு ஸேஃப்டா இருக்காதுன்னு தோணுது.''

''சர்க்கார்ல ரெண்டாயிரம் ரூபா எடுத்தவுடனே சம்பளமாத் தரமாட்டாங்களேப்பா.

''பணமாம்மா பெரிசு?'' என்று கேட்கும் போது அவர் குரலில் அவருக்கே நம்பிக்கை இல்லை.

''இப்பப் பணம்தான் பெரிசுப்பா. ஏற்கெனவே வாங்கியிருக்கிற கடனையெல்லாம் அடைக்கணும். இப்பவே மீராவுக்குப் பத்தொம்பது வயசாகுது. இன்னும் நாலு வருஷத்தில அவளுக்கு ஒரு கல்யாணம் பண்ணி வைக்கணும். அதுக்குப் பணம் சேக்கணும்.''

''பேசாம சிவராமோட அப்பாக்கிட்ட ஒரு வார்த்தை சொன்னா அவரே, அவரோட கம்பெனியில இதே சம்பளத்துக்கு மெட்ராஸ்லயே ஒரு வேலை தருவாரே மது'' என்றான் கேட்டுக் கொண்டிருந்த சந்துரு இடையில் புகுந்து.

''சந்துரு திருப்பித் திருப்பி அதையே சொல்லாதன்னு சொல்லியிருக்கேன்ல? சிவா என்ன நம்ம கடனையெல்லாம் அடைக்கறதுக்காகவா பணக்காரனாப் பொறந்தார்? அவர் பணக்காரரா இல்லாம நம்பளைப் போல ஒரு மிடில் க்ளாஸ் ஃபேமிலியிலேர்ந்து வந்திருந்தா அவங்ககிட்ட இந்த மாதிரி ஹெல்ப்பெல்லாம் எதிர்பார்க்க முடியுமா? என்னால சுயமாச் சம்பாதிக்க முடியறப்ப, அதை விட்டுட்டு அவரோட சொத்துல குளிர் காயறது எனக்குப் பிடிக்கலை. இதோட இந்தப் பேச்சை விட்டுடு. இன்னொரு தடவை இப்படிப் பேசாத. ப்ளீஸ்..''

''ஸாரி மது.''

'**ஸி**ல்வர் ஜெம்ஸ்' கம்பெனியின் ஐந்து டைரக்டர்களில் ஒரு டைரக்டரான மித்ரா இன்றைக்கும் அகல டை கட்டியிருந்தான். மதுமதியைப் பார்த்ததும் அகலமாகப் புன்னகை செய்தான். எதிரில் இருந்த நாற்காலியைக் காட்டினான்.

''ப்ளீஸ் ஸிட் டவுன்.''

உட்கார்ந்தாள்.

''கங்கிராட்ஸ்'' என்றான் முகம் மலரச் சிரித்து. ''எங்க எல்லோருக்குமே திருப்தி. வேலைக்குச் சேர்ந்த பதினைஞ்சு நாள்ல நீங்க செய்ஞ்சிருக்கற விஷயங்கள் எங்களை அப்படிப் பேச வைக்குது.''

''தாங்க்யூ'' என்றாள் மதுமதி.

''எஸ்பெஷலி ஹிண்டுவில கொடுத்த அந்த அட்வர்டைஸ்மென்ட்னால கடைல எக்கச்சக்க ரஷ். உங்க ஐடியாவுக்கு ஸ்பெஷல் தேங்க்ஸ்.'' மித்ரா சீட்டிலிருந்து எழுந்து கொண்டான். கூரையை இடித்து விடுவான் போல உயரமாய் இருந்தான். ''அப்புறம் இன்னொரு விஷயம்'' என்றான் திடீரென நினைத்துக் கொண்ட மாதிரி.

''என்ன?''

''ஷண்முகம் சொன்னான். உங்க வீடு ராயப்பேட்டைல ஏதோ ஒரு பெட் லேன்ல இருக்காமே.''

''ஸோ வாட்?'' என்று கேட்டுப் புன்னகை செய்தாள்.

''இல்ல ஒரு பெரிய வீடாப் பாத்து நீங்க மாறிடலாமேன்னுதான்.''

''ஆமா.... அப்பாகூட சொன்னார். பாத்துக்கிட்டிருக்கோம். சீக்கிரமே மாறிடுவோம்.



வந்தவர்: லஞ்சம்தான், கொடுத்தாச்சே? அப்புறம், எதுக்கு, உண்டியலை நீட்ட றீங்க?

கிளார்க்: இது டிப்ஸ், சார்!

— ஆர். வசந்தகுமார்.

அறுநூறு எழுநூறு ரூபாய்க்குள்ள நல்ல வீடாக் கிடைக்கும்னா நீங்க கூட சொல் லுங்க.''

''ஸிடியிலேர்ந்து கொஞ்சம் தள்ளி இருந் தாப் பரவாயில்லையா?''

''ம்.''

''அப்ப நீங்க கவலையை விடுங்க. நான் பாத்துத் தரேன்'' என்றவன் அவளுடைய ஆச்சரியமான பார்வையைக் கவனிக்காமல் புஷ்டோரைத் தள்ளிக் கொண்டு வெளியே றினான்.

திருவான்மியூர்-சிவாவின் தோட்டம்.

'சுற்றி எங்கிலும் நெடுநெடுவென்று வீடு கள் வளர்ந்திருக்க, இயற்கைப் பொட்டல மாய் அந்தத் தோட்டம். அவற்றுக்கு இடையே மிக எடுப்பாய்த் தெரிந்தது. ரோஜாக்களின் முற்றுகை. வெளிர் சிவப் பில், வெளிர் நீலத்தில், வெளிர் மஞ்சளில் என்று உள்ளங்கை அகலத்திற்கு இதழ் விரித்த பட்டு ரோஜாக்கள் ஒருபுறம். நல்ல சிவப்பில், நீலத்தில், மஞ்சளில், ஊதாவில் என்று ஒருபுறம்.

மதுமதி ஒவ்வொரு செடியாய் நின்று நிதானித்துப் பார்த்தாள். சிவா விரும்பும் மெலிதாய் மணம் பரப்பும் பிங்க் ரோஜா ஒன்று குடும்பத்தில் இருந்து விலகித் தனி யாய்த் தலையை நீட்டி இருந்தது.

அதைப் பறித்தாள். தலையை இடப்புறம் லேசாய்ச் சாய்த்துக் குனிந்து பின்னந்தலை யின் மையத்தில் செருகிக் கொண்டாள். சிவா அவளுடன் பேசிய அந்த மறக்க முடி யாத வார்த்தைகள் நெஞ்சில் கடிகாரத்தின் பெண்டுலம் போல ஊஞ்சலாடின.

'நீங்க தப்பா நெனைக்கலேன்னா ஒண்ணு கேக்கலாமா மதுமதி?'

'கேளுங்களேன்.'

'நீங்க யாரையாவது 'லவ்' பண்றீங்களா?'

'இல்லையே ஏன்?'

'ரோஜாவை வலப்பக்கம் வச்சிருக்கீங் களே?'

'அதனால?'

'இடப்பக்கம் பூ வச்சா நாட்வெட் எங்கேஜ்ட்னு அர்த்தம். வலப்பக்கம் வச்சா எங்கேஜ்ட்னு அர்த்தம். பின்னாடி நடுவில வச்சா கல்யாணம் ஆய்டிச்சின்னு அர்த்தம்',

'ஐ.ஸி. அப்படின்னு யார் சொன்னாங்க?'

'நாங்க ஜெண்ட்ஸ்லாம் அப்படித்தான் பேசிப்போம். அது கரெக்டாவும் இருக்கு. முக்காவாசி கேஸ்ல.'

'அப்ப நான் பூவை இடப்பக்கமே வச்சிக் கறேன்.'

'ஸோ அப்ளிகேஷன் போட எனக்கு சான்ஸ் இருக்கில்லையா?'

'என்ன அப்ளிகேஷன்?'

'உங்க பூவை வலப்பக்கம் வச்சிக்கற மாதிரி பண்றதுக்கு. ப்ளீஸ்... ப்ளீஸ்... முறைக்காதீங்க. நான் ஏதாவது தப்பாப் பேசியிருந்தா மன்னிச்சிடுங்க...

சிவா. உங்களுக்காகவே நான் வலப்பக் கம் பூவை வைத்துக் கொள்ள ஆரம்பித் தேனே சிவா. அதையெல்லாம் இருந்து ரசிக் காமல், இப்படித் தனியாக இந்த உலகத்தில் தவிக்க விட்டுப் போய் விட்டீர்களே சிவா.

வீசிய காற்றில் பூக்கள் லேசாகத் தலையை ஆட்டின.

ரயில் தடக், தடக் என்று சுருதி மாறா மல் விரைந்து கொண்டிருக்க, கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீநாத் சிகரெட்டை ஒரு முறை ஆழமாய் உறிஞ்சினான். ஒரு கையை மட்டும் உயர்த்தி பிருத்விராஜை நிறுத்தச் சொன்னான்.

பிருத்விராஜ் கதையை நிறுத்தினான்.

''என்ன ஸ்ரீநாத்...?'' என்று கேட்டான்.

''சொல்லாதேப்பா... இதுக்கு மேல கதை யைச் சொல்லாதே...'' என்றவன் ஜன்னல் பக்கமாகப் பார்வையைச் செலுத்தினான்.

ரயிலுக்கு வெளியே இருட்டு. நட்சத்திரங் கள். தூரத்தில் தெரிந்த ஏதோ ஒரு கிராமத்து மண் பாதை. அதில் நடப்பட்டிருந்த விளக் குக் கம்பத்தின் நாற்பது வாட் விளக்கின் ஒளி. அந்த மங்கலான விளக்கு ஒளிக்குக் கீழே சோகமாய் உருண்ட ஒரு மாட்டு வண்டி.

ஸ்ரீநாத் திரும்பி பிருத்விராஜைப் பார்த் தான். கண்ணாடிக்குப் பின்னால் கண்ணீர் தெரிந்தது.

''என்ன ஸ்ரீநாத்?'' என்று பதறினான் பிருத்விராஜ். ஷில்பா, ''என்னங்க?'' என் றாள். ''தூசி ஏதாவது விழுந்திருச்சா?''

ஜூபிடர் ரத்தினம் ஆம்லெட்டை ப்ளாஸ்டிக் ஃபோர்க்கால் குத்தி, ப்ளாஸ்டிக் ஸ்பூனால் சாப்பிடுவதில் குறியாக இருக்க, ஸ்ரீநாத் அணிந்திருந்த கண்ணாடியை விலக் கினான்..

சுண்டு விரலால் நீரைச் சுண்டி விட்டான்.

''உன் மதுமதி கல்யாணம் ஆகாமயே வாழா வெட்டியா இருக்கா பிருத்வி...'' என்றான்.

பிருத்விராஜ் அவனைப் புரியாமல் பார்த் தான்.

ஸ்ரீநாத் ஹிப் – பாக்கெட்டிலிருந்து பர்சை எடுத்து விரித்தான்.


பிருத்விராஜிடம் காட்டினான். பர்ஸின் இடப்பக்கம் அந்தப் பெண்ணின் ஃபோட்டோ இருந்தது.

ஸ்ரீநாத் சுட்டு விரலால் அந்தப் பெண் ணைத் தொட்டான்.

''என் புனிதா. கல்யாணம் ஆனப்பறம் வாழா வெட்டியா இருக்கறவ'' என்றான்.

(தொடரும்)

உயர்தரம்! அதுவே வீனஸ் அமைப்பின் மந்திரம்!



சென்ற 27 ஆண்டுகளாக முன்னணியில் நிற்கிறது வீனஸ் வாட்டர் ஹீட்டர்...

உள் இணைந்த தரம் :
(Built-in Quality)
பல குறைந்த விலை வாட்டர் ஹீட்டர்களைப்போல் பல்வேறு இடங்களில் வாங்கிய உறுப்புகளை ஒன்று சேர்த்து உருவாக்காமல், தேவையான பாகங்களைத் தாமே தயாரித்து தரமுடன் அளிப்பது வீனஸ். அதனால்தான் 10 முதல் 50 லிட்டர் வரை உள்ள எல்லா மாடல்களுக்கும் ISI முத்திரை பெற்றுள்ளது. பழுதற்ற, நீண்ட கால உன்னத உழைப்பை அளிப்பது வீனஸ்.

உள் இணைந்த பாதுகாப்பு :
(Built-in Safety)
வீனஸில் 'ஃப்யூஸிபிள் ப்ளக்', 'பிரஷர் ரிலீஸ்', 'வேக்வம் ரிலீஸ் வால்வு'- போன்ற பாதுகாப்பு அம்சங்கள் தொழிற் சாலையிலேயே பொருத்தப் படுகின்றன. இவை முழு பாதுகாப்பை அளிக்கின்றன. இதர வாட்டர் ஹீட்டர் களில் இந்த அம்சங்கள் இரண்டாம் பட்சமாக, தனியாகப் பொருத்தப்படுகின்றன.

IS: 2082
ISI

அனுபவத்தில் விளைந்த திறமை :
27 ஆண்டு கால தொழில் அனுபவம் வீனஸ் தயாரிப்பை மெருகேற்றுகிறது.

சேவையில் உயர்வு :
நாடெங்கிலும் பரவியுள்ள வீனஸ் விற்பனை நிலையங்கள், விற்பனைக்குப்பின் ஏற்படும் தேவையான சேவையை திறமையுடன் உடனடியாக கவனிக்கின்றன.

தேவைக்கேற்ற ரகங்கள் :
உங்கள் தேவைக்கேற்ப நீள வாட்ட மாடல், குறுகிய மாடல், அகலவாட்ட மாடல்கள் 10, 25, 35, 50, 70, 100 லிட்டர்கள் அளவில் உள்ளன.


என்றும் முன்னணியில் உள்ளது — வீனஸ்.

வீனஸ்
வாட்டர் ஹீட்டர்

தயாரிப்பு மற்றும் விற்பனை :
ஸ்டாண்டர்ட் எலக்ட்ரிக் அப்ளையன்ஸஸ்
மத்திய மார்க்கெடிங் ஆபீஸ் :
S-2, கிரீன் பார்க் எக்ஸ்டென்ஷன், புதுடெல்லி 110 016.

தலைமை அலுவலகம் & தொழிற்சாலை :
தூத்துக்குடி, தமிழ்நாடு.
கிளைகள் : சென்னை • பெங்களூர் • கல்கத்தா • பம்பாய்.

ADWAVE/SEA/3603 TAM


nutrine
BISCUITS
MILK
நன்மை செய்வீர்...உங்கள் உடலுக்கு!
நியூட்ரின் மில்க் பிஸ்கட் – இதன் எடையளவுக்கு ஆரோக்கியமும் சக்தியும் நிறைந்தது. இதில் பாலின் அத்தனை போஷாக்குகளும் அடங்கி உள்ளன. விரும்பிடும்போதெல்லாம் சுவைத்து, வழங்கிடுங்கள் உடலுக்கு ஒரு புதிய ஊட்டம்; உணர்ந்திடுங்கள் உடற்பலனை அதனின் மூலம்.
நன்மைகள் நிறைந்தது... ஆரோக்கியம் மிகுந்தது.
nutrine
BISCUITS
SPEER 21 101 88 A Tam

செம்பியனா, சாம்பியனா?

• 'குறைந்த முதலீடு — வாழ்நாள் முழுவதும் வருமானம்' — கவர் ஸ்டோரி, இவ்வாரக் கல்கியின் மிகப் பயனுள்ள அம்சம். இத்தொழிலைத் தொடங்குபவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு உகந்த ஊக்குவிப்பாகவும் அமைந்திருந்தது. சில்ட்ரன்ஸ் கார்டன் ஸ்கூல் பண்ணைக்கும், கல்கிக்கும் இதயபூர்வமான நன்றி.

தோப்புத்துறை. கே. ஆனந்த்.

• தேனீ வளர்ப்பது எப்படி, அதனால் ஒருவருக்கு எவ்வளவு லாபம் போன்றவற்றைப் பற்றித் தாங்கள் தந்த கட்டுரையை ஒரு தனிப் புத்தகமாகவே அச்சிட்டு வெளியிடலாம். அவ்வளவு சிறப்பாக அமைந்திருந்தது.

லால்குடி. எம். இராஜேந்திரன்.

• 'கூட்டணி தர்பாரில்,' காணப்படும் குறைகளை 'நறுக்கருக்'கென்று நகைச்சுவையோடு கூறியுள்ள செம்பியன், நிச்சயமாய் அரசியல் சாம்பியன்தான்!

நரேந்திர தேவ் நகர்,

பொற்கொல்லன்.

• மதிப்பிற்குரிய மூன்று எதிர்க்கட்சித் தலைவர்களான வி. பி. சிங்., கலைஞர் கருணாநிதி மற்றும் என். டி. ஆர். ஆகியோரை நமது செம்பியனார் பேட்டி எடுத்துத் திணற அடித்ததைக் (கற்பனையாகத்தான்) படித்து ரசித்து மகிழ்ந்தேன்.

பெங்களூர் — 21. ப. மூர்த்தி.

• ஆண்டுக்கு ஆண்டு பாரத அரசு வாங்கும் கடனால் — அதைச் சரிவர உபயோகிக்காததனால் ஏற்படும் நஷ்டங்களால், சராசரிக் குடிமகன்தான் அதிகம் பாதிக்கப்படப் போகிறான்' என்பதைத் தெளிவாக விளக்கியது 'தி வா லா நிலைமையை நோக்கி...' தலையங்கம்.

பெங்களூர் — 53. 'தாரகை.'

• இந்திய அரசின் கடன் வாங்கும் போக்கினைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். இதனால் வரிச்சுமையும், பணவீக்கமும் ஏற்படுவதோடல்லாமல், நமது நாணயத்தின் மதிப்பும் குறையும் என்பது சராசரி மனிதனுக்கே தெரியும் போது, பிரதமர் மட்டும் விவேகமாய்ச் செயல்படாததுதான் ஆச்சரியம்.

சென்னை — 79. சிறுமுகை

சி. எஸ். வடிவேல்.

• கலைஞரின் புகழ் வானளாவ(?) உயர்ந்திருக்கிறது எனக் கார்ட்டூன் போட்டிருக்கிறீர்களா அல்லது இந்தப் புகழ் வெறும் காற்றடித்த பலூன்தான்—இந்திரா காங்கிரஸ் என்ற ஊசி குத்தினால், புஸ் என்று போய்விடும் எனக் கார்ட்டூன் போட்டிருக்கிறீர்களா? ஒன்றுமே புரியவில்லையே!

திருவனந்தபுரம்,

எஸ். எஸ். மணி.

• அகில இந்திய எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கருணாநிதியைஒருமாபெரும் தலைவர் என்ற உயர்ந்த அந்தஸ்துக்கு உயர்த்தி விட்டார்கள் என்பதை விளக்கிய கார்ட்டூன் சூப்பர்!

வேலாயுதம்பாளையம்,

எம். குணசேகரன்.

• 'இறைவன் எங்கும் இருக்க முடிவதில்லை; அதனால்தான், தாயைப் படைத்திருக்கிறான்' என்ற பொன்மொழிக்கு உயிரோட்டம் கொடுக்கும் வகையில் 'பாரம்' சிறுகதை அமைந்திருந்தது அருமை!

கும்மிடிப்பூண்டி,

என். சாமிநாதன்.

• "நோயாளிகள்" கதை சிறப்பாக இருந்தது. அறிமுக எழுத்தாளர் அழகியசிங்கருக்கு என் பாராட்டுக்கள்; எளிய நடை; யதார்த்தமான எழுத்து; பருவ வயதுச் சிறுவனின் இரண்டுங்கெட்டான் மனநிலையை அச்சிறுவனின் மனப்போக்கிலேயே வெளியிட்டிருந்தது அருமை.

சென்னை — 17. இரா. சிவராம்.

• காங்கிரஸ் — ஜனதா பற்றிய 'நகைச்சுவை'த் துணுக்கைப் படித்தேன்! ஒரு குறிப்பிட்ட கட்சியைக் கிண்டல் செய்வதானால் கார்ட்டூன் மூலம் செய்யலாம்! தாக்கி எழுதுவதென்றால், இருக்கவே இருக்கிறது, தலையங்கம் — பகுதி. இவையிரண்டினையும் விட்டு விட்டு, நகைச்சுவையில் போய் கட்சிகளைக் கிண்டல் செய்திருப்பதை, ரசிக்க முடியவில்லை!

குத்தாலம். வி. சுந்தரராமன்.

• 42—வது பக்கத்தில் வெளியானது வெறும் சிரிப்புத் துணுக்கு அல்ல; சிந்தனைத் துணுக்கு ஆகும். ஒரு பெரிய ஆளும் கட்சியின் நிலையையும் — குறையையும் ஒரு பெரிய எதிர்க்கட்சியின் குறையையும் அருமையான யுக்தியால் அழகாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கிறது. நிலைமை அப்படித்தானே இருக்கிறது. இ. காங். கட்சியில் எவ்வளவு தவறுகள் நடந்தாலும் அல்லது இ. காங். ஆட்சி எவ்வளவு பெரிய தவறுகளைப் புரிந்தாலும் கண்டு கொள்ளாமல் செய்த தவறை நியாயப்படுத்தவே முனைகிறார்கள். அதேபோல ஜனதா கட்சியில் எவ்வளவு சிறிய தவறுகள் நடந்தாலும் அந்தத் தவறுகளை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்ல மாற்றுக் கட்சிக்காரன் தேவை இல்லை; அதைப் பெரிதுபடுத்த அவர்களே போதுமே!

கொளத்தூர்,

எஸ். சி. துரைசாமி.

• சாதனை படைப்பது சாதாரண செயலல்ல; சாதனைக்கு உயிரைத் துச்சமாக மதிக்கும் சாமர்த்தியம் தேவை. உயிரையே பணயம் வைத்துச் சாதனை படைக்கத் தனியொரு மனிதனாக மைக்ரோலைட் விமானம் மூலம் 23 நாட்கள் பயணம் செய்த தொழிலதிபர் விஜய்பட் சிங்கானியா போன்றவர்களை நினைக்கும்போது, இந்தியன் என்று சொல்லிக் கொள்வதற்கே பெருமையாக இருக்கிறது.

தக்கோலம். ஆ. புகாரி.

• 'பிருந்தா சுந்தர்ராமன்' சிறுகதை படித்தேன். 'குழந்தை ஒன்றுக்கும் போய்ட்டானா, இரு! நான் கருணையை எடுத்துத் துடைத்துவிடுகிறேன்; நீ எழுது; நீ படி; நீ ஓவியம் தீட்டு' என்று சொல்லும் முதல் ஆணை நாம் இன்னும் சந்திக்கவே இல்லை.— மேற்கண்ட வரிகளைப் படித்த பொழுது மிகவும் உணர்ச்சிவசப்பட்டேன்.

நாமக்கல். எம். வேலு.

மகன்

மும்தாஜ்யாசீன்

எப்போதும் முரளி வருவதற்கும், இதற்கும் வித்தியாசம் இருந்தது.

சிரித்த முகம் இல்லை; அம்மா என்ற அழைப்பு இல்லை; கலகலத்த பேச்சு இல்லை. உம்மென்று வந்தான். ஆயாசமாக உட்கார்ந்தான். ஒப்புக்காகப் பேசினான்.

"உடம்புக்கு சரியில்லையாப்பா?"

"என்ன கேடு.... நல்லாத்தான் இருக்கேன்!" முகத்தை, நிமிர்ந்து பார்க்காமல் வார்த்தைகள் மட்டும்....

'சுருக்'கென்று குத்தினாலும் சமாதானப் படுத்திக் கொள்ள வேறு யோசனைகள் வந்தன விசாலத்திற்கு. நூறு கிலோ மீட்டர் தூரத்தில் உத்தியோகம். வாரத்திற்கு ஒரு நாள் வருகிறவன். பிரயாண அலுப்போ அல்லது ஆபீஸில் ஏதும் பிரச்னையோ என்றிருந்தது அவளுக்கு.

கொஞ்ச நேரம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள், "உடுப்பு மாத்திட்டு வா..... சாப்பிடலாம்" என்றாள்.

உள் அறை நிலைப்படியில் சுமதி நின்றிருந்தாள். முரளி அருகில் வர பிரிவில் ரொம்பவும் வாடிப் போன மாதிரி பார்த்தாள் "கண்ணு ஏன் இப்படி உள்ற போயிக் கெடக்கு.... சாப்பிடறது இல்லையா?" அவனுக்கு வழி விட்டு ஒதுங்கித் தானும் பின்னே சென்றாள்.

"ஹோட்டல்ல சாப்பிட்டா இப்படித் தான்....." அவன் ஏதோ சொல்வது கேட்டது.

ஹோட்டல் சாப்பாட்டிற்கு கண்கள் உள்ளே போய் விடுமா? மனைவி ஸ்தானத்திற்கு அவள் வந்து ஆறு மாதங்கள் கூட ஆகவில்லை. ஆறு வருஷங்களாக அதே ஊரில்தா . வேலை பார்க்கிறான். இளம் வாலிபனாகச் சென்று, மீசை வளர்ந்து, ஆளாகி, "கையில ஒரு நல்ல ஜாதகம் வந்திருக்கு. பார்க்கிறேளா?" என்று நாலு பேர் அணுகுகிற நிலைக்கு உயர்ந்து......

இப்போது மட்டும் என்ன ஆகி விடும்?

இரண்டு மாதமாகவே அவன் இந்த இனுசில் பேசுவது விசாலத்திற்கு ஞாபகம் வந்தது. தேர்ந்து எடுத்த மாதிரி வார்த்தைகள்.

— பஸ்ஸிலே வர்றதுன்னா அலுப்பா இருக்கும்மா.....

— மெஸ் சாப்பாடு ரொம்ப மோசம்மா. உடம்புக்கு ஒத்துக்க மாட்டேங்குது.

— நேத்திக்கு எங்க மேனேஜர் கேட்கிறாரு. எப்பய்யா தனிக்குடித்தனம்னு....

மகனுடைய நோக்கம் என்னவென்று புரிந்தாலும் விசாலம் பதில் எதுவும் சொல்லவில்லை.

தனிக்குடித்தனம் வைப்பதில் அவளுக்கு மறுப்பு எதுவும் இல்லை. சின்னவனுக்கு ஒரு வேலை கிடைத்து, ரெண்டு காசு கொண்டு வா ஆரம்பித்தால் 'மகராசனாப் போய்ட்டு வா...' என்று அனுப்பி விடலாம். அதுக்குள்ள இந்த ரெண்டுகளும் ஏன் இப்படி அவசரப்படுதுக?

அவள்தான் யாரோ ஒருத்தி. குடும்பத்தை விட தனது சுயநலத்தை முக்கியமாக நினைக்கலாம். நிலைமை தெரிந்தும் இவனும் ஏன் ஆடுகிறான்?

உள்ளே பேச்சு ஓய்ந்தது.

முரளி லுங்கியைக் கட்டிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தான். சுமதி பரிமாறத் தலை குனிந்து சாப்பிட்டான்.

இன்டர்வியூ விஷயமாக சுரேஷ் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

'அண்ணன்ட்ட சொல்லும்மா. ரெண்டாயிரம் கேட்கிறாங்க.... கண்டிப்பா கெடச்சிரும்......'

சுமதி இருக்க, சொல்லவும் தயக்கமாக இருந்தது.

கல்யாணத்திற்குப் பிறகு பிள்ளை கூட அன்னியன், தடைச் சுவராய் மனைவியை எதிரில் நிறுத்துகிறவன்.

"சாதம் போட்டுக்குங்க....."

"போதும்......"

"புடலங்காய்க் கூட்டு, பிடிக்குமேன்னு செஞ்சு வச்சேன்......" குரலில் தேன் தடவி இருந்தது.

"சரி.... கொஞ்சம் போடு......" அவள் பெரிய கரண்டியில் வழித்து விட, "ஏய்.... என்ன இது? சாப்பாட்டு ராமன்னு நினைச்சுட்டியா?" — பெரியதாகச் சிரித்தான்.

"இருக்கட்டுமே..... வயித்துக்குச் சாப்பிடறதுல என்ன கணக்கு?" — அவளும் சிரித்தாள்.

"நீ சாப்பிட்டியா....."

"இல்ல..... நீங்க வரட்டுமேன்னு இருந்தேன்."

"எத்தனை தடவை சொல்லியிருக்கேன். எனக்காகக் காத்திருக்க வேணாம்னு...." செல்லமாய்க் கடிந்து கொண்டு, "ஏம்மா.... நான் சொல்லலை?" எனத் திரும்பினான்.

தன்னிடம் பேசும் போது மட்டும் அவனது குரலில் ஏதோ துல்லியமான மாற்றம் இருப்பதை உணர்ந்தாள் விசாலம். அலுப்பு, 'அம்மாதானே' என்ற அலட்சியம், குடும்ப ஆதாரமாய் இருக்கிற அதிகாரம்......

'இருக்கட்டும்..... சின்னவனுக்கு ஒரு வேலை கிடைச்சுட்டா அப்புறம் இவனை ஏன் தொல்லை பண்ணப் போறேன்?'

முரளி சாப்பிட்டு எழுந்தான். செயற்கையாய் 'ஹாவ்' என்று கொட்டாவி விட்டான். "பெட் போட்டுட்டியா.... தூக்கம் வருது.... சுமதிக்கு மட்டும் புரிகிற மாதிரி பார்த்தான்.

"படுங்க... யாரு வேணாம்னது?" அதில் உள் அர்த்தம் எதையும் அறியாதவன் போல

அவள் பதில் சொல்ல.....

சின்னவனைப் பற்றிப் பேச இது தருணம் அல்ல என்று தோன்றியது விசாலத்திற்கு.

கண்களை மூடிக் கொண்டாலும் உறக்கம் வர மறுத்தது விசாலத்திற்கு.

''எப்படிம்மா இருக்கே என்று ஒரு வார்த்தை கேட்டானா? பெண்டாட்டியை சாப்பிடச் சொன்னவன் தன்னை ஒரு வார்த்தை கேட்டால் என்ன குறைந்து போகும்?''

சம்பந்தமில்லாமல் தனது 'ஆம்பிளை'யின் ஞாபகம் வந்தது அவளுக்கு.

எட்டு ஊர் ஜமீனிலும் யாரும் பார்த்தறியாத மாப்பிள்ளைதான் அவர். பந்தயக் காளை மாதிரி தோற்றம். முரட்டு மீசை. உருவத்தோடு சம்பந்தம் இல்லாத குணம். பச்சைக் குழந்தை கூட தொட்டு விளையாடலாம். அத்தனை சாது. விசாலத்தைத் தள்ளி நில் என்று சொன்னதில்லை. சப் ரிஜிஸ்திரார் ஆபீஸ் எதிரே கீற்றுக் கொட்டகை தான் தொழில் கேந்திரம். பத்திரம் எழுதுகிற வேலை. 'இன்னதுக்கு இன்னது' என்று விவரம் கொடுத்துவிட்டால் போதும். சரசரவென்று சங்கிலிக் கோர்வையாய் எழுத்துக்கள் ஓடும். ''எப்படித்தான் இந்த மனுஷருக்கு இவ்ளோ அழகா எழுத வருதோ?'' என்று அவளே வியப்படைந்தது உண்டு. தொழில் சகாக்கள் ''பெரிசு வந்தாச்சா.... அம்புட்டுத் தான்'' என்று அலுத்துக் கொள்வார்கள். சுற்று வட்டாரத்தில் அவ்வளவு கீர்த்தி.

யாருடைய பொல்லாத கண்ணோ?

சட்டென்று விளக்கு அணைந்து போயிற்று. ''சீக்கிரமா வர்றேன்... பண்டிகைக்குத் துணிமணி எடுத்திரலாம்....'' என்று சொல்லிப் போன மனிதர் வீடு திரும்பவில்லை.

கைக்காசு கொஞ்ச நாள் தாங்கியது. ''இனி என்னடி பண்ணுவே?'' என்ற கேள்வி எழுந்தது. சின்னஞ் சிறுசுகளை வைத்துக் கொண்டு என்னதான் பண்ணுவாள்? பழையவற்றைக் கனவு மாதிரி ஒதுக்கி



அருள்வாக்கு



ஒரு பாத்திரத்தை அலம்பும்போது கடைசியிலே சுத்த ஜலத்தை மட்டும் விட்டு, முதலிலே சுத்திக்குப் பிரயோஜனமான புளி, மண் முதலானவற்றின் சோது, தூள் முதலியவை இல்லாமல் அப்புறப்படுத்துகிறோமென்பதோடு, முதலிலே மண்ணையும் புளியையும் போட்டுத் தேய்க்கிற போது கூட அவற்றோடு சுத்த ஜலத்தைக் கொஞ்சம் சேர்த்துக் கெட்டியாகக் கரைத்துக் கொண்டு தானே தேய்க்கிறோம்? அந்த மாதிரி, மனோ இந்த்ரியாதிகளால் கர்மாக்களைச் செய்கிற காலத்திலுங்கூட ஆத்ம சிந்தனைத் தீர்த்தத்தைக் கொஞ்சம் இவற்றில் தெளித்துக் கொள்ளத்தான் வேண்டும். ஆரம்பத்திலிருந்தே அநேக கர்மாக்களுக்கிடையிலும் த்யானத்துக்கென்று, ஆத்ம விசாரத்துக்கென்று கொஞ்சம் காலம் ஒதுக்கத்தான் வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

விட்டு எழுந்து உட்கார வேண்டிய தருணம் வந்தது.

இட்லி சுட்டு விற்றாள். நெல் அவித்துக் கொட்டினாள். பள்ளிக் கூடத்திற்கு எதிரே தின்பண்டக் கடை வைத்தாள்.

'எம் புள்ளைக படிக்கட்டும். பழைய நல்ல காலம் வருதா இல்லையான்னு பார்க்கிறேன்....'

முரளிக்கு எப்படியோ ஒரு வேலை கிடைத்தது. நாலு காசு கையில் புழங்கச் சற்று ஆசுவாசமான மூச்சு. சின்னவனும் நன்றாகவே படித்தான். 'ம்.... பெரியவனுக்கும் வயசாயிகிட்டே போகுது. கல்யாணம் பண்ணி வைக்க வேண்டியதுதான்' என நினைத்தது என்ன நேரமோ?

நல்ல இடம் வாய்ப்பது கஷ்டமாக இருந்தது. வாய்த்த ஒன்றிரண்டு இடங்களும் நழுவிப் போயிற்று. 'பரவாயில்லை.....' என்று சொல்லத்தக்கதாக சுமதியின் ஜாதகம் மட்டுமே மிஞ்சியது. சுமாரான இடம். மூன்று பெண்களுக்குக் கல்யாணம் பண்ணி ஓய்ந்து போன குடும்பத்தில் நான்காவதாக இருந்தாள்.

'இருக்கட்டும்மா..... அங்க குடுத்துத்தான் நிறையப் போகுதா....? நம்ம கையைக் கொண்டுதான் நாம் முன்னேறணும்....' என்று முரளி சமாதானம் சொன்னான்.

விசாலமும் தனக்குள் ஒரு கணக்குப் போட்டாள். 'கஷ்டப்பட்ட குடும்பத்திலிருந்து வர்ற பொண்ணு அடங்கிப் போவாள்....'

புருஷனை முந்தானைக்குள் முடிந்து கொள்வதற்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை என்பது கல்யாணத்திற்குப் பிறகுதான் தெரிந்தது.

இரண்டாவது மாதம் என்று அவளுக்கு நினைவு.

ஒருநாள் திடீரென்று அவளது அண்ணன் பெட்டி படுக்கைகளுடன் வீட்டிற்குள் நுழைந்தான். முரளியைப் போலவே வெளியூரில், உத்தியோகம் பார்க்கிறவன்தான் அவனும். லீவோ, அவசரக் காரியமோ இல்லாத அத்தருணத்தில் அவனைப் பார்த்தது சற்று அசாதாரணமாகவே இருந்தது விசாலத்திற்கு.

''வாப்பா.... என்ன திடீர்னு?'' — வாய் விட்டுக் கேட்கவும் செய்தாள்.

''சும்மாதான் அத்தை. தங்கச்சியைப் பார்த்துட்டுப் போகலாம்னு.''

சம்பந்தி வீட்டுப் பையனை அதற்கு மேல் என்ன கேட்க முடியும்? அன்று மாலையே முரளியும் வந்ததுதான் அவளுக்கு மேலும் ஆச்சரியத்தை உண்டாக்கியது.

''வா..... வா.....'' என எதிர்பார்த்த மாதிரி அவனை வரவேற்றதும், வந்த அலுப்பைக் கூட பார்க்காமல் கடை வீதிக்கு அழைத்துப் போனதும், வீட்டில் சுமதி இருவருக்கும் வேண்டிய துணிமணிகளை சூட்கேஸில் அடுக்கியதும்......

''என்னப்பா...?''

''ஊர் போறோம்மா...''

''எந்த ஊருக்கு...?''

''ராமேஸ்வரம், கன்யாகுமரி...''

பொட்டில் அறைந்த மாதிரி இருந்தது விசாலத்திற்கு. இவ்வளவு பெரிய விஷயத்தையா சொல்லாமல் மறைத்திருக்கிறான்? புருஷனும் மனைவியும் திட்டம் போட்டு, தேதி குறித்து, அவளது அண்ணனை வரச் சொல்லி...

மச்சினனை அழைத்துப் போகிறவனுக்கு தன்னுடனேயே இருக்கும் தம்பியைக் கூட்டிக் கொண்டு போக வேண்டும் என்று ஏன் தோன்றவில்லை?

தனது நம்பிக்கையில் விழுந்த முதல் அடியைத் தாங்க முடியாமல் சுருண்டு உட்கார்ந்தாள்.

அதன் பிறகு அத்தகைய தருணங்கள் நிறையவே வாய்த்தன.

— கைச்செலவுக்கு என்று சம்பளத்தில் ஒரு கணிசமான தொகையைச் சுமதியிடம் கொடுப்பதில்,

— கட்டுப்படியாகலைம்மா என்று சுரேஷின் படிப்பை நிறுத்தியதில்,

— அவனை ஏதாவது வேலைக்குப் போகச் சொல்லும்மா. சும்மா ஊரைச் சுத்திகிட்டு இருக்கப் போறான் — என கண்டிப்பதில்...

சமீபத்தில் தனிக்குடித்தனம் போய்விட வேண்டும் என்ற எண்ணமும் வந்துவிட்டது. இனி எங்கே போய் நிறுத்தப் போகிறதோ?

என்ன பூர்ணம் சார்,
நீங்க ஏன் எப்போதுமே
"பிஸ்லேரி கிளப் சோடா"வையே
குடிக்கிறீங்க?



சோடான்னா, தண்ணீரும் கார்பன்-டை-ஆக்ஸைடும் சேர்ந்து தயாரிக்கிறதுதான். அந்த தண்ணீரிலே நம் உடலுக்கு உபாதை தரும் எவ்வேளவோ கிருமிகள் இருக்குங்கறதை தெரிஞ்சவா எத்தனை பேர்? ஆனா, சென்னை பாட்லிங் கம்பெனியில் குடி தண்ணீரை "ரிவர்ஸ் ஆஸ்மாஸிஸ்" என்ற நவீன சுத்திகரிப்பு முறையால் மறுபடியும் நன்றாக சுத்தம் செய்து சோடாவை தயாரிக்கறாங்க. அதை நானே பார்த்தேன். அதனாலேதான் "பிஸ்லேரி கிளப் சோடா"வை நான் எப்பொழுதும் விரும்பி குடிக்கிறேன்.



"Bisleri CLUB Soda"

தயாரிப்பாளர் :

சென்னை பாட்லிங் கம்பெனி லிட்.
423, பூந்தமல்லி நெடுஞ்சாலை
சென்னை — 600 106.
தொ.பே. 420440, 420755, 425150.

200 கோடி ரூபாய்
புழக்கமுள்ள சக்தி குழுவின்
ஓர் அங்கம்.

"பார்க்கலாம்... என்னைப் படைச்ச ஆண்டவனுக்குக் காப்பத்தறது எப்படின்னு தெரியாமலா இருக்கும்...

"அம்மா... அம்மா..." — தடதட வென்று வாசல் கதவு அதிர்ந்தது. சுரேஷ்!

"வர்றேன்... பொறு..."

விசாலம் எழுந்தாள்.

"அண்ணன் வந்திருச்சா?" கதவைத் திறக்க, உள்ளே வந்தான்.

"ம்..."

"சொன்னியாம்மா..."

அவனது கேள்வியைத் தவிர்த்து, "ஏன் இவ்ளோ நேரம்?" எனக் கேட்டாள்.

"கடை அடைக்கிற நேரத்தில் ஒரு பார்ட்டி வந்தான். கவனிச்சு அனுப்பறதுக்குள்ளே லேட்டாயிடுச்சு. அண்ணன் என்ன சொன்னாரு?"

"அவனும் இப்பத்தான் வந்தான். காலையில் சொல்லிக்கலாம்னு இருந்திட்டேன்."

முகம் சோர்ந்த மாதிரி ஆகி விட்டது... சாப்பிடுகிற வரை எதுவும் பேசவில்லை.

"சாம்பார் போட்டுக்க. கிண்ணத்துல மோர் வச்சிருக்கேன். எடுத்துக்க..."

எதிலும் சுவாரஸ்யம் இல்லாதவன் போலப் பார்த்தான். இந்த நான்கு மாத மாகத்தான் கடைக்குப் போகிறான். நூற்றைம்பது ரூபாய்க்கு முதுகு ஒடியக் கணக்கு எழுதி, நடு இரவில் வீடு திரும்பி...

பெரியவனாவது பரவாயில்லை. சின்ன வயதில் கஷ்டப்படும்படி நேரவில்லை. 'அவர்' இறந்த போது சுரேஷ் கைக்குழந்தை. கண்விழித்த நாள் முதலாய்ச் சிரமப்பட்டு, வளர்ந்து, இன்னும் தீராத சுமையாய்...

வாடிய அவனது முகத்தைப் பார்க்க, அவளுள் சன்னமாகத் துக்கம் படர்ந்தது. "ம்... யாரு காலம்தான் நிக்குது... எல்லாருக்கும் ஒரு நல்ல நேரம் வரும்..."

சுரேஷ் வெளித் திண்ணையில் பாய் போட்டுக் கொண்டான்.

விசாலத்திற்கு வெகுநேரம் வரைக்கும் தூக்கம் வரவில்லை. எதிர்காலத்தைப் பற்றிய பயம் நெஞ்சில் உறைய, அக்கம் பக்கம் ஊர் நடப்பு என்று ஏதேதோ நினைவுக்கு வந்தன.

மருமகள் விஷயத்தில் எந்தக் குடும்பமும் மணக்கவில்லை போலவே இருந்தது. "அம்மாவுக்கு அனுசரிச்சுப் போகத் தெரியலை," எனக் குறை சொல்லும் மகன்கள். "பொண்டாட்டி முந்தானையைப் புடிச்சுக்கிட்டு அலையறான்" என வயிறெரியும் மாமியார்கள்...

தான் எதில் சேர்த்தி?

கூட்டுக் குடும்பத்தில்தான் வாழ்க்கைப் பட்டாள். மூத்த அண்ணி முதலில் போர்க் கொடி தூக்கினாள். "எல்லாத்துக்கும் பொங்கிப் போடணும்னு எனக்கென்ன தலையெழுத்து? சின்னவரு மைனர் மாதிரி சுத்திட்டு வருவாரு. இவரு சம்பாரிச்சுக் கொட்டணும். ஏமாளி ஆம்பளைன்னு நினைப்புப் போல..."

சின்னச் சின்ன சண்டைகளுக்குப் பிறகு மூன்று மாதம் கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டில் போய் இருந்தாள்.

பிரிவினையாயிற்று.

பெரிய அண்ணி உள்ளூரிலும், விசாலம் டவுனிலும் குடியேறினார்கள்.

அதன் பிறகு மாமியார் குடும்பத்தோடு அதிக உறவு இல்லை. ஏதோ நல்லது கெட்டதிற்குப் போய், கண்டால், 'சௌக்கியமா?' என விசாரித்து, குடும்பம் பெருக, தனி மரமாய் வேரூன்றிக் கிளை பரப்பி......

மாமியார் இருந்த வரைக்கும் புலம்புவாள்: 'மரம் வளர்த்தேன். நிழல்ல உட்காரத்தான் குடுப்பினை இல்லை எனக்கு...'

அதைச் சொல்லும்போது, சொல்லொணா சோகத்தில் இருக்கிற மாதிரி அவளது முகம் ஆகிவிடும். விசாலத்திற்குப் பிடிக்காத பாவனை அது.

"உங்கம்மாவுக்கு என்ன குறை? இப்படி நாலு பேரு கேட்கிற மாதிரி புலம்புது..." என புருஷனிடம் கேட்பாள்.

இன்றைக்குச் சரித்திரம் திரும்புகிறதா முரளியின் வடிவத்தில்.

"அம்மாவ்..." — முரளி அழைத்த போது விடிந்திருந்தது. கூரைக் கண்ணாடியில் வெளிச்சமான வானம்.

வாரிச் சுருட்டி எழுந்தாள்.

"நாங்க ஒரு கல்யாணத்துக்குப் போகணும்மா. வர லேட் ஆகும்... சமைக்க வேணாம்..."

"யாருக்கு?"

"ஃபிரண்டு ஒருத்தன். சொன்னா உனக்குத் தெரியாது..."

உள்ளே சுமதி குளித்து உடுப்பு மாற்றிக் கொண்டிருந்தாள். புருஷன் சொன்னதைக் கேட்டுத் தனக்குள் சிரித்துக் கொள்வதைப் போல இருந்தது. தான் கட்டி வைத்த பெண் தானா இவள்? தலைகுனிந்து நமஸ்கரித்து... இத்தனை விஷமத்தை எங்கே ஒளித்து வைத்திருந்தாள்?

"வாரத்துக்கு ஒருநாள் வர்றே. வீட்லே இருக்கப்படாதா?"

"ஒருநாள்ங்கிறதாலதான் ரெண்டு பேரும் வெளியே போக வேண்டியதா இருக்கு."

வெடுக்கென்று வார்த்தைகள் வந்தன. சூடுபட்டவளைப் போலப் பார்த்தாள். அவனை எதுவும் பாதித்ததாகத் தெரியவில்லை. "என்ன ரெடியா?"

"ஆச்சுங்க..."

"கிளம்பு... வர்றேம்மா..." — புறப்பட்டுப் போனார்கள்.


"சொல்லிட்டியாம்மா..." — சுரேஷ் எழுந்து வந்தான்.

"வரட்டும் சொல்றேன்..."

"எப்ப வர்றாங்களோ... நான்னா உனக்கு இளக்காரம்தான்..." முகத்தைத் திருப்பிக் கொண்டு போனான்.

எதற்கு இவன் இத்தனை அவசரப்படுகிறான்? சம்பாதிக்கிற கௌரவத்திற்கா? தானும் ஒருத்தியின் துணை தேடி வேர் ஊன்றவா?

"போங்கடா..." ஏனோ கோபம் வந்தது. காப்பி ஞாபகம் வர ஸ்டவ்வைப் பற்ற வைத்தாள். இறக்கும் போது பாத்திரச் சூட்டில் கை பட எரிந்தது. "என்ன வளர்த்து என்ன ஆகப் போகுது. ஒருத்தி வர்ற வரைக்கும் தான் அம்மா... அப்புறம் அவன், அவன் குடும்பம்... பெண்சாதி குழந்தைகள்..." மாமியாரின் புலம்பல் வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தன. இப்போதைக்கு அவைதான் பொருத்தமானதாகத் தோன்றியது. தற்செயலாகத் திரும்ப நிலைக் கண்ணாடியில், தனக்குப் பிடிக்காத மாமியாரின் அதே பாவனை தனது முகத்திலும் படிந்திருப்பதைக் காண, "அடக் கடவுளே..." என, அவசரமாக அழிக்க முற்பட்டாள் அவள்.



*** நங்கநல்லூர் நாயகி — வண்ணப் படம் மற்றும் நவராத்திரி சிறப்புக் கட்டுரை.**


*** மாணவர் நகரம் மணிப்பால் — கவர் ஸ்டோரி**

*** இலவச இணைப்பு:**

பொங்குமாங்கடல்
— அமரர் கல்கியின் குறுநாவல்



* புது கல்வித்திட்டம்:
உடல் உழைப்பு கேவலம் அல்ல.



ராஜாஜி வாழ்க்கை
வரலாறு – V

ராஜ்மோகன் காந்தி

10

அற்புதமான கல்வித் திட்டம்; அரசியல் ரீதியில் தற்கொலை!

ஆந்திர மாநிலம் பிரிந்த பிறகு, சென்னையில் காங்கிரஸ் ஆட்சிக்கு ஸி. ஆர். இன்றியமையாதவர் என்ற நிலை மாறிவிட்டது. மீதமிருந்த சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் எம். எல். ஏக்கள் பெரும்பான்மையில் இருந்தனர். ஸி. ஆர். விட்டுச் சென்றாலும்கூட அவர்கள் ஆட்சி நிலைக்கும். நேருவிடம் தாம் ராஜினாமா செய்வதாக ஸி. ஆர். தெரியப்படுத்திய போது இந்த அம்சம் அவர் மனத்தில் இருந்தது என்பதில் ஐயமில்லை. ஒருவேளை சென்னையைச் சென்னை மாகாணத்துக்கே முழுமையாகக் காத்துத் தருவதற்காகவும் ஸி. ஆர். ராஜினாமா என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தியிருக்கலாம். எவ்வாறாயினும் ஸி. ஆர். பதவியில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று நேரு வற்புறுத்தி, ஸி. ஆரை அதற்கு இணங்கவும் செய்து விட்டார். தமது அமைச்சர்களுள் ஒருவரான மகாவீர் தியாகியிடம் ''ராஜாஜி சென்னையைக் காப்பாற்றித் தந்து விட்டார்'' என்று நேரு கூறினார். 1952 இறுதியில் மீண்டும் நேருவே அகில இந்திய காங்கிரஸ் தலைவரானார். புதிய செயற்குழுவில் அங்கம் வகிக்குமாறு ஸி. ஆரை அவர் வருந்திக் கேட்டுக் கொண்டார். ''உங்களுக்கு விடுதலை கொடுப்பது பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியாத நிலையில் இருக்கிறேன்'' என்று ஸி. ஆருக்கு எழுதினார். ''வேறு யார் அளிக்கக் கூடிய அறிவுரைகளையும் விட உங்களுடைய அறிவுரைதான் எனக்கு முக்கியமானது என்பது உங்களுக்கே தெரியும்.'' மனப்பூர்வமான இந்த வார்த்தைகள் ராஜாஜியின் இதயத்தைத் தொட்டிருக்கும். ஆனால் ஸி. ஆருக்கு இருந்த வேலைச் சுமைகள், நேருவுக்கு அறிவுரைகள் வழங்குவதற்கான நேரத்தை மிச்சம் விட்டு வைக்கவில்லை. அதற்கான சரீர சக்தியும் ஸி. ஆரிடம் இல்லை.

ராஜினாமா செய்வது என்ற எண்ணத்தைச் சுலபமாக விட்டுக் கொடுத்தார் ஸி. ஆர். ஆனால் ராஜினாமா செய்யாமலிருப்பதன் காரணமாக முட்களால் குத்தப்படுவோம் என்பதையும் அவர் நன்றாக அறிந்திருந்தார். நேருவின் கடிதம் கிடைத்ததும் அவர் தமது டயரியில் எழுதினார்:

''ஜவாஹர்லாலை நான் என்ன செய்ய? நான் என்ன செய்தாலும் அவர் தொந்தரவாக நினைக்க மாட்டேனென்கிறார்; என்னை விடுவிக்கவும் மறுக்கிறார். அவரது அன்பும் பொறுமையும் எனக்குத் தொந்தரவாகவே ஆகிவிட்டது. இந்த அன்பே என்னைச் சிலுவையில் அறைந்து விடும்.''

அவரைச் சிலுவையில் அறைவதற்கு வாய்ப்பாக அவருடைய கல்விச் சீர்திருத்தத் திட்டம் அமைந்தது. அது அற்புதமான ஒரு திட்டம். ஆனால் அரசியல் ரீதியில் தற்கொலைக்கு ஒப்பானது. ஆந்திரா பிரிவினைக்குச் சற்று முன்னதாகக் கொண்டுவரப்பட்ட இந்தச் சீர்திருத்தம் மூலம் அரசுக்கு அதிகப்படியாகப் பைசா கூடச் செலவின்றி படிப்பறிவு பெறும் குழந்தைகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கிவிடத் திட்டமிட்டார் ஸி. ஆர். அதே நேரத்தில் குழந்தைகளின் கற்பனா சக்தி பெருகவும் கலைத்திறன் அதிகரிக்கவும் வழிவகுக்கத் தீர்மானித்தார். அரசியல் சாசனப்படி எல்லாக் குழந்தைகளும் தொடக்கப் பள்ளிகளுக்குப் போக வேண்டும். சென்னை மாகாணத்தில் நாற்பத்தெட்டு சதவீதம் குழந்தைகள்தான் பள்ளிக்குப் போவதாக அதிகாரபூர்வமான புள்ளி விவரங்களே கூறின. இவர்களிலும் ஐந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்பவர்கள் ஐந்தில் இரு பங்கினர் மட்டுமே. இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதே ஸி. ஆருடைய திட்டத்தின் பிரதான அம்சம். தொடக்கப் பள்ளிகளில் பாடம் சொல்லித் தரப்படும் நேரத்தை ஐந்திலிருந்து மூன்று மணி நேரமாகக் குறைத்து விட்டால் இப்போதுள்ள கட்டடங்கள், இப்போதுள்ள பள்ளி ஆசிரியர்களைக் கொண்டே, இப்போதுள்ள மாணவர்களைப் போல் இரு

மடங்கு மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வி போதிக்கலாம். பள்ளிக் குழந்தைகள் தங்களுக்குப் பரிசளிக்கப்பட்டுள்ள இரண்டு மணி நேரத்தைப் பெற்றோர்களுக்கு உதவுவதிலும் அவர்களிடமிருந்து குடும்பக் கலைகளைக் கற்றுக் கொள்வதிலும் செலவழிக்கலாம். குடும்பத்தின் வருவாய் குறைந்து விடுகிறது என்பதற்காகவே குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமலிருக்கிற கொடுமையும் நீங்கிவிடும்.

இந்தச் சீர்திருத்தம் இன்று நேற்றல்ல. பல ஆண்டுகளாகவே ஸி. ஆரின் மனத்தில் இருந்து வந்த ஒன்றுதான். அவருடைய இளமைக் கால அனுபவங்கள் காரணமாக உருவானது. கவர்னர் ஜெனரலாக இருந்த போது இதனைத் தமது யோசனையாக அவர் வெளியிட்டதும் உண்டு: ''நான் சிறுவனாக இருந்தபோது, தொடக்கப் பள்ளியைச் சென்றடைய அதிகாலையில் ஒரு மைல் தூரம் நடந்தேன். வெயில் கொளுத்தும் நடுப்பகலில் மதிய உணவுக்காக வீடு திரும்பி அவசரம் அவசரமாக அள்ளிப் போட்டுக் கொண்டு மீண்டும் பள்ளிக்கூடத்துக்கு ஓடுவேன். மீண்டும் மாலையில் நடந்து வீடு திரும்புவேன். இது என் மனத்தில் ஆழப் பதிந்தது. ஆறு மணி நேரம் என்னைக் கட்டிப் போடுகிற பள்ளிக் கூடத்தை நான் வெறுத்தேன்.''

இதன் மறுபுறமாக ஸி. ஆருக்கு கிராமப் புறங்களில் உள்ள கைவினைஞர்கள் பால் மிக அதிகமான மதிப்பும் மரியாதையும் இருந்தது. இதையும் அவர் கவர்னர் ஜெனரலாக இருந்த போது தெளிவாக வெளியிட்டிருந்தார்:

''உணவு உற்பத்தியாகிறது; துணி நெசவாகிறது; ஆட்டு ரோமங்கள் மழிக்கப்படுகின்றன; செருப்புக்கள் தைக்கப்படுகின்றன; குப்பைகள் அகற்றப்படுகின்றன; வண்டிச் சக்கரங்களும் ஏர்முனைகளும் உருவாக்கப்படுகின்றன — பழுது பார்க்கப்படுகின்றன என்றால், அந்தந்தத் தொழில்களை அந்தந்த ஜாதியினர் விடாமல் நடத்தி வருவதால்தான். இல்லங்கள், தொழிற் கூடங்களும் கூட. பெற்றோர்கள், ஆசிரியர்களும் கூட. அவர்களிடம் குழந்தைகள் இயல்பாகத் தொழில் கல்வி பயிலுகிறார்கள்.''

இப்போது முதல்வர் என்ற முறையில் அவர் தமது கனவை நனவாக்க முடியும். ''இப்போதுள்ள கல்வித் திட்டம் மாணவர்களை ஈர்க்காமல் தூங்கி வழியச் செய்து கொண்டிருக்கிறது. அதனிடமிருந்து குழந்தைகளைக் காப்பாற்றி, அவர்களைக் கிராமப்புறத் தொழில் நுட்பக் கூடத்தின் ஆர்வமுள்ள மாணவர்களாக உருமாற்றுவேன்'' என்று வாதம் புரிந்தார் ஸி. ஆர். ''பள்ளிக் கூடம் என்பது அதன் நான்கு சுவர்களுக்கு உள்ளே மட்டுமில்லை; கிராமம் முழுவதுமே பள்ளிக் கூடம்தான். கிராமப்புறத் தொழில் நுட்பக் கூடம் ஏற்கெனவே இருக்கிறது. அதன் ஒவ்வொரு கிளையும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.''

கிராமப்புறத்தில் உள்ள தொழில் நுட்பக் கலைஞர்களும் விவசாயிகளும் பள்ளிக் கூடத்துக்கு வெளியே நடக்கும் இந்த வகுப்புக்களை மேற் பார்வையிடுவார்கள்; பள்ளி ஆசிரியர்கள் அல்ல. முதல் மூன்று ஆண்டுகளுக்குப் பள்ளிக் குழந்தைகள் கைவினைஞர்கள் செய்கிற காரியங்களைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய விளக்கங்களைக் கேட்டுக் கொள்வார்கள். தங்களுக்குத் தோன்றும் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்வார்கள். நான்காவது, ஐந்தாவது ஆண்டு மாணவர்கள் மட்டுமே கூடமாட ஒத்தாசை செய்ய ஆரம்பித்துப் படிப்படியாகத் தொழிலைப் பயிலுவார்கள். மேலும் இந்தத் தொழிற் பயிற்சி திட்டம் கட்டாயமானது அல்ல. பெற்றோர்கள் விரும்பினால் மட்டுமே ஆண், பெண் குழந்தைகள் இந்தத் தொழிற் பயிற்சியில் ஈடுபடுவார்கள்.

மாகாணத்தில் உள்ள 32,000 ஆரம்பப் பள்ளிகளில் 11,000 பள்ளிகளுக்கு மட்டுமே தொழில் கல்வி அளிப்பதற்கான வசதி தேவைப்படும் என்று அரசு ஆராய்ந்து அறிந்தது. மீதமுள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் தொழில் செய்யும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே. அவர்களுக்குப் பெற்றோர்களே தொழில் போதித்து அவர்கள் கற்பனா சக்தியை ஊக்குவிப்பார்கள். உதவி தேவைப்பட்ட பதினோராயிரம் பள்ளிகளைப் பொருத்தமட்டில் அக்கம் பக்கத்து கிராமத்திலுள்ள கைவினைஞர்களையும் விவசாயிகளையும் கேட்ட போது இந்த உதவியை அளிக்க அவர்கள் உற்சாகமாக முன்வந்தனர்.

ஆக, ஸி. ஆரின் ஆரம்பக் கல்வித் திட்டத்தின் தொழிற் கூடப் பகுதி, கிராம மக்களின் முயற்சிக்கும் உற்சாகத்துக்குமே விடப்பட்டது. அவர்களுடைய சாதனைத் திறனுக்குச் சவாலாக அமைந்து பெருமிதப்படச் செய்தது. பூரண சுதந்திரம் அளிக்கப்பட்டது. உடலால் உழைத்து வேலை செய்வது கேவலம் என்ற எண்ணத்தை அடியோடு சமூகத்திலிருந்து களைந்தெறிய முற்பட்டது.

சட்ட சபையைக் கலந்தாலோசியாமல், அவர்களுடைய ஒப்புதலைப் பெறாமல், 1953 ஜூன் கல்வி ஆண்டு தொடக்கத்தில் திட்டத்தை அமுல்படுத்த ஸி. ஆர் முற்பட்டது தவறாகப் போயிற்று. ஆனால் திட்டத்துக்கு பலமான எதிர்ப்பு உருவானதற்கு இது மட்டும் காரணமல்ல.

(தொடரும்)

தொடுவான மனிதர்கள்

3

"ஹலோ... நான் ராம்குமார் பேசறேன்..."

குப்பென்று ராதிகாவின் உடம்பில் ஒரு சூடு பரவிற்று. மனசுக்குள் பொங்கி வந்த பூரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை. கண்களிலும், முகத்திலும் பளிச்சென்று எட்டிப் பார்த்தது. உதட்டில் புன்சிரிப்பாக ஓடிற்று. அவனோடு பழக ஆரம்பித்த இந்த ஒன்றரை மாத காலத்தில் அவளுக்குள் ஏற்பட்டிருந்த மாறுதல் இது. கண்ட உடனேயோ, பார்த்த மறுவினாடியிலிருந்தோ வந்துவிடவில்லை. அவனோடு பழகப் பழக அவனது மென்மையான குணம், நிதானமான பேச்சு, அன்பானசுபாவம் எல்லாம் புரியப் புரிய, கொஞ்சம்கொஞ்சமாகமொட்டுவிட்டு இதழ் விரியத் தொடங்கியிருக்கிறது. இன்னமும் முற்றிலும் விரிந்து முழுப்பூவாகப் பரிணமிக்க ஆரம்பிக்கவில்லை. உள்ளுக்குள் மிகக் குளிர்ச்சியாய், இதமாய், இனிமையானதாய் பரவிக் கொண்டு வருவதை உணர்ந்திருந்த போதிலும் எதையும் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை; வாய்விட்டுப் பேசிக் கொள்ளவில்லை.

அந்தப் பயம், தயக்கம், மிரட்சி, குரலிலும், பல சமயங்களில் உடம்பிலும் எட்டிப் பார்க்கிற நடுக்கம்...

ராம்குமார் அவளைத் துல்லியமாகப் புரிந்து கொண்டான். வாழ்க்கை அவளை நிறையவே மருட்டியிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டான். இந்தச் சின்ன வயதிலேயே அவள் மிகப் பலமான அடிகளாக வாங்கியிருக்க வேண்டும் என்பதை ஊகித்துக் கொண்டான். அன்பான, ஆதரவான ஒரு சூழ்நிலையில் அவள் அரவணைத்து வளர்க்கப்படவில்லை என்பதை அவன் படித்திருந்த எம். ஏ. சைக்காலஜி உணர்த்த, அவன் மீதிருந்த பிடிப்பு அதிகமாயிற்று. இவளை — இவள் இருக்கிற சூழ்நிலையைப் புரிந்து கொண்டு உதவ வேண்டுமென்று தோன்றிற்று. இவள் ஒடுங்குகிற கூடு எதுவானாலும் அதை உடைத்து வெளியில் அழைத்துக் கொண்டு வர வேண்டும். 'இதோ உனக்கு முன் எவ்வளவு ஆரோக்கியமான காற்று வீசுகிறது பார். இதைச் சுவாசி. இதயத்தையும், மூளையையும் புத்துணர்ச்சியால் நிரப்பிக் கொள்' என்று சொல்ல வேண்டுமென்ற வேகம் ஏற்பட்டது. அதைச் செயல்படுத்துகிற முறையில் மெல்ல ஆபீஸ் விஷயம் தவிரவும் பேச ஆரம்பித்தான்.

இந்துமதி

பதினோரு மணியளவில் டீ கொண்டு வருகிற பையனிடம் தன் கோப்பையோடு அவளுடையதையும் மேஜை மீது வைக்கச் சொல்லி அவளைக் கூப்பிட்டனுப்புவான்.

"வாங்க ராதிகா... இங்கேயே உங்களுடைய டீயையும் வைக்கச் சொன்னேன். சாப்பிடுங்க..."

"எஸ் சார்..." என்று ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரின் எதிரில் நிற்கிற கான்ஸ்டபிள் மாதிரியோ, மிலிடரி ஆபீஸரின் முன் நிற்கிற ஜவான் மாதிரியோ அவள் பதில் சொல்வதைக் கேட்டு மென்மையாகப் புன்னகை புரிவான்.

"நான் உங்க பாஸ் இல்லே ராதிகா. உங்களுடைய கோ ஒர்க்கர். கலீக்... அதையெல்லாம்விட உங்களோட சிநேகிதன்னு நினைச்சுக்கோங்க... இந்த 'எஸ் சார்'னு சல்யூட் அடிக்கிறதெல்லாம் சேர்மெனுக்குச் செய்யணும். அது நியாயம். எனக்கு வேணாமே ப்ளீஸ்..."

அந்தத் தோழமை, எளிமை, ரணப்பட்டுப் போன காயத்தைப் பஞ்சால் ஒற்றுகிற இதம்.....

தன் நன்றியைப் பார்வையில் தெரியப்படுத்தி இயல்பாய்ப் போய்விட்ட பய உணர்வு கலந்த மெல்லிய குரலில், "ச...ரி..." என்றதும், அவளது முகமும், அதன் அழகும், குழந்தைத்தனம் மாறாத பார்வையும், மற்ற பெண்களிடம் காணப்படுகிற சாகசங்களும், போலித்தனமும் ஒட்டாத இயல்பும்...

அவளை இழுத்து அணைத்துத் தன் தோள் மீது சாய்த்துக் கொள்ள வேண்டும் போலிருக்கும். ஆறுதலாகத் தலையை வருடிக் கொடுக்க வேண்டும் போலிருக்கும். மென்மையான அழகு முகத்தை நிமிர்த்தி மானாக மருண்டு கிடக்கும் விழிகளில் முத்தமிட வேண்டும் போலிருக்கும். 'என்ன கண்ணம்மா உனக்குக் கஷ்டம்...? எதுவானாலும் என்கிட்டச் சொல்லு... நான் தீர்த்து வைக்கிறேன் கண்ணம்மா... தீர்க்க முடியாத கஷ்டமானால் கூடப் பார்த்துக்கறேன். உன்னுடன் காலமெல்லாம் உன் கஷ்டங்களைத் தாங்கிக்கறவனா — சந்தோஷத்தைப் பகிர்ந்துக்கிறவனா...

அவன் உள்ளுக்குள் அவளுக்காக உருகி உருகித் தவிக்க —

அவள்,

"என்ன யோசனை சார், டீ ஆறியே போச்சு..." என்றதும், சட்டென்று நினைவுகளிலிருந்து இறங்கி வந்து சொன்னான்:

"ப்ளீஸ் ராதிகா... இனிமே எனக்கு தயவு செய்து சார் போடாதீங்கனேன். உங்க சார்

எனக்கு என்னவோ போலிருக்கு. ரொம்ப அந்நியமாத் தள்ளி நிறுத்தற மாதிரி தோணறது…"

"சரி போடலை. அதே மாதிரி நீங்களும் என்னை வாங்க போங்கன்னு அநாவசிய மரியாதை தந்து கூப்பிடாதீங்களேன். அது மட்டும் எனக்கு என்னவோ போலிருக்கிறதா?"

"சரி ராதிகா" என்றானே —

அன்றுதான் முதல் மொட்டு அரும்பிற்று.

இப்போது அவன் தொலைபேசியில் அழைத்ததும் சட்டென்று ஒவ்வொன்றாக நினைவிற்கு வர அந்தச் சுகமான அனுபவங்களில் லயித்துப் போய் அவள் மௌனமாக இருக்க —

அந்தச் சின்ன மௌனமான இடைவெளியைக் கூடத் தாங்க இயலாதவனாக லேசான பதற்றம் நிரம்பிய குரலில் கேட்டான் அவன்.

"என்ன ராதி... பதிலே இல்லை...? வாட்ஸ் ராங்...?"

சட்டென்று தன் உணர்வுக்கு வந்தவள், உடலைச் சிலிர்த்துக் கொண்டு சொன்னாள்:

"ஓ... ஒண்ணுமில்ல... சொல்லுங்க...?"

"என்னம்மா...?எதுவானாலும் சொல்லும்மா...?"

"நிஜம்மா ஒண்ணுமில்ல..."

"அப்போ ஏன் இத்தனை நேரம் பேசாமலிருந்தே...?"

"உண்மையான காரணத்தைச் சொல்லட்டுமா...?"

"உனக்குப் பொய் கூடச் சொல்லத் தெரியுமா, என்ன...?"

அந்தப் பதிலில் ஒரு வினாடி கண்களை மூடி உணர்ச்சி வசப்பட்டாள். அதை உணராத அவன் மீண்டும் கேட்டான்.

"என்ன சொல்லு ராதிகா...?"

"இல்லே... முதன் முதல்ல நாம சந்திச்சதிலேர்ந்து இன்னிவரைக்கும் நினைச்சுப் பார்த்தேன்."

"ஓ..." என்று அழகாய்ச் சிரித்தான் அவன்.

பின்னர், "இன்னிக்கு ஆபீஸ் லீவாச்சே... சேர்மன் உன்னை வரச் சொல்லியிருக்காரே.... மறந்து போயிடப் போறியேன்னு கூப்பிட்டேன்...."

"இல்லே மறக்கலை. பதினோரு மணிக்குத்தான் வரச் சொல்லியிருக்கார். டிக்டேஷன்ஸ் இருக்குன்னார்..."

"எப்படிப் போகப் போறே...?"

"ம்... இன்னிக்கு லீவுன்றதால டிரைவர் வரமாட்டாரில்ல. அதனால ஆட்டோ பிடிச்சுப் போயிடலாம்னு" —

அவன் அவளை முடிக்கவிடவில்லை.

"நோ, நோ... ஆட்டோவெல்லாம் வேணாம். கார் இங்கேதான் இருக்கு. நான் எடுத்துண்டு வந்து கூட்டிண்டு போறேன்..."

சேர்மன் கார்த்திகேயனின் ஸ்டெனோவாக அவள் நியமனமானபின் வீட்டிலே ஃபோன் இன்றியமையாததாயிற்று. ஆபீஸ் கார் தினமும் முக்கியப்பட்ட சிலரை வீட்டிலிருந்து அழைத்துப் போய்த் திரும்பக்



கொண்டு விடும். அதில் அவளும் ஒருத்தி. அந்தக் காரில் இப்போது டிரைவருக்குப் பதில் ராம்குமார்! அருகில் அவள்!

"சரியாகப் பத்தரை மணிக்கு வர்றேன். ரெடியாக இரு... என்ன...?"

"ஓ. கே...

பதினோரு மணியளவில் கார்த்திகேயன் அவளை இனிமையான புன்னகையில் வரவேற்றான்.

"உட்காருங்க ராதிகா..." என்றவன் ஒரு வினாடி அவளைக் கண்ணிமைக்காமல் பார்த்து. "யூ லுக் வெரி ப்யூட்டிஃபுல் டுடே..." என்றான்.

அவள் மெல்லத் தலைகுனிந்து கொண்டாள். "தாங்க்யு சார்...." சொல்வதற்குள் மனசு படபடத்து முகத்தில் வியர்வை அரும்பத் துவங்கிற்று.

அதை கவனித்த கார்த்திகேயன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

"வேலைல சேர்ந்து கிட்டத்தட்ட ரெண்டு மாசமாகப் போறது. இன்னுமா உனக்கு ஆபீஸ் பயம் போகலை....?"

அவள் பதில் சொல்லாதிருக்க அவன் பதில் வருகிற வரை விடப் போவதில்லை என்கிற மாதிரி மீண்டும் கேட்டான்.

"ம்.. சொல்லு... அப்படி என்ன பயம் உனக்கு இந்த ஆபீஸ்ல....?"

"வந்து... வந்து... ஆபீஸ் பயமில்ல சார். ஆபீஸ் பழகிப் போச்சு...."

"அப்படின்னா பயம் உன்கிட்டதான்டான்னு சொல்ற இல்ல....?"

"ஐயய்யோ... நான் அப்படியெல்லாம் சொல்லல சார்...."

"பின்னே ஏன் இந்த ரூமுக்குள்ள வர்றபோதே தடுமாறுறே... என்கிட்ட பேச ஆரம்பிச்சா வேர்த்துக் கொட்றே.... நான் என்ன அந்த அளவுக்கா உன்னை பயமுறுத்தறேன்....?"

"ஐயோ இல்ல சார்...."

"இல்லன்னுசொல்லிட்டாப்போதுமா...? ஜஸ்ட் ட்ரீட் மீ ஆஸ் யுவர் ஃப்ரெண்ட் ராதிகா...."

அவள் சரி என்று தலையாட்டினாள்.

"ம்ஹூம். எனக்கு இந்த மௌன பாஷையெல்லாம் பிடிக்காது. வாயைத் திறந்து சொல்லணும்..."

"சரி சார்..."

"தட்ஸ் குட். இப்ப டிக்டேட் பண்ணட்டுமா நோட்ஸ் எடுத்துக்கறியா...?"

"ஓ.கே. சார்."

கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரமாயிற்று. மடமடவென்று ஏழெட்டுக் கடிதங்களைச் சொல்லி முடித்தான். அவள் காட்டிய ஃபைல்களின் விவரம் கேட்டுக் கையெழுத்துப் போட்டான். பின்னர்,

"நாளைக்கு எனக்கு என்னென்ன புரோக்கிராம்னு கொஞ்சம் சொல்லிடறியா?" என்று கேட்டான்.

"எஸ் சார்..." என்று அவசர அவசரமாக.. எங்கேஜ்மெண்ட் டைரியைப் புரட்டினாள்.

"காலைல பத்து மணிக்கு போர்ட் மீட்டிங் சார். பன்னிரெண்டு மணிக்கு ஜப்பான்லேருந்து ஒரு குரூப் ஆஃப் டெலிகேட்ஸ் வராங்க. அவங்க கூட டிஸ்கஷன் அண்ட் தாஜ்ல லஞ்ச். மூணு மணிக்கு கவர்னர் அப்பாய்ன்ட்மெண்ட் தந்திருக்கார். புதுத் தொழிற்சாலை தொடங்கறது சம்பந்தமா அவர் கூட பேசப் போறீங்க. ஆறு மணிக்கு லையன்ஸ் கிளப் மீட்டிங்கல நீங்க சீஃப் கெஸ்ட். அங்கேயே டின்னர். மறுநாள் காலைல ஃபர்ஸ்ட் பிளைட்ல டில்லி போய் அன்னிக்கு நைட்டே யு ஆர் ப்ரொஸீடிங் டு ஸ்டேட்ஸ் சார்...."

மூச்சு விடாமல் அவள் ஒப்பித்ததைக் கேட்டு சலிப்பு ஓடும் குரலில் கேட்டான்.

"தென்... ஐயம் ரிடர்னிங் ஒன்லி ஆஃப்டர் பிஃப்டீன் டேஸ்... இல்ல....?"

"எஸ் சார்...."

அவன் முகவாயைத் தடவியவாறு சில வினாடிகள் மௌனமாக யோசித்தான். பின்னர், "நான் உன்கிட்ட கொஞ்சம் தனியாப் பேசணும் ராதிகா...."

என்ன பேசப் போகிறானோ என்ற பயத்தில், "சொல்லுங்க சார்..." என்றாள்.

மீண்டும் ஒரு வினாடி தயங்கி, தீவிரமாய் யோசித்து ஒரு முடிவிற்கு வந்தவனாகச் சொன்னான்.

"ம்ஹூம்... இப்ப வேணாம். இப்படி அவசரமா நாலு வார்த்தைல சொல்ற விஷயமில்ல அது. ஸ்டேட்ஸ் போயிட்டு வந்தப்புறம் சொல்றேன். டில் தென் லெட் இட் பி எ ஸீக்ரெட் வித் மீ..." என்று சிரித்தான்.

சட்டென்று ஒரு விடுதலை உணர்ச்சி ஏற்பட்ட மாதிரி இருக்க, கால் வினாடிக்குப் பின் கேட்டாள்.

"அப்ப நான் போகலாமா சார்...?"

"ஓ.கே... நான் திரும்பி வந்தப்புறம் பார்க்கலாம்...."

"சரி சார்...."

இப்பவே வீட்டுக்குப் போகணுமா ராதிகா....?" — வேலையெல்லாம் முடித்து விட்டுக் காரில் திரும்பிக் கொண்டிருந்த போது ராதிகாவிடம் கேட்டான் ராம்குமார்.

"அப்படி ஒண்ணும் அவசரமில்ல. ஏன் கேட்கறீங்க...?"

"இல்ல... ரொம்ப நாளா உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்னு தோணறது. அதை இப்போ மனசு விட்டுச் சொல்லிடலாம்னு கேட்கறேன்..."

"சொல்லுங்களேன்...."

"இங்கேயா...? இப்படி கார் ஓட்டிண்டேவா....?"

"சரி. எங்க வீட்டுக்குப் போய்ப் பேசலாம்...."

"உங்க வீட்டுக்கா...? ம்ஹூம்... அங்க உங்கம்மா, பாட்டி, சிவா, சாமிநாதன்னு எல்லாரும் இருப்பாங்க...."

"பின்ன எங்க போறது....?"

"என் வீட்டுக்கு...."

"அங்க மட்டும் யாரும் இருக்க மாட்டாளா?"



அரசியல்வாதி: டாக்டர்! என்ன செஞ்சும் இந்த ஏப்பம் நிக்கவே மாட்டேங்குதுங்க...

டாக்டர்: ஆச்சர்யம்தான், இப்ப நீங்க பதவியிலே கூட இல்லியே, எப்படி ஏப்பம் வருது..?

— எஸ். ராகவேந்திரா.

''யார் இருக்கா எனக்கு...?''

''ஏன், அம்மா, அப்பா, அண்ணா, தம்பி, அக்கா, தங்கைன்னு....?''

''ம்ஹூம். அப்படியெல்லாம் யாரும் கிடையாது எனக்கு....''

''அப்படின்னா....?''

''என்னோட மூணு வயசுல எங்கம்மா செத்துப் போயிட்டா... அப்பா ரெண்டாம் கல்யாணம் பண்ணிண்டு சித்தி கூட இருந்தார். பத்து வயசுலேர்ந்து ஹாஸ்டல் வாழ்க்கை. பணம் மட்டும் அப்பாகிட்டேயிருந்து வரும். அதுவும் நான் சம்பாதிக்க ஆரம்பிச்சப்புறம் நின்னு போச்சு. ரெண்டு வருஷத்துக்கு முன்னால அந்த அப்பாவும் போனப்புறம் இருந்த ஒரே பிடிப்பும் அறுந்து இந்தப் பட்டம் தனியாகவே பறந்துண்டிருக்கு....''

அதைக் கேட்க அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. கிட்டத்தட்ட தன்னைப் போலவே அவன் கஷ்டப்படுகிறதாகத் தோன்றியது. தன்னுடைய பணக் கஷ்டம் அவனுக்கு இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் அன்பிற்கு, ஆதரவிற்கு, பகிர்ந்து கொள்ளக் கூடிய துணைக்கு, உருகி ஒன்றாகக் கூடிய ஒரு நெஞ்சுக்கு ஏங்குகிற ஏக்கத்திற்கு....

அவனுடைய வீடு வருகிற வரை இருவரும் அமைதியாகவே இருந்தனர். சின்னதாய், கச்சிதமாய் மூன்று படுக்கையறைகள் கொண்ட தனி வீடு. கம்பெனிதான் வாடகை கொடுக்கிறது. சமையற்காரரைத் தவிர வேறு யாருமில்லை. ராம்குமார் காப்பி தரச் சொல்லிக் குடித்து முடித்தபின் மாடிக்கு அழைத்துப் போனான். படுக்கை அறை ஓரமாகப் போடப்பட்டிருந்த கூடை நாற்காலிகளை இழுத்துப் போட்டு உட்கார்ந்த பின்னர் சிறிது நேரம் அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பார்வையின் ஆகர்ஷண சக்தியைத் தாங்க முடியாமல் தலையைக் கவிழ்ந்து கொண்டே கேட்டாள் அவள்.

''என்ன அப்படிப் பார்க்கறீங்க...?''

''இல்ல... நான் ஒண்ணு சொல்லுவேன். நீ அதை அப்படியே திருப்பிச் சொல்லுவியா ராதிகா....?''

அவள் சற்றுத் தயங்கி அவனை ஏறிட, அவன் வருத்தம் இழையோடும் குரலில் கேட்டான்.

''ஏன் ராதிகா நான் என்ன சொல்லிடுவேனோன்னு பயமா இருக்கா....?''

''ஐயய்யோ... அப்படியெல்லாம் இல்லே...''

''பின்ன ஏன் நான் கேட்டதுக்கு உடனே பதில் வரலை...?''

அவள் சட்டென்று புன்னகை ஓட, ''நீங்க சொல்றதை நான் அப்படியே திருப்பிச் சொல்லணும். அவ்வளவுதானே... ஓ.கே... எதைச் சொன்னாலும் திருப்பிச் சொல்றேன்....''

''நிச்சயமா...?''

''சத்தியமா...''

''ஐ லவ் யு ராதிகா...'' — உணர்ச்சி பூர்வமாய்க் கரகரத்த குரலில் அவன் சொல்லி முடித்ததும் சில வினாடிகள் அவள் அவனையே அப்படியே பார்த்துக் கொண்டிருக்க —

அந்த மௌனத்தில் துடித்துப் போய்க் கேட்டான் அவன்.

''ஏன் ராதிகா... சொல்ல மாட்டியா...?''

''சொல்ல மாட்டேனாவா...? ராம்குமார், ராம்குமார்னு தினமும் மனசுக்குள்ள ஓராயிரம் தரம் சொல்லிண்டிருக்கேன். ஸ்ரீராம ஜெயம் எழுதற மாதிரி எழுதிண்டிருக்கேன்...''

சொல்கிறபோதே குரல் தடுமாறி கண் கலங்கி கன்னங்களில் வழிய —

அவன் எழுந்து போய் அவளை நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டு கண்ணீரைத் துடைத்து, தலையை வருடி, ''ஓ... நோ....'' என்று உருகினான்.

''இனிமேல் இந்தக் கண்ணுல நான் தண்ணியைப் பார்க்கக் கூடாது கண்ணம்மா. இந்த முகத்தில் சிரிப்பைத் தவிர வேற எதையும் பார்க்கக் கூடாது. இனிமேல உன் கஷ்டம் எல்லாத்தையும் என் கிட்ட விட்டுடு. அம்மா, பாட்டி, சிவா, சாமினாதன் எல்லார் பொறுப்பும் என்னுடையது. அதெல்லாத்தையும் நான் கவனிச்சுக்கறேன்... என்னை மட்டும் நீ கவனிச்சுக்கோ... என்ன கண்ணம்மா....?''

அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டவள் அதுவரை அனுபவித்தேயிராத அன்பில், பிரேமையில், பாசத்தோடு கூடிய பகிர்தலில், நீயே நான் — நானே — நீ என்றான ஐக்கியத்தில் அத்தனை நாட்களும் பட்ட கஷ்டங்களெல்லாம் அடித்துக் கொண்டு போய் விட வேண்டும் என்கிற மாதிரி ராம்குமார்... ராம்குமார்....'' என்று கண்ணீர் விட்டுக் கதற —

அழுது ஓயட்டுமென்று அவளை அப்படியே மென்மையாய் அணைத்துக் கொண்டவன், ''நான் இருக்கிறேன் கண்ணம்மா... இனிமே எல்லாமாக நான் இருக்கிறேன்...'' என்பதைத் திரும்பத் திரும்ப அவள் மனத்தில் பதிகிற மாதிரி காதருகில் முணுமுணுத்துக் கன்னங்களில் உதடுகளை அழுத்திக் கொண்டான்...

(தொடரும்)

சின்னச் சின்னச் செய்திகள்

தேவை, கண்ணாடி போட்ட தலைவர்!



ஜோதிபாசுவா சொல்லுவார்?

● பத்து வருடங்களுக்கு முன்பு மேற்கு வங்காள அரசு பல்புகளும் ட்யூப் லைட்டுகளும் வாங்கியதில் ஊழல் நடந்திருக்கிறது என்று ஆனந்த பஸார் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. அப்போது முதலமைச்சர் ஜோதிபாசுவின் மகன் பணிபுரிந்த நிறுவனத்திலிருந்து அதிகபட்சம் தேவைகளை வாங்கிக் கொள்ள வேண்டும் என்றும், ஆனால் தமது உத்தரவை இது சம்பந்தமான ஃபைல்களில் எழுத வேண்டிய அவசியமில்லை என்றும் ஜோதிபாசு சொல்லதாக, பொதுப்பணித் துறை அமைச்சர் ஜதின் சக்ரவர்த்தி சொல்லியிருக்கிறார். 'ஜோதிபாசுவா அப்படி எல்லாம் சொல்லுவார்?' என்று மாநில மார்க்ஸிஸ்ட் கட்சிச் செயலர் சரோஜ் முகர்ஜி அறிக்கை விட்டு மறுத்திருக்கிறார். ஆனால் இது விஷயமாக ஜோதிபாசுவிடமிருந்தோ, கம்பெனியின் மானேஜிங் டைரக்டரிடமிருந்தோ நேரடியாக ஒரு மறுப்பும் வெளியாகவில்லை. ஜதின் சக்ரவர்த்தி, புரட்சி சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். கொஞ்ச நாளாகவே இந்த இடது சாரிக் கூட்டணியில் இவர்களுக்குள் கொஞ்சம் கசமுசா இருந்து வந்திருக்கிறது. 'இப்படி நடந்து கொண்டால் எப்படிக் கூட்டணி செயல்பட முடியும்?' என்கிறார் சரோஜ் முகர்ஜி. இதற்காகவே காத்துக் கொண்டிருக்கும் மாநில இ. காங்கிரஸ் தலைவர் பி. ஆர். தாஸ்முன்ஷி, ஜோதிபாசுவை ராஜிநாமா செய்யச் சொல்லியிருக்கிறார்!



கண்ணாடி அணிந்த கோல்

● ஜப்பானிய எழுத்துக்களை, கிட்டத்தட்ட மனிதக் குரலில் அப்படியே வாசிப்பதற்கு, ஜப்பான் நிறுவனம் ஓர் இயந்திரம் கண்டுபிடித்திருக்கிறது. இதன் விலை இரண்டாயிரம் ரூபாயிலிருந்து மூவாயிரம் ரூபாய்க்குள்தான் ஆகிறது. சீன எழுத்துக்களைக் கூட இதனால் படிக்க முடியும். இந்தக் கருவியில் சுமார் 50,000 வார்த்தைகள் பதிவாகி இருக்கின்றன.

● மேற்கு ஜெர்மன் அதிபர் ஹெல்மட் கோல் கோடை விடுமுறையில் ஓய்வு எடுத்துக் கொண்ட போது, தமது கண்பார்வைத் திறன் அபிவிருத்தி அடைந்திருப்பதைக் கண்டார். எனவே கண்ணாடி அணிவதை நிறுத்தி விட்டார். மேற்கு ஜெர்மன் மக்கள், கண்ணாடி அணியாமல் அவரைப் பார்க்க விரும்பவில்லை. ஒரு கணிப்பு நடத்திய போது எண்பது சதவிகிதம் பேர் பழையபடி கண்ணாடி அணிந்த அதிபர்தான் தேவலை என்று அபிப்ராயப்பட்டார்கள்! எனவே கோல் மீண்டும் கண்ணாடி அணிய ஆரம்பித்து விட்டார் — பவர் இல்லாமல்!

● மகாராஷ்டிர அரசு நடமாடும் கழிப்பறைகளை வாங்க முடிவெடுத்துள்ளது! பத்து கழிப்பறைகள் கொண்ட எட்டு வண்டிகளுக்கு ஆகும் செலவு பத்து லட்ச ரூபாய்!

பூனாவில் அமைந்துள்ள ஒரு சிறு தொழில் நிறுவனம் இந்தக் கழிப்பறைகளைத் தயாரிக்கிறது. மிகச் சுலபமாக இழுத்துச் செல்ல வசதியாக கனமில்லாத ஃபைபர் கிளாசில் இந்த டிராலிகள் செய்யப்பட்டுள்ளன. இதில் தண்ணீர்த் தொட்டியும் கழிவுநீர்த் தொட்டியும் இணைக்கப்பட்டுள்ளன.

தெரு ஓரத்திலும் குடிசைப் பகுதிகளிலும் இந்த டிராலிகளை நிறுத்தி வைப்பார்கள். கழிவுநீர்த் தொட்டிகள் நிரம்பியவுடன் பாதாளச் சாக்கடையில் கொட்டப்படும்.

— எஸ். வி. என்; செம்பூர் சந்துரு.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: இ. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157: ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—: வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—: விமானத் தபால் ரூ. 680/—.
அறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—: வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—: விமானத் தபால் ரூ. 340/—.


பொங்குமாங்கடல்
16-10-88
கல்கி
இலவச இணைப்பு
அமரர் கல்கி

முன்னுரை

'கூதல் மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்' என்று சம்பந்த சுவாமிகள் வர்ணித்தார். குற்றாலத்தைச் சாரல்காலத்தில்பார்த்து விட்டுத்தான் அந்தப் பாலகவி அவ்விதம் பரவசமடைந்திருக்க வேண்டும். ஆனால் குற்றாலத்துச் சாரல் காலத்தை நான் அவ்வளவாக விரும்புவதில்லை. காரணம், 'சாரல்' 'சாரல்' என்று சார்ந்திருக்கும் ஊர்களிலேயிருந்தெல்லாம் ஜனங்கள் வந்து கூடி விடுவதுதான். இது காரணமாகச் சாரல் காலத்தில் குற்றாலம் பெரிதும் சுகாதாரக் குறைவு அடைந்து விடுகிறது. கொடைக்கானலுக்கும் உதகமண்டலத்துக்கும் வெள்ளைக்காரர் ஆட்சியில் எவ்வளவு பணம் செலவழித்தார்களோ, அதில் நூற்றில் ஒரு பங்கு குற்றாலத்துக்குச் செலவு செய்திருந்தால்?......

அடடா! கடைசியில் எழுதிய மேற்படி வாக்கியத்தை எங்கே கேட்டேன்? நினைவுக்கு வருகிறது.

சாரற்காலத்தில் குற்றாலத்துக்கு நான் அதிகம் போவதில்லையென்று சொன்னேனல்லவா? அதற்கு மாறாக, நல்ல வேனிற் காலத்திலேதான் போவது வழக்கம். வேனிற் காலத்தில் குற்றாலத்தில் ஜனக்கூட்டம் அதிகம் இராது. ஊரெல்லாம் நசநசவென்று ஈரமாயிராது. மலைமேலே தாராளமாய் ஏறிப் போகலாம். பொங்குமாங்கடலுக்குப் போகலாம்; அதற்கு மேலே மரப்பாலத்துக்குப் போகலாம்; இன்னும் மேலே செண்பகாதேவிக்கும், அதற்கும் அப்பால் உள்ள தேனருவிக்கும் கூடப் போகலாம்.

அப்படி மலைமீது ஏறிப் போவதிலுள்ள ஆனந்தம் வேறு எதிலும் கிடையாது.

அதிலும் குளிர்ந்த காலை நேரத்தில் மலைமேல் ஏறிப் போவதில் தனித்ததோர் மகிழ்ச்சி உண்டு. கிழக்கே உதிக்கும் சூரியன் மலையில் அங்கங்கே இடங்கொடுக்கும் சந்துகளின் வழியாகத் தன் பொற்கிரணங்களை அனுப்பி நம்மை உபசரணை செய்யும். ஒரு மலையிலிருந்து இன்னொரு மலை மீது ஏறும்போது பதினாயிரம் விதவிதமான பச்சை நிறப் போர்வையுடன் மரங்கள் வரிசை வரிசையாகக் காட்சி அளிக்கும். அருவி விழும் சலசலத்த ஓசையும் பறவைகளின் கலகலவென்னும் கீதங்களும் சேர்ந்து நம்மைப் புதியதொரு நாதப் பிரபஞ்சத்துக்குக் கொண்டு போய்விடும்.

ஒரு நாள் காலையில் மேலே கூறிய ஆனந்தங்களையெல்லாம் அனுபவித்துக் கொண்டு மலை மேலே ஏறிக் கொண்டிருந்தேன். சிற்றருவிக்குப் போகலாமென்று புறப்பட்டவனைக் குற்றாலக் குன்றின் இயற்கை இன்பம் மேலே மேலே கவர்ந்து இழுத்துச் சென்றது. கடைசியாக, செண்பகாதேவிக்கே போய்ச் சேர்ந்துவிட்டேன். செண்பகாதேவி அருவி விழும் இடத்தில் கிழக்கே செங்குத்தான பாறையும் அதன் மேலே உயரமான விருட்சங்களும் ஆகாசத்தைத் தொடுவன போல் ஓங்கி நிற்கின்றன. காலை நேரத்தில் அங்கே வெயில் என்பதே கிடையாது; மனிதர்களும் வரமாட்டார்கள். தனிமையும் தானுமாக இருக்க விரும்புகிறவனுக்குத் தகுதியான ஏகாந்தப் பிரதேசம்.

'இனிது இனிது ஏகாந்தம் இனிது'

என்று தமிழ் மூதாட்டி பாடியதாகக் கூறுவார்களே, அது இந்த இடத்தின் ஏகாந்தத்துக்கே பொருந்தும்.

இப்படியாக எண்ணமிட்டுக் கொண்டு செண்பகாதேவி ஆலயத்தைத் தாண்டி அப்பால் சென்றதும், எதிரே வெள்ளை வெளேரென்று பாலருவி விழும் அற்புதத் தோற்றம் காணப்பட்டது. இருபக்கமும் உயர்ந்து நின்ற பாறைகளும் மரங்களும் இயற்கைத் தேவிக்கு இறைவன் கட்டிய கோயில் எனத் தோன்றியது.


அடடா! என்ன ஆனந்தம்! என்ன ஏகாந்தம்! தனிமையில் இனிமையைக் காண்பது என்றால், இங்கேயல்லவா காண வேண்டும்!......

இப்படி நான் எண்ணி ஒரு கணத்திற்குள்ளே என் எண்ணம் தவறு என்று தெரிய வந்தது.

"ஸுஜலாம் ஸுபலாம் மலயஜ சீதலாம்" என்னும் வந்தேமாதர கீதத்தின் முதல் அடி புருஷக் குரலிலே கேட்டது. புருஷக் குரலிலும் கிழக் குரலாய்த் தொனித்தது. குரல் வந்த இடத்தைப் பார்த்தேன். அருவி விழும் இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் கீழேயிருந்த பள்ளத்தாக்கில் மொட்டைப் பாறை ஒன்றில் ஒரு சாது உட்கார்ந்திருந்தார்.

பெரிய தாடியோடும் சடா மகுடத்தோடும் விளங்கிய போதிலும் உடுத்தியிருந்த துணி மட்டும் வெளுப்பாயிருந்தது. ஆம்; துணி மட்டுந்தான் வெளுப்பாயிருந்தது. தாடியும் சடாமகுடமும் நல்ல கருநிறமாயிருந்தன! குரல், கிழக்குரல்; தாடியும் சடையும் யௌவன பருவத்துக்குரியவை. இது என்ன விந்தை?

இப்படி ஒரு நிமிஷம் நான் யோசித்துக் கொண்டிருக்கையில் அந்தப் பரதேசி என்னைப் பார்த்து விட்டார். சற்று நேரம் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு கையினால் தாம் மேலே வரப் போவதாகச் சமிக்ஞை செய்துவிட்டு அவ்விதமே மேலேறி வந்தார். நான் நின்ற இடத்துக்கு எதிரில் தாம் உட்கார்ந்து கொண்டு என்னையும் உட்காரச் சொன்னார். தாடியையும் சடையையும் சாவதானமாக எடுத்துக் கீழே வைத்தார். அவற்றை நீக்கியவுடனே, தும்பைப் பூவைப்போல் நரைத்த தலையுடன் எழுபது வயதுக்கு மேலான கிழவர் என் முன் காட்சி அளித்தார். ஆழ்ந்து குழி விழுந்த கண்ணினால் என்னை உற்றுப் பார்த்து, "இந்த இடமெல்லாம் எவ்வளவு மோசமாயிருக்கிறது, பார்த்தீரா? கோடைக்கானலுக்கும் உதகமண்டலத்துக்கும் வெள்



ளைக்காரர் ஆட்சியில் எவ்வளவு பணம் செலவழித்தார்களோ, அதில் நூற்றில் ஒரு பங்கு குற்றாலத்துக்குச் செலவு செய்திருந்தால் இப்படியிருக்குமா?'' என்றார் கிழவர்.

''பெரியவரே! தாங்கள் யார்?'' என்று கேட்டேன்.

''நான் யாராயிருந்தால் என்ன? நான் கூறிய விஷயம் உண்மையா, இல்லையா?''

''உண்மைதான்!''

''பின்னே, விடுங்கள்!''

அப்படியே நான் விட்டு விட்டு, அதாவது பேச்சை விட்டு விட்டுச் சும்மாயிருந்தேன். ஆனால் அவர் சும்மா இருக்கவில்லை. ''நீர் கதை எழுதுகிறவர் என்று கேள்விப் பட்டேன், உண்மைதானா?'' என்றார். நான் சொன்ன பதில் என் காதிலேயே விழவில்லை. ஆனால் அவர் மறுபடியும் சொன்னது மட்டும் கணீர் என்று என் காதில் விழுந்தது. ''அப்படியானால் என்னுடைய கதையையும் எழுதுவீரா?'' என்றார். அவருக்குக் கொடுத்த வாக்குறுதியை இதோ நிறைவேற்றப் போகிறேன்.

2

தலையில் தும்பைப் பூவை யொத்து நரைத்த ரோமம் அடர்ந்து, சுருக்குக் கோடுகள் மிகுந்த விசாலமான நெற்றியுடனும், அறிவொளி வீசிய ஆழ்ந்த கண்களுடனும், கூரிய வளைந்த மூக்குடனும், செந்நிற மேனியுடனும் விளங்கிய அக்கிழவர் கூறினார்:—

முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் நான் முதன் முதலில் இந்தக் குற்றாலத்துக்கு வந்தேன். அதாவது 1911 ம் வருஷம். மே மாதம். அதற்கு முன் மூன்று மாதம் திருநெல்வேலி ஜில்லாவிலும் திருவனந்தபுரம் சமஸ்தானத்திலும் சுற்றி அலைந்தேன். எந்த நோக்கத்துடன் வந்தேனோ, அது ஒன்றும் நிறைவேறவில்லை. வந்தபோது இருந்த உற்சாகம் ரொம்பவும் குறைந்து போயிருந்தது. 'குற்றாலநாதரே துணை' என்று கடைசியாக இங்கு வந்து சேர்ந்தேன். திருவனந்தபுரத்தைச் சேர்ந்த இராமபத்திர சர்மா என்பவர் அப்போது இங்கே ஒரு பங்களாவில் குடியிருந்தார். அவரைச் சந்தித்துச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்ததில் கொஞ்சம் உபயோகம் ஏற்பட்டதாகத் தோன்றியது.

இந்தச் செண்பகா தேவி அருவியின் அழகைப் பற்றியும் அந்த இராமபத்திர சர்மா தான் சொன்னார். தெரியாத ஜனங்கள் 'செண்பகா தேவி' என்று சொல்வதாகவும், உண்மையில் இது 'செண்பகாடவி' என்றும் சொன்னார். ''இங்கே அம்மன் கோயில் ஒன்று இருப்பது உண்மைதானே?'' என்று கேட்டேன். ''ஆம்; இருக்கிறது. அதனால் என்ன? செண்பகாடவியைச் செண்பகாதேவி என்று சொல்லிக் கடைசியில் ஒரு கோயிலும் கட்டிவிட்டார்கள்'' என்றார்.

இராமபத்திர சர்மா ஒரு மிதவாதி. அப்படி யென்றால் தெரியுமா? கோபால கிருஷ்ண கோக்கலே, ராஷ்விஹாரி கோஷ் கும்பலைச் சேர்ந்தவர். வெள்ளைக் காரர்களை அண்டிக் காலில் விழுந்து கெஞ்சிச் சுயராஜ்யம் வாங்கி விடலாம் என்று நம்பியவர். இந்தப் பிரதேசத்தில் அப்போதெல்லாம் இரத்தக் கொதிப்புள்ள சில வாலிபர்கள் இருந்தார்கள். அவர்கள் ''பால கங்காதர திலகரைப் பழி வாங்குவோம்'' ''வ.உ. சிதம்பரம் பிள்ளையைப் பழி வாங்குவோம்'' ''வெள்ளைக் காரர்களைப் பூண்டோடு அழித்துக் கூண்டோடு யமலோகம் அனுப்புவோம்'' என்று சொல்லிக்கொண்டு இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் மிதவாத இதோபதேசம் செய்வது இந்த இராமபத்திர சர்மாவின் வேலை. எனக்கோ அந்த மானமுள்ள வீர இளைஞர்கள் யாரையாவது சந்திக்க வேண்டுமென்று ஒரே துடிப்பாயிருந்தது. நான் இந்தப் பிரதேசத்துக்கு வந்த காரணமே அதுதான். அந்த இளைஞர்களைப் பற்றிச் சர்மா அடிக்கடி பேசுவதுண்டு. ஆனால் அவர்களில் யாரையாவது பற்றிச் சர்மாவிடம் தகவல் தெரிந்து கொள்ளலாமென்றால் அது ஒன்றும் தனக்குத் தெரியாது என்று அவர் கையை விரித்து விட்டார். திடீரென்று ஒருநாள் புறப்பட்டு ஊருக்குப் போய் விட்டார்.

ஏதோ குற்றாலத்துக்கு வந்ததுதான் வந்தோம், செண்பகாதேவி அருவியிலாவது ஒரு தடவை தலையைக் கொடுத்து விட்டுப் போவோம் என்று ஒரு நாள் காலை சுமார் ஒன்பது மணிக்கு மலைமேல் ஏற ஆரம்பித்தேன்.

கொஞ்ச தூரம் விரைவாகவே நடந்து போனேன். நீர்தான் பார்த்திருப்பீரே? மலைப் பாதைகளே எப்போதும் திரும்பித் திரும்பி வளைந்து வளைந்து போகும். முன்னால்



"உங்க ஹோட்டல் உபயோகத்திற்குக் கிரைண்டர் வாங்குவதை யார் எதிர்க்கிறாங்க?"

"வழக்கமா இங்கு சாப்பிட்டு விட்டு மாவாட்டுபவர்கள்தான்...."

— மணியன் தர்மலிங்கம்.



வந்தவர்: "இரண்டு வடை, ஒரு தோசை இவைகளுக்கான பில் போடுப்பா!"

சர்வர்: "முதல்ல சாப்பிட்டு முடிங்க ஸார், பில்லுக்கு என்ன அவசரம்?"

வந்தவர்: "அட்வான்ஸாக பில்லை வாங்கி வச்சுக்கிறேன். இந்த அயிடங்களைச் சாப்பிட்டு முடிக்கிறதுக்குள்ளே விலை ஏறிட்டால் என்ன பண்றது?"

— மீனம் தனுசு.

கணவன்: "திருடர்கள் பயம் அதிகமா யிடுச்சி... உன் நகைகளைக் கொடு பத்திரமாக வச்சுக்கறேன்!"

மனைவி: "எங்கே வச்சுக்கப் போறீங்க?"

கணவன்: "மார்வாடி கடையில்!"

— மேல்குந்தைவாசு.



போகிறவர்கள் பின்னால் வருகிறவர்களின் தலைக்கு மேலே சில இடங்களில் நடந்து போகும்படி நேரிடும். ஆசாமிகள் கண்ணுக்குத் தெரியமாட்டார்கள். ஆனால் மேலே போகிறவர்களின் பேச்சு கீழே வருகிறவர்களுக்கும் கீழே வருகிறவர்களின் பேச்சு மேலே நடப்பவர்களுக்கும் நன்றாய்க் காது கேட்கும்.

ஓரிடத்தில் என் தலைக்கு மேலே போகிறவர்களின் பேச்சு என் காதில் விழுந்தது. அவர்களில் ஒருத்தி இளம் வயதுப் பெண்ணாயிருக்க வேண்டும். அவளுடைய குரல் சொல்லிற்று:— "நான் உலகமறியப் பெண்ணாயிருந்த போது என்னை எங்க சின்னாயியும் சித்தப்பனும் இவருக்குக் கட்டிக் கொடுத்தாக! இவகளும் அப்போ வெல்லாம் என்னிடம் எத்தனையோ அன்பும் ஆசையுமாய்த்தானிருந்தாக! ஒரு காணி நிலம் எங்களுக்குப் பூர்வீக சொத்து. அதிலே வருசாந்தரத்துக்கு வேண்டிய நெல்லுக் கிடைத்து விடும். சாரற் காலத்திலே பெரிய பிரபுக்கள் குற்றாலத்து அருவியிலே குளிக்க வருவாக! நாங்க இருவருமாய் யாராவது ஒரு வீட்டிலே வேலை செய்வோம். நல்ல மனுஷாள் என்று தெரிந்துகொண்டு தான் போவோம். நல்லாச் சாப்பிடுவோம். இருபது முப்பது பணமும் மிச்சம்பிடிப்போம். வேனிற் காலத்திலே எங்களுக்கு வேலையிராது. தேர், திருவிழா, திருச்செந்தூர் உற்சவம் எல்லாம் பார்க்கப் போவோம். இப்படி எவ்வளவோ கண்யமாகத்தான் இருந்து வந்தோம்......."

ஆகா! இந்தத் திருநெல்வேலி ஜில்லாவில் குடியானவர்களும் குடியானப் பெண்களும் கூட எவ்வளவு அழகான செந்தமிழ் பேசுகிறார்கள் என்று எண்ணி நான் ஆச்சரியமடைந்தேன். ஆனால் அடுத்த படியாக அந்தப் பெண் சொன்னது என்னைத் தூக்கிவாரிப் போட்டு, அவளுடைய செந்தமிழ் நடையை மறக்கும்படி செய்து விட்டது.

"இந்தச் சுதேசிக்கார ஆளுக வந்தாலும் வந்தாக, குடும்பம் பாழாய்ப் போச்சு. இவக வேலை வெட்டி ஒன்றும் பாக்கறதில்லை. தூத்துக்குடி எங்கே, திருநெல்வேலி எங்கே, எட்டியாபுரம் எங்கே, ஆலப்புழை எங்கே என்று அலைகிறதே இவகளுக்குத் தொழிலாய்ப் போச்சு! அதுவும் போனாப் போகிறதென்று ஏதோ என் சாமர்த்தியத்தினாலே குடும்பத்தை நடத்திக் கொண்டு வந்தேன். ஆனால் இந்த ஆறு மாதமா இவக நடத்தை எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. யார் யாரோ திருடங்க மாதிரி இராத்திரிக்கு இராத்திரி வந்து கூட்டிக் கிட்டுப் போறாக. பொழுது விடிஞ்ச பிறகு கொண்டு விடறாக. நெத்தியிலே பெரிய குங்குமப் பொட்டைப் போட்டுக்கறாக. கண்ணைப் பார்த்தாக் கோவைப் பழம் மாதிரி செவந்து கெடக்கு. பேச்சைக்கேட்டா, ஒருமாதிரியாயிருக்கு. பலி என்கிறாக; இரத்தம் என்கிறாக! மலையாள மாந்திரிகம் என்று சொல்றாகளே, அதிலே ஏதாவது இவக அகப்

பட்டுக்கிட்டாகளோ என்று எனக்குப் பயமாயிருக்கு. ஐயா! செண்பகாதேவி அம்மனைத்தான் நான் நம்பியிருக்கேன். வெள்ளிக்கு வெள்ளி பூசை போடறேன். செண்பகாதேவி அம்மன்தான் என் புருசனை எனக்குக் காப்பாத்திக் கொடுக்க வேணும்!''

3

இந்தப் பேச்சு எனக்கு எவ்வளவு பரபரப்பை உண்டாக்கியது என்று உமக்குச் சொன்னால் கூடத் தெரியாது. அந்தப் பெண்பிள்ளை யார், அவள் யாரிடம் இதையெல்லாம் சொல்லிக் கொண்டு போகிறாள் என்று தெரிந்து கொள்ள எனக்கு ஆவல் ஏற்பட்டது. ஆகவே விரைவாக நடையைக் கட்டினேன். முன்னால் சென்றவர்களை நெருங்கினேன். சுமார் இருபத்தைந்து வயதுள்ள பெண்ணும் ஐம்பது வயதுக்கு மேற்பட்ட ஒரு பெரியவரும் போய்க் கொண்டிருந்தார்கள். பெரியவர், செண்பகாதேவி கோயிலின் பூசாரி என்று எனக்கு ஏற்கெனவே தெரியும். அவர்கள் மெதுவாக நடந்ததாலும் நான் வெகு விரைவாக நடந்ததாலும் மலைப்பாதையில் அவர்களைத் தாண்டிச் சென்றேன். தாண்டி ஐந்தாறு அடி தூரம் சென்றதும் அந்தப் பெண் எப்படிப்பட்டவள் என்று தெரிந்து கொள்வதற்காகத் திரும்பிப் பார்த்தேன். பாண்டிய நாட்டுக் குடியானப் பெண்களைப் போல அவள் ஒல்லியாயும், உயரமாயும் இருந்தாள். முகத்தில் நல்ல களை இருந்தது. கூந்தலை அழகாக எடுத்துக் கட்டிச் செருகியிருந்தாள். இதையெல்லாம் கவனிக்க எனக்கு ஒரு கண நேரந்தான் பிடித்தது. உடனே பார்வையைத் திருப்பிக் கொண்டு, விடுவிடு வென்று மேலே நடந்தேன்.

இப்போது நான் இங்கே உட்கார்ந்திருக்கிறேனே, இதே இடத்தில், முப்பத்தைந்து வருஷத்துக்கு முன்பு சடாமகுடதாரியான ஒரு சாமியார் ஒரு வெள்ளிக் கிழமை நடுப் பகலில் உட்கார்ந்திருந்தார். செண்பகா தேவி அம்மனுக்கு அபிஷேகம் செய்யத் தண்ணீர் மொண்டு போவதற்காக ஓர் இளம் பெண் இங்கே வந்தாள். அவள் முதலில் சாமியாரைக் கவனிக்கவில்லை. அவள் குனிந்து தடத்திலே தண்ணீர் மொண்ட போது சாமியார் கனைத்தார். அதைக் கேட்டு அப் பெண் சாமியாரைப் பார்த்தாள். அருகில் வந்து கும்பிட்டாள். ''பெண்ணே! உன் மனத்தில் ஏதோ கவலை இருக்கிறது!'' என்றார் சாமியார். ''ஆமாஞ்சாமி! தங்களைப் போன்ற பெரியவகதான் தீர்த்து வைக்க வேணும்!'' என்றாள் அந்தப் பெண். ''அப்படியே தீர்த்து வைப்போம்! என்ன கவலை சொல்!'' என்று சாமியார் கேட்டார்.

''தங்களுக்குத் தெரியாதா, சாமி! இந்தப் பொன்னியம்மா சொல்லித்தானா தெரிஞ்சுக்க வேணும்?''

நம்பிக்கையும் சந்தேகமும் பொன்னியம்மாள் மனத்தைக் சூழப்புவதாகச் சாமியார் ஊகித்துக் கொண்டார்.

''ஆகட்டும்; நாமே சொல்கிறோம். உன் புருசன் விஷயமாகக் கவலைப்படுகிறாய். அவனுடைய நடத்தை ஒரு ஆறு மாத காலமாகச் சரியாக இல்லை. வேளா வேளையில் காலா காலத்தில் வீட்டுக்கு வருவதில்லை. இரவு நேரங்களில் வெளியே போகிறான். ஊர் விட்டு ஊர் போகிறான். காரணம் சொல்ல மாட்டேனென்கிறான். சில சமயம் நெற்றியிலே பெரிய குங்குமப் பொட்டு வைக்கக்கிறான். இதெல்லாம் உண்மையா, இல்லையா?'' என்றார் சாமியார்.

''ஆமாஞ் சாமி! தங்களுக்கு எல்லாந் தெரிஞ்சிருக்கே. சாமிதான் என் புருசனைக் காப்பாத்த வேணும். என்னைக் குடியும் குடித்தனமுமாய் வைக்க வேணும்'' என்று பொன்னியம்மாள் கண்ணீருடன் கூறினாள்.

''ஆகட்டும்; காப்பாத்துகிறேன். ஆனால் நீ என்னிடம் நம்பிக்கை வைக்க வேணும். ஒரு விஷயத்தில் நிஜத்தைச் சொல், பார்க்கலாம். இந்த இரண்டு மூன்று நாளிலே உன் வீட்டைத் தேடி யாராவது அசலூர்க்காரர்கள் வந்ததுண்டா? உன் புருசனுக்கு ஏதாவது செய்தி சொன்னதுண்டா?''

''உண்டு, சாமி! முந்தாநாள் செங்கோட்டை ஆள் ஒருத்தர் வந்தாரு. நாளை ஞாயிற்றுக்கிழமை எல்லாரும் தூத்துக்குடி கடற்கரையிலே கூடவேணும் என்றும், கையிலே அடையாளத்துக்கு ஒரு கிளிஞ்சல் வச்சிருக்க வேணும் என்றும் சொன்னாரு. எதுக்கு, என்னாத்துக்கு என்று எனக்கு ஒண்ணும் தெரியாது! அசலூர்க் காரங்க வந்தாலே எனக்குச் சந்தேகம், சாமி! ஒளிஞ்சிருந்து கேட்டதை உங்களிடம் சொன்னேன்.''

''நல்ல காரியம் செய்தாய். நீ கொஞ்சமும் கவலைப்படாதே. உன் புருசன் ஒரு மலையாளத்து மந்திரவாதியிடத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறான். அவனை நான் காப்பாத்திக் கொடுக்கிறேன். அடுத்த வெள்ளிக் கிழமை இந்த இடத்திலேயே என்னை வந்து பாரு! இன்னும் சில செய்தி சொல்லுகிறேன்!'' என்றார் சாமியார்.

இதற்குள் கோயிலுக்குள்ளேயிருந்து, ''பொன்னியம்மா!'' என்று பூசாரி கூப்பிடும் சத்தம் கேட்டது.

''இதோ வந்து விட்டேன்!'' என்று பொன்னியம்மாவும் உரத்த குரலில் கூறினாள்.

சாமியார் அவளை உற்றுப் பார்த்து, ''ஜாக்கிரதை! என்னிடம் பேசிய விஷயம் யாருக்கும் சொல்லப்படாது. பூசாரிகிட்டக் கூடச் சொல்லக் கூடாது. சொன்னால் காரியம் கெட்டுப் போய்விடும். உன் புருசன் உனக்குக் கிட்ட மாட்டான்!'' என்று எச்சரித்தார்.

4


அடுத்த ஞாயிற்றுக் கிழமையன்று பிற்பகலில் தூத்துக்குடி கடற்கரை மணலில் நான் அங்குமிங்கும் திரிந்து கொண்டிருந்தேன். குறுக்கே நெடுக்கே போகிறவர்களைப் பார்க்காதது போலப் பார்த்துக் கொண்டு அலைந்தேன். படகுகள், கட்டு மரங்கள், செம்படவர்களின் வலைகள் இவற்றில் தடுக்கி விழாமலும் மோதிக் கொள்ளாமலும் ஜாக்கிரதையாக நடக்க வேண்டியிருந்தது. ஒரு சமயம் ஒரு மனிதன் குனிந்து ஒரு கிளிஞ்சலைப் பொறுக்கியதைப் பார்த்தேன். அப்போது மணலில் தோண்டியிருந்த பள்ளத்தில் நான் விழுந்து விட்டேன். நல்ல வேளையாக யாரும் பார்க்கவில்லையென்பதைத் தெரிந்து கொண்டு நானும் ஒரு கிளிஞ்சலைக் கையில் எடுத்துக் கொண்டு உலாவினேன். இன்னொரு கிளிஞ்சல் பேர்வழியைக் கண்டதும் என் கையில் உள்ள கிளிஞ்சல் தெரியும்படியாகப் பிடித்துக் கொண்டேன். அந்த மனிதர் "வந்தே மாதரம்!" என்று சொன்னார். நானும் திருப்பி "வந்தே மாதரம்" என்றேன். அவர் என்னை ஒரு மாதிரி பார்த்துக் கொண்டு அப்பால் போய் விட்டார்.

மறுபடியும் சுற்றி அலைந்தேன். இரண்டு கிளிஞ்சல் பேர்வழிகள் ஒருவரையொருவர் சந்தித்தார்கள். ஒருவர் "வந்தே மாதரம்!" என்றார். இன்னொருவர் "வ.உ.சி. வாழ்க!" என்றார். 'ஓஹோ! இப்படியா மாற்று கோஷம்' என்று மனத்தில் எண்ணிக் கொண்டு அவர்கள் அண்டை சென்று "வந்தே மாதரம்!" என்றேன். அவர்களில் ஒருவர் "வ.உ.சி. வாழ்க!" என்றார். இன்னொருவர் "வெள்ளைக்காரன் வீழ்க!" என்றார். 'சரியாய்ப் போச்சு! மூன்று பேர் சேர்ந்தால் இப்படிச் சொல்ல வேண்டுமாக்கும்' என்று நினைத்துக்கொண்டேன். "மற்றவர்கள் எல்லாரும் எங்கே?" என்று கேட்டேன். "இருக்கிற இடத்தில் இருப்பார்கள்!" என்று ஒருவர் பதில் சொல்லிக் கொண்டே மேலே நடந்தார். நானும் அவர்களைத் தொடர்ந்து போனேன். கடைசியாக, கடல் மணலில் கொஞ்சம் பள்ளத்தாக்கான ஓரிடத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். ஏற்கெனவே, ஏழெட்டுப் பேர் அங்கே உட்கார்ந்திருந்தார்கள். நாங்கள் வந்த அதே சமயத்தில் இன்னும் இருவர் வேறு பக்கத்திலிருந்து வந்தார்கள். ஆக மொத்தம் பதினைந்து பேர் இருக்கும்.

எல்லோரையும் முதலில் சந்தேகித்துச் சந்தேகப் பட்ட மனிதரும் அவர்களில் இருந்தார். என்னைப் பார்த்தவுடனே அவர், பதினைந்து பேரில் நடுநாயகமாக வீற்றிருந்த மனிதரைப் பார்த்து, "சுவாமி! இதோ இந்த மனிதர் புதியவர். இவருக்குப் பதில் கோஷம் தெரியவில்லை. யார் என்று விசாரிக்க வேண்டும்" என்றார். அவரால் "சுவாமி!" என்று அழைக்கப்பட்டவர் என் பக்கம் தம் திருஷ்டியைத் திருப்பினார். யௌவன பிராயம்; இயற்கையில் எழில் வாய்ந்த முகம். அதோடு யோக சாதனத்தினால் ஏற்பட்ட தேஜஸும் சேர்ந்திருந்தது. அவர் என்னை ஏறிட்டுப் பார்த்த போது என் கண்கள் கூசின. "அப்பனே! நீ யார்?" என்று கேட்டார். அவரை விட நான் வயதானவனாயிருந்தும், என்னை ஏக வசனத்தில் அவர் அழைத்தது சிறிது கோபம் அளித்தது. கோபத்தை அடக்கிக் கொண்டு, "நான் கோயமுத்தூரிலிருந்து வருகிறேன். இந்த ஊர்க்காரர் அங்கே இருக்கிறார் அல்லவா? அவர் செய்தி சொல்லி அனுப்பினார்!" என்றேன். உடனே அந்தக் கூட்டத்தில் ஏற்பட்ட பரபரப்பைப் பார்க்க வேண்டுமே! தலைக்குத் தலை "அப்படியா? என்ன சொன்னார்? எப்போது சொன்னார்?" என்று பல கேள்விகளை ஏக காலத்தில் போட்டார்கள். தலைவர் அவர்களைக் கையமர்த்தி அடக்கி விட்டு, "ஐயா! விவரமாகச் சொல்ல வேணும். இந்த ஊர்க்காரர் எத்தனையோ பேர் கோயமுத்தூரில் இருக்கலாம். நீர் யாரைச் சொல்கிறீர்? அவர் சொல்லி அனுப்பியது என்ன?" என்று அதிகார பூர்வமான குரலில் கேட்டார். இவர்தான் புதுச்சேரியிலிருந்து வந்திருக்கும் யோகி நீலகண்ட பிரம்மச்சாரியாயிருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டேன்.

இதற்குள் கூட்டத்தில் ஒருவர், "வெறும் வாய்ப் பேச்சுச் செய்தியா? அத்தாட்சி ஏதேனும் உண்டா என்று கேட்டு விடுங்கள்" என்று படபடத்த குரலில் கூறினார். அவர் பக்கத்திலிருந்தவர், "வாஞ்சி! நீ சும்மா இரு!" என்றார். இதிலிருந்து படபடத்த ஆசாமி செங்கோட்டை வாஞ்சி ஐயர் என்று தெரிந்து கொண்டு, அவரிடம் கொஞ்சம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் தீர்மானித்தேன்.

"நான் கேட்ட கேள்விக்குப் பதில் வேணும்!" என்று தலைவர் மறுபடியும் கூறினார்.





மனைவி: "போஸ்ட் மேனோட என்ன தகராறு?"

கணவன்: "எதுக்கு சார் வேஸ்டா பத்திரிகை ஆபீஸுக்குப் போயிட்டு திரும்பி வரணும்'னு சொல்லிட்டு நான் நேத்து போஸ்ட் பண்ண கதையைத் திருப்பிக் கொடுக்குறான்!"

— எஸ். செந்தில்குமார்.

நான் உடனே அக் கூட்டத்திலிருந்த அனைவரையும் ஒரு தடவை கண்களைச் சுழற்றி நன்றாகப் பார்த்து விட்டு உறுதியான நாவில் கூறினேன்:—

"வெள்ளைக்காரனுக்குப் போட்டியாகக் கப்பல் ஓட்டிய வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளையைத்தான் சொல்கிறேன். வேறு யாரைச் சொல்வேன்? ஒரு வருஷ காலம் அந்த மகானுக்குப் பணிவிடை செய்யும் படியான பாக்கியம் இந்த ஏழைக்குக் கிடைத்தது. பொய்யாக 'போர்ஜரி' குற்றம் சாட்டி எனக்குத் தண்டனை விதித்திருந்தார்கள். அப்படிப் பொய்க் குற்றம் சாட்டிய புண்ணியவான்களை நான் என்றென்றைக்கும் வாழ்த்தி அவர்கள் நன்றாயிருக்க வேணுமென்று கடவுளைப் பிரார்த்தித்து வருவேன். ஏனெனில், அம்மாதிரி பொய்க் குற்றம் சாட்டி என்னைச் சிறைக்கு அனுப்பியதால் தானே பாரத மாதாவின் தவப் புதல்வரை நான் சந்திக்க நேர்ந்தது? அவருடன் ஒரு வருஷம் தங்கியிருக்க நேர்ந்தது? அவருக்கு அவசியமாயிருந்த போது பணிவிடைகள் செய்ய முடிந்தது? ஆகா! நானும் என் ஆயுவாணாளில் எத்தனையோ மனிதர்களைப் பார்த்திருக்கிறேன். இவரைப் போல் ஒரு வீரரை, ஒரு தீரரை ஒரு தியாகியை, ஒரு குணவானை, ஒரு உத்தமனை, கண்டதுமில்லை கேட்டதுமில்லை. ஐயா! மாடு இழுக்க வேண்டிய செக்கை அந்த மகா புருஷர் தம் திருக் கரங்களினால் இழுத்தார். அதை இந்தப் பாவியின் கண்கள் பார்த்தன.....!" என்று சொல்லி வந்த போது எனக்கு அழுகை வந்து விட்டது. சற்று நேரம் விம்மி அழுதேன். அங்கே கூடியிருந்தவர்களில் மற்றும் சிலரும் அழுதார்கள். வாஞ்சி ஐயர் 'ஓ'வென்று அழுது தீர்த்து விட்டார். மடத்துக் கடைச் சிதம்பரம் பிள்ளை முகத்தில் துணியைப் போட்டுக் கொண்டு தேம்பினார். வந்தேமாதரம் சுப்பிரமணிய ஐயர் குப்புறப்படுத்துக் கொண்டு விம்மினார்.

கல் நெஞ்சர் என்று அனைவரும் எண்ணியிருந்த நீலகண்ட பிரம்மச்சாரியின் கண்களும் கலங்கி விட்டன.

பிறகு கொஞ்சம் கொஞ்சமாக எல்லா விவரங்களையும் கூறி முடித்தேன். வ. உ. சிதம்பரம் பிள்ளை சொல்லி அனுப்பிய செய்தியையும் கடைசியாகச் சொன்னேன்:—

"என்னுடைய கஷ்டங்களை ஒருவரும் பொருட்படுத்த வேண்டாம். இம் மாதிரி இன்னும் நூறு மடங்கு கஷ்டங்களை வேணுமானாலும் பாரதத் தாயின் விடுதலைக்காக நான் அனுபவிக்கத் தயார். ஆனால் 'சிதம்பரம் பிள்ளையை உள்ளே தள்ளினோம்; எல்லாம் அடங்கிப் போய் விட்டது' என்று வெள்ளைக்காரன் கொட்டமடிப்பானே என்று நினைத்தால் தான் என் உள்ளம் கொதிக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளையைத் தவிர வேறு ஆண்மகனே இல்லை என்று சரித்திரம் சொல்ல இடம் கொடாதீர்கள்! சிதம்பரம் பிள்ளையையும் சுப்பிரமணிய சிவத்தையும் பிடித்துப் போட்டதும் சுதேசி இயக்கம் செத்து விட்டது என்று சரித்திரம் எழுத இடம் கொடாதீர்கள்!"

இவ்வாறு சிறைக்குள்ளிருந்து ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை அனுப்பிய செய்தியை அந்தக் கூட்டத்தாருக்குத் தெரிவித்து விட்டு, மடியிலிருந்த ஒரு கசங்கிய கடுதாசியை எடுத்தேன். "இங்கே யாருக்காவது வ. உ. சிதம்பரம் பிள்ளையின் கையெழுத்துத் தெரியுமா?" என்று கேட்டேன். இரண்டு பேர் ஏக காலத்தில் "தெரியும்" என்று கையை நீட்டினார்கள். அவர்களில் ஒருவர் தூத்துக்குடி முத்துக்குமாரசாமிப் பிள்ளை. இன்னொருவர் கடையநல்லூர் சங்கர கிருஷ்ணையர். இருவரும் கடிதத்தைப் படித்து விட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள். மற்றவர்களும் ஒவ்வொருவராய்ப் பார்த்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டு அடுத்தவர்களிடம் கொடுத்தார்கள்.

நீலகண்ட பிரம்மச்சாரி ஒரு சிம்ம கர்ஜனை செய்ததும் எல்லாருடைய கண்களும் அவர்பால் சென்றன.

"தோழர்களே! நம்மையெல்லாம் ஆண் பிள்ளைகள் என்றும் வீர சிம்மங்கள் என்றும் எண்ணிக் கொண்டு தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை செய்தி அனுப்பியிருக்கிறார். நாமோ சற்று முன்பு நெஞ்சு திடமில்லாத கோழைகளைப் போலவும் பெண் பிள்ளைகளைப் போலவும் நடந்து கொண்டோம். எல்லோரும் கண்ணீர் விட்டுத் தேம்பி விம்மி அழுதோம். ஒப்பாரி வைப்பது ஒன்றுதான் மிச்சம். அதை

யும் வேணுமானாலும் இப்போது எல்லாரும் சேர்ந்து செய்து விடுவோம்!'' என்று நீலகண்ட பிரம்மச்சாரி கூறிய மொழிகள் எல்லாரையும் வெட்கமடையும்படி செய்தன.

''தலைவராகிய தாங்களுங் கூடத்தான்...'' என்று கூட்டத்தில் ஒருவர் சொல்லுவதற்குள்ளே பிரம்மச்சாரி, ''என்னையும் சேர்த்துத்தான் சொன்னேன். உங்களை மட்டும் நான் சொல்லவில்லை. எல்லாருமே சற்று முன்பு கோழைகளாகி விட்டோம். உண்மையில் நாம் புரட்சி வீரர்களாயிருக்கும் பட்சத்தில், சிதம்பரம் பிள்ளை சிறையில் பட்ட கஷ்டங்களைக் கேட்டு நாம் களிப்படைய வேண்டும். நமது நெஞ்சுகள் இரும்பாக மாற வேண்டும். சுவிரக்கம், பச்சாத்தாபம் எல்லாவற்றையும் மனத்திலிருந்து துடைத்து விட வேண்டும். எதிரிகள் விஷயம் ஒருபுறம் இருக்கட்டும். நம்பிலேயே யாராவது ஒருவன் துரோகியாகி விட்டதாகத் தெரிந்தால், அவனைக் கண்டதுண்டம் செய்யவும் தயாராயிருக்க வேண்டும். அப்போதுதான் நாம் பாரதத்தாயின் உண்மையான புதல்வர்களாவோம்!''

தலைவர் இப்படிச் சொன்ன போது, அந்தக் கூட்டத்தில் பூரண நிச்சப்தம் நிலவியது. ஒருவர் முகத்தை ஒருவர் ஏறிட்டுப் பாராமல் எல்லாரும் தலைகுனிந்த வண்ணம் இருந்தார்கள். நானும் அப்படித்தான் இருந்தேன். நிமிர்ந்து பார்த்தாலும் ஏதேனும் சந்தேகத்துக்கு இடமாகும் என்ற எண்ணம் ஒவ்வொருவர் மனத்திலும் இருந்தது. உள்ளக் கொந்தளிப்பைப் பிரதிபலிப்பது போலச் சற்றுத் தூரத்தில் கடல் அலைகள் கரையில் மோதும் சத்தம் கேட்டது. அத்தனை நேரமும் கேட்காத அலைச் சத்தம் அப்போது ஏற்பட்ட நிச்சப்தத்தினால் காதிலே வந்து தாக்கிற்று.

''தோழர்களே! ஒரு சில நிமிஷம் உணர்ச்சிக்கு இடங் கொடுத்து விட்டதற்காக நிரந்தரமான சோகக் கடலில் நாம் மூழ்கிவிடக் கூடாது. இந்த மாதிரி ஒரு சம்பவம் நடந்ததும் நன்மைக்குத்தான்; இனிமேல் தவறு செய்யாமலிருக்க உதவியாயிருக்கும். இந்தக் கடற்கரையிலே ஒரு காலத்தில் இரண்டு தேச பக்த சிம்மங்கள் கர்ஜனை புரிந்தன. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமண்ய சிவம் – இந்த இரண்டு வீரர்கள் இங்கே வேலை செய்து ஒரு பெரும் புரட்சியை உண்டு பண்ணினார்கள். திருநெல்வேலி ஜில்லா முழுதும் புரட்சித் தீ எரிந்தது. இந்தத் தூத்துக்குடி நகரத்தில் சுதேசி இயக்கத்துக்கு விரோதமாயிருந்தவர்களுக்கு நாவிதன் க்ஷவரம் செய்ய மறுத்தான்; வண்ணான் துணி வெளுக்க மறுத்தான். சிதம்பரம் பிள்ளை சொன்னாரென்றால், கடைக்காரர்கள் கடையைத் திறக்க மறுத்தார்கள்; தொழிலாளிகள் ஆலைக்குப் போக மறுத்தார்கள். கலெக்டர் விஞ்சு ஓடி வந்து ஆன மட்டும் கெஞ்சிப் பார்த்தான்; முக்கிப் பார்த்தான்; தோப்புக்கரணம் போட்டுப் பார்த்தான்; பயன்படவில்லை. சிதம்பரம் பிள்ளையின் வாக்கு சர்க்கார் உத்தரவை விடச் செல்வாக்குப் பெற்றிருந்தது. அதைக் கண்ட விஞ்சு துரை மனங் கொதித்தான்; துள்ளிக் குதித்தான். 'சிதம்பரம் பிள்ளையைக் கொண்டு வா!' என்றான். யமகிங்கரர்கள் போன்ற போலீஸ் ஜவான்கள் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அப்போது நடந்த சம்பாஷணையை இன்று புதுச்சேரியில் வீற்றிருக்கும் நமது தேச மகாகவி அற்புதமாய்ப் பாடியிருக்கிறார், கேளுங்கள்!

'கூட்டங் கூடி வந்தே மாதர மென்று
கோஷித்தாய் – எமைத் – தூஷித்தாய்
ஓட்டம் நாங்கள் எடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய் – பொருள் – ஈட்டினாய்!'

என்று கலெக்டர் விஞ்சு துரை கர்ஜித்தானாம். அதற்கு நம் வீரர் சிதம்பரம் பிள்ளை,

'வந்தேமாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம் – முடி – தாழ்த்துவோம்
எந்தமாருயிர் அன்னையைப் போற்றுதல்
ஈனமோ – அவ – மானமோ?'

என்று பதில் சொன்னாராம். உடனே கலெக்டர் விஞ்சு துரை கோபத்தால் துடிதுடித்தானாம்.

'கட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன் – குத்திக் – கொல்லுவேன்
தட்டிப் பேசுவாருண்டோ? – சிறைக்குள்ளே



''என்னங்க போன மாசம் பத்தாயிரம் தான் இந்த வேலைக்கு லஞ்சம் கேட்டீங்க. இப்ப இருபதாயிரம் கேட்குறீங்க?''

''மத்திய அரசுக்கு ஈடா இப்ப சம்பளம் கூடப் போவுதே!''

— பொடுசி.

தள்ளுவேன் — பழி — கொள்ளுவேன்!'

என்று பயமுறுத்தினானாம். அதற்கு நம் தேசபக்த வீரர் என்ன பதில் சொன்னார் தெரியுமா?

> **'சதையைத் துண்டு துண்டாக்கினும் உன் எண்ணம்**
> **சாயுமோ — ஜீவன் — ஓயுமோ?'**
> **இதயத்துள்ளே இலங்கு மகாபக்தி**
> **ஏகுமோ — நெஞ்சம் — வேகுமோ?'**

என்று சிறிதும் அஞ்சாமலும் நெஞ்சம் கலங்காமலும் பதில் கூறினார். அத்தகைய வீர புருஷர் வாழ்ந்த இந்தத் தூத்துக்குடி நகரமும் இந்தத் திருநெல்வேலி ஜில்லாவும் இப்போது ஒரே தூக்கமாகத் தூங்குகின்றன.....!''

''ஒன்றும் தூங்கவில்லை! யாராவது தப்பித் தவறித் தூங்கினால் அவன் ஜேபியிலிருப்பதைச் சுரண்டுவதற்கு இந்த ஜில்லாவில் எல்லாரும் தயாராயிருக்கிறார்கள்!'' என்று கூட்டத்தில் ஒருவர் இலேசாகச் சொன்னார். அவர் பெயர் சாவடி அருணாசலம்பிள்ளை என்று தெரிந்து கொண்டேன்.

''இப்போது யார் என்ன சொன்னார்கள்?'' என்று நீலகண்ட பிரம்மச்சாரி அதட்டிக் கேட்டபோது, சாவடிப் பிள்ளை, 'தூங்குகிறவர்களையாவது எழுப்பலாம்; தூங்குகிறதாகப் பாசாங்கு செய்கிறபடியால் எழுப்பவும் முடியாது என்று சொன்னேன்!'' என்றார்.

''இல்லை; அப்படி நினையாதீர்கள். கட்டாயம் எழுப்பலாம்! ஒரு வேட்டுச் சத்தம் கேட்க வேண்டியதுதான்; எல்லாரும் எழுந்து விடுவார்கள். தோழர்களே! வெறுமனே பேசிக்கொண்டிருக்கிற காலம் போய் விட்டது. 'காரியத்தில் இறங்க வேண்டிய காலம் வந்து விட்டது. உங்களில் எவ்வளவு பேர் காரியத்தில் இறங்கத் தயாராயிருக்கிறீர்கள்? தயாராய் இருப்பவர்கள் கையைத் தூக்குங்கள்!'' என்றதும், அவ்வளவு பேரும் கையைத் தூக்கினார்கள். நானும் தூக்கினேன். வாஞ்சி ஐயர் இரண்டு கையையும் தூக்கினார்.

''ஆறு மாதமாக நாங்கள் காரியத்துக்குத் தயாராகத்தான் இருக்கிறோம். நீங்கள்தான் 'இன்னும் காலம் வரவில்லை' 'காலம் வரவில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தீர்கள். 'ஊர் கூடித் தேர் இழுக்கும் காரியமா?' என்ற வாஞ்சி ஐயர் மீண்டும் படபடப்பாய்ப் பேசினார்.

''வாஞ்சி! நீ சற்றுச் சும்மா இரு. பேச்சிலே வீரனாயிருப்பவன் காரியத்திலே கோழையாயிருப்பான். 'ஊர் கூடித் தேர் இழுக்க முடியாது' என்றா சொல்கிறாய்? முடியும் என்று நான் சொல்கிறேன். தமிழ்நாட்டில் நூறு இடத்தில் ஒரே தேதியில் சேர்ந்தாற் போல் புரட்சி நடக்கப் போகிறது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் தயார். தேதி குறிப்பிட வேண்டியது ஒன்றுதான் பாக்கி. குறிப்பிட்ட தேதியில் இந்த மாகாணத்திலுள்ள அவ்வளவு வெள்ளைக்காரர்களும் கட்டுத் தள்ளப்படுவார்கள். ஜார்ஜ் பஞ்சமனுடைய ஆட்சி முடிவடையும். மறுநாள் நமது சிதம்பரம் பிள்ளைதான் தமிழ்நாட்டுக்கு மகாராஜா.. இப்படியே ஒவ்வொரு மாகாணத்திலும் நடக்கப் போகிறது.''

இதைக் கேட்டதும் எல்லாருக்கும் ரோமம் சிலிர்த்தது. என்னுடைய நெஞ்சம் பட், பட் என்று அடித்துக் கொண்டது. அவ்வளவு சீக்கிரமாகக் காரியங்கள் நடக்கப் போகின்றன என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆகா! தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை இட்ட தீ பெரிய தீதான்!



அவர்: ''இப்பவெல்லாம் நீ உன் காதலியை பீச்சுக்குக் கூட கூட்டிட்டுப் போறதில்லையாமே, ஏன்?''

இவர்: ''ஆமாம், எல்லா சுண்டல்காரங்கிட்டேயும் பாக்கி நிக்கிது!''

— ஜனநேசன்.

கூட்டத்தில் சிலர் ''தேதி எப்போது சொல்லப் போகிறீர்கள்?'' என்று கேட்டார்கள். ''அன்றைக்கு என்ன செய்ய வேண்டும்? என்ன மாதிரி செய்ய வேண்டும்?'' என்று இன்னும் சிலர் கேட்டார்கள்.

நீலகண்ட பிரம்மச்சாரி கூறினார்:— ''இன்ன தேதி என்பதையும் அன்றைக்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் அடுத்த கூட்டத்தில் சொல்வேன். இது வரையில் வெறுமனே பேசிக் கொண்டிருந்தோம். ஆகையால் எங்கே வேணுமானாலும் கூட்டம் போட்டோம். காரியத்தில் இறங்க வேண்டிய காலம் இப்போது வந்து விட்டதால், இடம் பொருள், ஏவல் அதற்குத் தக்கபடி இருக்க வேண்டும். தோழர்களே! நம்முடைய அடுத்த கூட்டத்தைக் குற்றாலத்தில் கூட்டப் போகிறேன். அடுத்த பௌர்ணமியன்று கூட்டம். குற்

றாலத்தில் கூட்டம் எங்கே கூடும், எந்த நேரத்தில் கூடும் என்பதைக் காசிமேஜர் புரத்திலுள்ள நமது முருகையனைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்..... என்ன, முருகையா? சரிதானே?''

முருகையன் — பொன்னியம்மாவின் கணவன் — யார் என்பதை அப்போது ஐய மறத் தெரிந்து கொண்டேன். நான் ஊகித்த மனிதன்தான்.

''சுவாமி! நான் இப்போது காசிமேஜர் புரத்தில் இல்லை. குற்றாலத்தில் சர்மா பங்களாவில் இருக்கிறேன்!'' என்றான் முருகையன்.

''அப்படியானால் விசாரிக்க வருகிறவர்களுக்கு இன்னும் சௌகரியமாகப் போச்சு: ஆனால் பங்களாவில் சர்மா இருக்காகளா?''

''இல்லை, ஐயா! நல்ல வேளையாய்த் திருவிதாங்கூருக்கு நேற்றுத்தான் போனாக; திரும்பி வருவதற்கு இரண்டு மாதம் பிடிக்குமாம்!''

''பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் ஆச்சு! இராமபத்ர சர்மா நல்ல மனுஷர்தான்; ஆனால் பழுத்த மிதவாதி. அவரோடு விவாதம் செய்வதைக் காட்டிலும் குட்டிச் சுவரில் முட்டிக் கொள்ளலாம். ஆனாலும் அவரோடு நான் செய்த விவாதத்தைக் கேட்டுத்தானே நீ நம்ம கோஷ்டியில் சேர்ந்தாய், முருகையா! சர்மா நன்றாயிருக்க வேணும்!'' என்றார் பிரம்மச்சாரி.

பிறகு, இரண்டு பேராயும், மூன்று மூன்று பேராயும் அங்கிருந்தவர்கள் கலைந்து சென்றார்கள். வாஞ்சி ஐயரையும் தர்மராஜ ஐயரையும் பிடித்துக் கொண்டு நான் சென்றேன். அந்த இரண்டு மனிதர்களையும் எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

5

இரண்டு வார காலம் ரொம்பச் சாவகாசமாகவே சென்றது. பௌர்ணமிக்கு மூன்று நாளைக்கு முன், நீலகண்ட பிரம்மச்சாரி வந்து இராமபத்திர சர்மாவின் பங்களாவில் உட்கார்ந்து கொண்டார். பலர் அவரை வந்து பார்ப்பதும் போவதுமாயிருந்தார்கள். நானும் இரண்டொரு தடவை சென்று பார்த்தேன். பேசினேன். அபாரமான படிப்பும் கூரிய அறிவும் உள்ளவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் இவர் சொல்கிறபடியெல்லாம் நடக்கப் போகிறதா, ஒரே நாளில் பிரிட்டிஷ் ராஜ்யம் கவிழ்ந்துவிடப் போகிறதா என்று நினைத்துப் பார்த்த போது கொஞ்சம் வியப்பாகத்



தானிருந்தது. அது எப்படியானால் என்ன? நம்முடைய கடமையை நாம் செய்துவிட வேண்டியது என்று உறுதி கொண்டேன். நீலகண்ட பிரம்மச்சாரியைப் பார்க்கப் போன சமயத்தில் அந்தப் பங்களாவின் தோட்ட வீட்டிலே குடியிருந்த முருகையனும் பொன்னியம்மாவும் எவ்வளவு அன்புமயமான வாழ்க்கை நடத்தினார்கள் என்பதையும் கவனித்தேன். பாவம்! அவர்களுடைய வாழ்க்கையின் இன்பத்தைக் கெடுப்பதற்கு இந்தப் பிரம்மச்சாரி வந்து சேர்ந்தார். பொன்னியம்மாவின் முகத்தில் கவலைக்குறி முன்னைவிட அதிகமாகியிருந்ததை நான் கவனியாமல் இல்லை.

பௌர்ணமியன்று மாலை. செண்பகாதேவியில் பொன்னியம்மாவுக்குத் தைரியம் கூறிய சாமியார், சர்மாவின் பங்களாவுக்கு வந்து சேர்ந்தார். தோட்டக் கதவைத் திறந்து கொண்டே உள்ளே பிரவேசித்தார். பங்களாவில் ஒருவரும் இல்லை; தோட்டத்திலும் ஒருவருமில்லை. விசாரிக்க வேண்டியவர்கள் எல்லாரும் வந்து விசாரித்துக் கொண்டு மலை மேல் ஏறி விட்டார்கள். தோட்டக் குடிசையில் பொன்னியம்மா மட்டும் தன்னுடைய ஐந்து வயதுப் பெண் குழந்தையுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

சாமியாரைப் பார்த்ததும் அவள் குடிசைக்குள்ளேயிருந்து விரைந்து வெளியே வந்தாள்.

''சாமி! இது என்ன இந்த நேரத்தில் வந்தீர்கள்? இங்கே ஆண் பிள்ளைகள் ஒருவரும் இல்லையே!'' என்றாள்.

''பொன்னியம்மா! இராத்திரி இங்கே தங்குவதற்காக நான் வரவில்லை. மலை மேல் இராத்திரி எனக்கு வேலையிருக்கிறது. இதோ திரும்பிப் போகிறேன். ஆனால், உனக்கு வாக்குக் கொடுத்தேனே, அதை நிறைவேற்றி விட்டுப் போகத்தான் அவசரமாக வந்தேன்!''

''என்ன வாக்கு, சாமி?''

''உன்னுடைய புருஷனைப் பற்றித்தான்! மறந்து விட்டாயா, என்ன? அல்லது அபாயம் நீங்கி விட்டது என்று நினைத்தாயா?''

''அவகளுக்கு ஒரு அபாயமும் இல்லை, சாமி! நான்தான் பெண் புத்தியினால் வீணாகப் பயப்பட்டேன்.''

''பொன்னியம்மா! நீ சுத்த அசடு! உன்னை யாரோ ஏமாற்றி விட்டிருக்கிறார்கள். உண்மையில் உன் புருஷனுக்கு இன்று இரவு பெரிய அபாயம் வரப் போகிறது. இங்கே மூன்று நாளாயிருந்தானே, ஒரு பிரம்மச்சாரித் தடியன்! அவனும், உன் புருஷனும் இப்போது எங்கே போயிருக்கிறார்கள், தெரியுமா? மலை மேலே செண்பகா தேவியம்மன் கோயிலுக்குத்தான் போகிறார்கள். மொத்தம் இருபது பேருக்கு மேல் இன்று இரவு அங்கே வரப் போகிறார்கள். எல்லாருமாகச் சேர்ந்து உன் புருஷனை அம்மனுக்குப் பலி கொடுக்கப் போகிறார்கள்!''

''ஐயோ!'' என்று அலறினாள் பொன்னி.

''மலையாள மந்திரவாதிகள் என்றால், பின்னே என்னவென்று நினைத்துக் கொண்டாய்? நான் சொல்கிறபடி கேட்டால் உன் புருஷனைக் காப்பாற்றிக் கொள்ளலாம்; கேட்பாயா?''

''கேட்கிறேன், சாமி!''

''இதோ இந்தக் கடிதத்தில் எல்லாம் விவரமாக எழுதியிருக்கிறேன். உடனே இதை எடுத்துச் சென்று தென்காசி போலீஸ் ஸ்டேஷனில் கொடுக்க வேணும்! கொடுத்தால் போலீஸார் வந்து பலியைத் தடுத்து உன் புருஷனைக் காப்பாற்றுவார்கள்.''

''போலீஸ் என்னத்துக்கு சாமி! நானே போய் என் புருஷனைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறேன்.''

''அசட்டுப் பெண்ணே! அவர்கள் இருபது பேர்: நீ ஒருத்தி என்ன செய்வாய்? உன்னையும் சேர்த்துப் பலி கொடுத்து விடுவார்கள்.''

பொன்னியம்மா யோசித்தாள்.

''என்ன சொல்கிறாய்? நீ போகிறாயா, அல்லது நான் போகட்டுமா? மலைமேலே நான் இப்போதே போனால் போலீஸார் வரும் வரையில் எப்படியாவது உன் புருஷனைக் காப்பாற்றி வைப்பேன்!''

''நானே போகிறேன், சாமி!'' என்று சொல்லிப் பொன்னியம்மா கடிதத்தை வாங்கிக் கொண்டாள்.

''போகா விட்டால் உன் புருஷன் உயிர் உன் தலை மேலே!'' என்று சொல்லி விட்டுச் சாமியார் விடுவிடு என்று நடையைக் கட்டினார்.

அன்று சாயங்காலம் அந்தி மயங்கி அஸ்தமன இருள் சூழ்ந்து வந்த நேரத்தில் நான் குற்றாலத்து மலை மீது ஏறிக் கொண்டிருந்தேன். இன்னும் சிறிது நேரத்தில் பூரணச் சந்திரன் உதயமாகி விடுவான். ஆயினும் மலைப்பாதை வழியில் மலைகளும் மரங்களும் நிலாவைத் தடுத்து இருளை நிலை நாட்டிக் கொண்டுதானிருக்கும். அதைப் பற்றி அன்றைக்கு என்ன கவலை? மலைமேல் இருபது பேருக்கு மேல் போயிருக்கிறார்கள். செண்பகா தேவிக்கு அருகில் காய்ந்த மரக்கட்டைகளைப் பிடுங்கிப் போட்டுப் பெரிய தீ வளர்ப்பார்கள். கூட்டம், பிரசங்கம், விவாதம், சபதம் — எல்லாம் இரவு வெகு நேரம் வரையில் நடக்கும். அப்புறம்...? ஆகா! அப்புறம் என்ன நடக்குமோ யாருக்குத் தெரியும்? எனக்கே பிறகு நடக்கப் போவதைப் பற்றி நினைக்க மனமில்லை. ஏதோ செய்ய வேண்டிய கடமையை நாம் செய்தாகி விட்டது. இனிமேல் நடக்கிறது நடக்கட்டும் என்று மன நிம்மதியோடு இருப்பதுதான் சரி.

இம் மாதிரி எண்ணத்துடன் மேலே ஏறிக் கொண்டிருந்த போது பின்னால் இன்னும் யாரோ ஒருவர் வருகிற மாதிரி தோன்றியது. ஒருவர் அல்ல; இருவர் வருகிறார்கள் என்று பேச்சிலிருந்து தெரிந்தது. ஆகா! வாஞ்சியும் தர்மராஜனும் போல் அல்லவா தோன்றுகிறது? நமக்கும் பின்னால் இவர்கள் வருகிறார்களோ?

அவர்களைச் சந்திப்பதற்கு முன்னால் நான் அவசியம் செய்ய வேண்டிய காரியம் ஒன்று இருந்தது. நன்றாய் இருட்டட்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால் அதை முடிப்பதற்குள் இவர்கள் விரைந்து நடந்து வந்து நம்மைப் பிடித்து விட்டால் ஆபத்தாய்ப் போய்விடும்.

எனவே, சட்டென்று மலைப்பாதையில் ஒரு முடுக்குத் திரும்பியதும் காட்டுக்குள் புகுந்து சிறிது தூரம் சென்று ஒரு பாறைக்குப் பின்னால் மறைந்து கொண்டேன். வேஷத்தைக் களைந்தேன். தாடியையும் சடையையும் ஒரு கைக் குட்டைக்குள் வைத்துச் சுற்றிக் கைக் குட்டையை முடிச்சுப் போட்டேன். அடையாளமாக ஒரு மரப் பொந்துக்குள் வைத்தேன். இதற்குள், பின்னால் வந்தவர்கள் முன்னால் போயிருக்க வேண்டும் என்று எண்ணிப் பாதைக்கு வந்தேன். முன்னால் கண்ணுக்கு எட்டிய தூரத்துக்கு ஆட்களைக் காணவில்லை. பின்னாலும் யாரும் வருவதாகத் தெரியவில்லை. சரி; முன்னால் ரொம்ப விரைந்து போய் இன்னொரு வளைவில் அவர்கள் திரும்பியிருக்க வேண்டும் — இவ்வாறு எண்ணிக் கொண்டு நானும் விரைந்து நடந்தேன்.

மரப்பாலத்துக்கு அருகில் சென்ற போது பின்னால் ஆள் வரும் சத்தம் மறுபடி கேட்டது. நின்று அவர்கள் வரட்டும் என்று காத்திருந்தேன். அதே வாஞ்சி ஐயரும் தர்மராஜனுந்தான். "அடே! இவர்கள் வழியில் எப்படி மாயமாய் மறைந்தார்கள்?" என்று மனத்தில் ஏற்பட்ட அதிசயத்தை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. வாஞ்சி வழக்கம் போல் கையில் ஒரு சிறு தோல் பெட்டி வைத்திருந்தார். அதோடு இப்போது ஒரு சின்னத் துணி மூட்டையும் காணப்பட்டது. தோல் பெட்டி நடக்கும் போது 'லொடுக்', 'லொடுக்' என்று சத்தம் இட்டது. துணி மூட்டை சத்தம் போடவில்லை. இரண்டுக்குள்ளும் என்ன இருக்கும்?

"என்ன வாஞ்சி! என்ன தர்மராஜ்! இப்பத்தான் வருகிறீர்களா?" என்று கேட்டேன்.

"என்ன ராகவாச்சாரி! நீங்களும் இப்போதுதான் போகிறீர்களா, என்ன?"

மூன்று பேரும் கலகலவென்று குதூகலமாகப் பேசிக் கொண்டு மேலே ஏறினோம்.

6

இரவு சுமார் பத்து மணி ஆயிற்று. செண்பகாதேவி அருவிக்குப் பக்கத்தில் உள்ள ஒரு தட்டையான பாறையில் இருபத்தைந்து ஆட்கள் வட்டமாய் உட்கார்ந்திருந்தார்கள். நடுவில் மரக்கட்டைகள் சடசடவென்று சத்தத்துடன் எரிந்து வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்தன. ஜூன் மாதத்துக் கடுங்கோடையானாலும் அருவிக்குப் பக்கமானபடியால் கொஞ்சம் குளிர் இருந்தது. நெருப்பு அதற்கு இதமாயிருந்தது.

முன் போலவே நீலகண்ட பிரம்மச்சாரி அக்கிரஸ்தானத்தை வகித்து ஆவேசமான பிரசங்கம் செய்தார்:—

"தோழர்களே! ஸ்ரீ வேதவியாச முனிவர் பிரம்ம வைவர்த்த புராணத்தில் சொல்லியிருக்கும் காலம் நெருங்கி விட்டது. நந்தன வருஷத்துக்கும் ஆனந்த வருஷத்துக்கும் மத்தியில் வெள்ளைக்காரனுடைய சாம்ராஜ்யம் அழிந்து போகும் என்று வியாச பகவான் எழுதி வைத்திருக்கிறார். ஐயாயிரம் வருஷங்களுக்கு முன்பே ஞான திருஷ்டியால் உணர்ந்து சொல்லியிருக்கிறார். அந்த மகானுடைய வாக்குப் பொய்யாகுமா? ஒரு நாளும் பொய்யாகாது. ஆகையால், இன்னும் மூன்று வருஷத்துக்குள் வெள்ளைக்காரன் பூண்டோடு அழிந்து கூண்டோடு யமலோகம் போகப் போகிறான்."

இவ்வாறு பிரம்மச்சாரி வெறி கொண்டவர் போல் பேசிக் கொண்டே போனார். வெள்ளைக்காரனுடைய ராஜ்யம் பாரத புண்ணிய பூமியில் ஏற்பட்டதிலிருந்து தேசம் அடைந்து வரும் கஷ்டங்களையெல்லாம் சரமாரியாக எடுத்துச் சொன்னார்.

"நமது தர்மத்தை அழித்தார்கள்; நமது தொழில்களை அழித்தார்கள்; நமது தங்கத்தையெல்லாம் கொள்ளை கொண்டு போனார்கள்; செல்வம் கொழித்த நாட்டில் பஞ்சத்தை உண்டு பண்ணினார்கள்; தோழர்களே! இந்த மாதிரி அக்கிரமங்களைத் துஷ்ட நிக்கிரஹ சிஷ்ட பரிபாலனம் செய்யும் விஷ்ணு பகவான் பொறுப்பாரா? ஒரு நாளும் பொறுக்க மாட்டார். அக்கிரமத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட பால கங்காதர திலகர் என்ன, அரவிந்த கோஷ் என்ன, லாலா லஜபதிராய் என்ன, விபின சந்திரபாலர் என்ன, அசுவினி குமார தத்தர் என்ன, இப்பேர்ப்பட்டவர்களை அனுப்பி வைத்தார்; நமது செந்தமிழ் நாட்டிற்கும் வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவம், சுப்பிரமணிய பாரதியார் முதலிய வீரர்களை அனுப்பி வைத்தார். இந்த வீரர்களில் பலர் இப்போது சிறையில் இருக்கிறார்கள்; சிலர் தேசப் பிரஷ்டர்களாயிருக்கிறார்கள்; அதனால் என்ன? கிருஷ்ண பகவான் சிறைச்சாலையில் இல்லையா? இராமபிரான் வனவாசம் செய்யவில்லையா? 'ஒரு காலம் வரும்; அப்போது சிறைக் கதவுகள் உடைத்துத் திறக்கப்படும்' என்று சொல்லிக் கொண்டிருந்தேன். தோழர்களே!

அந்தக் காலம் இப்போது வந்து விட்டது.''

''தயார்! தயார்!'' என்று எல்லாரும் கூவினார்கள். என் எதிரே இருந்த வாஞ்சி ஐயர் மட்டும், ''இந்த மாதிரி நூறு தரம் கேட்டு நூறு தடவை பதில் சொல்லியாகி விட்டது!'' என்று முணுமுணுத்தார்.

அருகிலிருந்த தர்மராஜய்யர் வாஞ்சி ஐயரை அடக்கி, ''பேசாமலிரு!'' என்றார்.

''வாஞ்சி ஐயர் என்ன முணுமுணுக்கிறார்?'' என்று சுப்பையாப் பிள்ளை கேட்டார்.

'' 'பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே' என்று பாரதியார் பாடியாகி விட்டது. இன்னமும் 'ஐயர்' பட்டம் என்ன? 'வாஞ்சி' என்று சொன்னால் போதும்!'' என்றார் வந்தேமாதரம் சுப்பிரமணிய ஐயர்.

நீலகண்ட பிரம்மச்சாரி குறுக்கிட்டு, ''வாஞ்சி காரியத்தில் இறங்க வேண்டும், பேசியது போதும் என்று துடியாயிருக்கிறார். அது நியாயந்தான். ஏற்கெனவே சபதம் செய்தவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் உடனே சபதம் எடுத்துக் கொள்ளட்டும்!'' என்றார்.

அன்றைக்கு அங்கே வந்திருந்த இருபத்தைந்து பேரில் இருபது பேர் ஏற்கெனவே பிரதிக்ஞை எடுத்துக் கொண்டவர்கள் என்றும், ஐந்து பேர் புதிதாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஏற்பட்டது. அந்த ஐவரில் நான் ஒருவன்.

மடத்துக் கடைச் சிதம்பரம் பிள்ளை பிரதிக்ஞா பத்திரத்தை எடுத்துப் படித்தார். அதன் வாசகம் கேட்கவே பயங்கரமாயிருந்தது. ''பாரதத் தாயின் விடுதலைக்காக உயிரையும் கொடுப்பேன்; தலைவர் கட்டளையை நிறைவேற்றுவேன்; துரோகம் செய்ததாக ஏற்பட்டால் காளிக்கும் பலியாவேன்'' என்பவை அதன் முக்கியமான அம்சங்கள். கை விரலைக் கத்தியால் வெட்டி, அந்த இரத்தத்தில் பெருவிரலை நனைத்துப் பத்திரத்தின் அடியில் கைநாட்டுச் செய்ய வேணும். காளியின் படத்துக்கு முன்னால் குங்குமம் கலந்த செந்நீரைக் குடிக்க வேணும். இதுதான் பிரதிக்ஞை முறை என்று தெரிந்தது.

ஐந்து பேரும் இந்த முறைப்படியே பிரதிக்ஞை செய்தோம். பிறகு நீலகண்ட பிரம்மச்சாரி கூறினார்: ''தோழர்களே! இனிமேல் நான் தேதியைச் சொல்லலாம். அடுத்த அமாவாசை தினம் குறிப்பிடப் பட்டிருக்கிறது. சபதம் செய்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு வெள்ளைக்காரனைக் குறிப்பிட்டு வைத்துக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்து வர வேண்டும். அமாவாசையன்று வேலை தீர்த்து விட வேண்டும். முடிந்தால் ஓடித் தப்பித்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் தன்னையும் திருப்பிச் சுட்டுக் கொண்டு வீர சொர்க்கம் அடைய வேண்டும். இது தான் திட்டம். புதுச்சேரியில் வேண்டிய ஆயுதங்கள் கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆயுதம் இல்லாதவர்கள் புதுச்சேரிக்குப் போய் வாங்கிக் கொள்ளலாம். தோழர்களே! அதற்கு முன்னால் இன்னும் ஒரு விஷயம் இருக்கிறது. அதையும் சொல்லி விடுகிறேன். எந்தக் காரியத்தையும் சரிவரச் செய்து முடிப்பதற்கு இடம் பொருள் ஏவல் மூன்றும் வேண்டும். நமக்கு இடம், ஏவல் இரண்டும் இருக்கிறது! பொருள்தான் இல்லை. 1857-ம் வருஷத்தில் நடந்த இந்திய சுதந்திர யுத்தம் ஏன் தோல்வியடைந்தது தெரியுமா? பணம் இல்லாதபடியால்தான். ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் அடுத்த அமாவாசைக்குள் தலைக்கு ஆயிரம் ரூபாயாவது சேர்த்துக் கொண்டு வந்து என்னிடம் கொடுக்க வேண்டும்.''

இந்தச் சமயத்தில் வாஞ்சி எழுந்து நின்றார். தலைவரைப் பார்த்து, ''ஐயா! பத்திரிகைகளிலே ஒரு செய்தி வந்திருக்கிறதே, அதைப் பற்றிய உண்மை என்ன?'' என்று கேட்டார்.

''எந்தச் செய்தியை, எந்த உண்மையைக் கேட்கிறாய்?'' என்று பிரம்மச்சாரி கர்ஜித்தார்.

''அரவிந்தகோஷ் ஆசிரமத்தார் விடுத்திருக்கும் அறிக்கையைப் பற்றித்தான் கேட்கிறேன். அதில் உங்களுடைய பெயரைக் குறிப்பிட்டு, ஆசிரமத்துக்கும் உங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்பதாகச் சொல்லியிருக்கிறதே? அதன் உண்மை என்னவென்றுதான் கேட்கிறேன்.''

பிரம்மச்சாரி ஒரு பயங்கரச் சிரிப்புச் சிரித்தார். ''வாஞ்சி! என்ன கேள்வி கேட்டாய்? உன் தலைவனையே சந்தேகிக்கிறாயா? அரவிந்தகோஷ் ஆசிரமத்தார் அப்படி அறிக்கை விடாமல் வேறு என்ன செய்வார்கள்? என்னுடைய காரியங்களுக்கு அவர்கள் பொறுப்பாளிகள் என்று ஒப்புக் கொள்வார்களா? அப்படியானால் அவர்கள் புதுச்சேரியில் இருக்க முடியுமா? மேலும் வேலை செய்ய முடியுமா? மூடாத்மா! இது கூட உன் புத்திக்கு எட்டவில்லையா? நாளைக்கு உன்னைப் போலீஸார் கைது செய்து விசாரித்தால், எங்கள் பெயர்களையெல்லாம் எழுதிக் கொடுத்து விடுவாயா?'' என்று பிரம்மச்சாரி கர்ஜித்தார்.

அதற்கு வாஞ்சி சாவதானமாக, ''ஐயா! உங்கள் பெயர்களையெல்லாம் நான் எழுதிக் கொடுக்க வேண்டியதில்லை. ஏற்கெனவே நம் எல்லாருடைய பெயர்களும் — இரண்டொரு பெயரைத் தவிர — தென்காசி போலீஸ் ஸ்டேஷனில் இருக்கின்றன. இன்று சாயங்காலம் தென்காசியில் என் மருமகன் சொன்னான். அவன் போலீஸ் ஸ்டேஷனில் குமாஸ்தா. நம் எல்லாருடைய பெயர்களையும் குறிப்பிட்டு ஒரு மொட்டைக் கடிதம் ஸ்டேஷனுக்கு வந்திருக்கிறதாம்! என்னை ஜாக்கிரதையாயிருக்கும்படி சொன்னான்!'' என்றார்.

''அப்படியானால் இந்தக் கூட்டத்திலேதான் யாரோ ஒரு துரோகி இருக்க வேண்

டும். அவன் யார்? காளி மாதாவின் மேல் ஆணை! உண்மையை ஒப்புக் கொண்டு விடுங்கள்!'' என்று பிரம்மச்சாரி கர்ஜித்தார்.

''அதோ காளிமாதா!'' என்று அச்சமயம் ஒரு கூச்சல் எழுந்தது. கூச்சல் போட்டவர் சுப்பையாப் பிள்ளை. அவர் நோக்கிய திக்கை எல்லாரும் நோக்கினோம். சற்றுத் தூரத்தில் ஒரு பாறை முனையில் விரித்த கூந்தலுடனும், பயங்கரத்தினால் அகன்ற விழிகளுடனும் பெருமூச்சு விட்டுக் கொண்டு ஒரு பெண் உருவம் நின்றது. காளி மாதா என்று நினைக்கக் கூடியதாகத்தான் இருந்தது. ஆனாலும் அவள் காளி இல்லை. பொன்னியம்மா என்று எனக்குத் தெரிந்து விட்டது.

முருகையனும் அதைத் தெரிந்துகொண்டு தலைவரை நோக்கி, ''ஐயா! அந்தப் பெண் காளி மாதா அல்ல; என்னுடைய மனைவி பொன்னி. எதற்காக இங்கே வந்தாள் என்று இதோ போய் விசாரித்துக் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

அவன் போன உடனே வாஞ்சி, ''நான் சொன்னதின் உண்மை இப்போது தெரிந்து விட்டதல்லவா? யார் யாருக்கோ இந்தக் கூட்டத்தின் விஷயம் தெரிந்து போயிருக்கிறது. அந்தப் பெண் இன்று மாலை ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தாள். அது தென்காசி போலீஸுக்கு எழுதப்பட்ட கடிதம். இன்று இரவு இங்கே நடக்கும் கூட்டத்தைப் பற்றி அதில் எழுதியிருந்தது!'' என்றார்.

''இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?'' என்று சங்கர கிருஷ்ணையர் கோபக் குரலில் முழங்கினார்.

''சாயங்காலம் இங்கே நான் வந்து கொண்டிருந்த போது அந்தப் பெண் வழி மறித்துக் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்க்கச் சொன்னாள். கடிதத்தில் ஏதோ மர்மமான விஷயம் எழுதியிருக்கிறதென்றும், போலீஸுக்குக் கொண்டு போக வேண்டாமென்றும், அவளுடைய புருஷனிடம் கொடுக்கும்படியும் நான் சொல்லி விட்டு வந்தேன். அந்தக் கடிதத்தில் ரொம்ப அதிசயமான விஷயம் என்னவென்றால்......''

இதற்குள்ளே முருகையனும் பொன்னியம்மாளும் அங்கே வந்து விட்டார்கள். முருகையன் பொன்னியம்மாளிடம் இருந்த கடிதத்தை வாங்கித் தலைவரிடம் கொடுத்தான்.

தலைவர் படித்துவிட்டு, ''ஆஹா! கடிதம் ரொம்ப விசித்திரமானதுதான்! இதை யார் அம்மா உன்னிடம் கொடுத்தது?'' என்று கேட்டார். ''தாடிச் சாமியார் ஒருவர் கொடுத்தார், ஐயா! இந்தச் செண்பகா தேவியில் அவரை அடிக்கடி நான் பார்த்திருக்கிறேன்!'' என்றாள் பொன்னியம்மா.

''அப்படியா சேதி! துரோகி யாராயிருப்பான் என்று உங்களில் யாராவது ஊகித்துச் சொல்ல முடியுமா?'' என்று தலைவர் கேட்டார்.

உடனே நான் எழுந்து நின்று, ''நான் சொல்ல முடியும்!'' என்றேன்.

''யார்? தெரிந்தால் பயப்படாமல் சொல்லு!''

''அதோ, அந்தப் படபடத்த மனுஷர் தான்! அவர் கையிலுள்ள மூட்டையை அவிழ்க்கச் சொல்லுங்கள்!''

''சுப்பையாப் பிள்ளை! வாஞ்சியின் மூட்டையை எடுத்து அவிழ்த்துப் பார்!'' என்றார் பிரம்மச்சாரி.

சுப்பையாப் பிள்ளை அப்படியே பாய்ந்து வாஞ்சியின் துணி மூட்டையை எடுத்து அவிழ்த்தார். அதற்குள்ளேயிருந்து தாடியும் சடையும் விழுந்தன.

''தோழர்களே! சந்தேகமில்லை; வாஞ்சி தான் துரோகி. இந்தக் கடிதத்தின் கையெழுத்தும் அவனுடைய கையெழுத்துத் தான்!'' என்று நீலகண்ட பிரம்மச்சாரி கூவினார்.

எல்லாரும் வியப்போடும் பயங்கரத்தோடும் வாஞ்சி ஐயரைப் பார்த்தார்கள்.

இதெல்லாம் நடந்து கொண்டிருந்த போது வாஞ்சி சும்மா இல்லை; ஒரு காரியம்செய்துகொண்டிருந்தார். அதாவது கையிலிருந்த தோல் பெட்டியைத் திறந்து கொண்டிருந்தார். எதற்கு என்று யாராலும் ஊகிக்க முடியவில்லை. கையில் பளபளவென்று மின்னிய ரிவால்வருடன் அவர் குதித்து எழுந்து நின்ற போதுதான் தெரிந்தது.

ரிவால்வரை ஒருமுறை எங்கள் எல்லாரையும் பார்த்துச் சுழற்றிவிட்டு வாஞ்சி கூறினார்: —''தோழர்களே! இந்த ரிவால்வரில் ஆறு குண்டுகள் இருக்கின்றன. வேறு முக்கிய காரியத்துக்காக இதை வைத்திருக்கி



'றேன். சிதம்பரம் பிள்ளையைச் செக்கு இழுக்கச் செய்ததற்குப் பழி வாங்குவதற் காக வைத்திருக்கிறேன். கலெக்டர் ஆஷ் துரைக்குப் பரிசு அளிப்பதற்காக வைத்திருக் கிறேன். ஆனால் யாராவது அருகில் நெருங் கினீர்களோ, அப்புறம் என் பேரில் பழி சொல்ல வேண்டாம். மறுபடியும் எச்ச ரிக்கை செய்கிறேன். துரோகி நான் அல்ல; யார் என்று ஒருவாறு ஊகித்திருக்கிறேன், ஆனாலும் காட்டிக் கொடுக்க விருப்ப மில்லை. எல்லாரும் ஓடித் தப்பிப் பிழை யுங்கள். கடவுள் அருளால், தென்காசி போலீஸ் இன்ஸ்பெக்டர் மொட்டைக் கடி தத்தை நம்பவில்லை. யாரோ பைத்தியக் காரன் எழுதியது என்று சொல்லிச் சும்மா இருந்து விட்டார். ஆனால் இரண்டு நாட் களில் அப்படிச் சும்மா இருக்க மாட்டார் கள். உங்கள் எல்லோரையும் தேடிப் பிடிக்க முயல்வார்கள். ஆகையால் ஓடிப் போய்ப் பிழையுங்கள். உயிரை இப்போது காப் பாற்றிக் கொண்டால் பிற்பாடு உங்கள் சப தத்தை நிறைவேற்றலாம். ஓ! வாய்ப் பேச்சில் வீரத் தலைவரே! எருக்கூர் நீல கண்ட பிரம்மச்சாரியே! ஊருக்குப் போய் கல்யாணம் செய்து கொண்டு சுகமாயிரும். புரட்சி இயக்கத்தை நடத்த உம்மால் முடி யாது. உம்மால் பேச்சுப் புரட்சிதான் செய்ய முடியும். முருகையா! உன் சம்சாரத்தைக் கேள். துரோகி யார் என்று அவள் ஒருவேளை சொன்னாலும் சொல்வாள்!'' இவ்விதம் எரிமலை நெருப்பைக் கக்குவது போல் கக்கி விட்டு வாஞ்சி ஐயர் அங்கிருந்து ஒரே ஓட்டம் பிடித்தார். அவருடன் தொடர்ந்து தர்ம ராஜய்யரும் ஓடினார்.

மற்றவர்கள் எல்லாரும் சிறிது நேரம் திகைத்து நின்றுவிட்டுப் பிறகு அவர்களும் நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள். நானும் முருகையனும் பொன்னியம்மாவும் மட்டும் மீதமிருந்தோம். ''ஐயா! பைத்தியங்கள் எல்லாம் ஓடிப் போய்விட்டன. நீங்கள் வரப் போகிறீர்களா, அல்லது செண்பகா தேவியி லேயே இருந்து நிஷ்டை செய்யப் போகிறீர் களா?'' என்று முருகையன் கேட்டான். ''இல்லை; நானும் உங்களுடன் வருகி றேன்!'' என்றேன். மூன்று பேருமாகப் புறப் பட்டுச் சாவதானமாய்ப் பேசிக் கொண்டு சென்றோம். ''பொன்னியம்மா! துரோகி யாராயிருக்கும்? ஏதோ உன்னைக் கேட்டால் தெரியும் என்று அந்த வாஞ்சி ஐயர் உளறி விட்டுப் போனாரே?'' என்றான் முருகை யன்.

''அதுதான் நானும் யோசித்துக் கொண் டிருக்கிறேன். இன்னும் பிடிபடவில்லை. ஏங் கறேன்? அந்தத் தாடியும் சடையும் என்ன ஆச்சு?'' என்று பொன்னி கேட்டபோது எனக்குக் கொஞ்சம் திடுக்கிட்டது.


''அது என்னத்துக்கு அந்தச் சனியன்? எங்கேயானும் போகட்டும்'' என்றான் முரு கையன்.

குறுக்கு வழியாக அருவியைப் பிடித்துக் கொண்டு நாங்கள் இறங்கிச் சென்றோம். பெரிய அருவி விழும் மலை உச்சியை அடைந் தோம். ''அப்பா! இங்கேயிருந்து உருண்டு கீழே விழுந்தால் எப்படியிருக்கும்?'' என் றான் முருகையன். ''அது என்ன கேள்வி?'' என்றாள் பொன்னியம்மா.

மெதுவாகப் பாதி வழி இறங்கினோம். பொங்குமாங்கடலுக்கு அருகில் வந்து சேர்ந் தோம்.

வெண்ணிலாவில் பொங்குமாங்கடல் அலை மோதிக் கொண்டு அழகாகக் காட்சி அளித்தது. அருவியில் தண்ணீர் கொஞ்சம் என்றாலும் பொங்குமாங்கடல் பொங்கி வழிந்து கொண்டுதானிருந்தது.

ஐயோ! இது என்ன? ஒரு நொடியில் அலை மோதிய அந்தப் பொங்குமாங்கடலில் நான் விழுந்து விட்டேன்! எப்படி விழுந் தேன் என்று தெரியவில்லை. கடலுக்கு அருகில் வந்து நின்றபோது முதுகில் யாரோ கைவைத்தது போலிருந்தது. ஒருவேளை, முருகையன்... சே! அவன் ஏன் நம்மைத் தள்ளப் போகிறான்? இதோ அவனும் அவன் சம்சாரமும் கரையிலே உட்கார்ந்து எவ்வளவு கவலையுடன் நம்மைக் கரை சேர்ப்பதற்காகக் காத்திருக்கிறார்கள்?



கரை அருகில் நான் வந்ததும் முருகை யன் கை கொடுத்தான். ஆனால் இதென்ன? பிடித்து இழுப்பதற்குப் பதி லாக நம்மை ஏன் திருப்பித் தள்ளுகிறான்? முருகையனும் பொன்னியம்மாவும் ஏன் சிரிக் கிறார்கள்? பௌர்ணமி நிலவினால் அவர்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்

டதா, என்ன?

கடவுளே! அன்று இரவு அனுபவத்தை இன்றைக்கு நினைத்தாலும் எனக்குக் குடல் நடுங்குகிறது. வேண்டாம், ஆண்டவனே, வேண்டாம்! ஈரேழு பதினாலு ஜன்மங்களுக்கும் வேண்டாம்!

என் கைகளும் கால்களும் களைத்துத் தண்ணீரில் மூழ்கி இரண்டு வாய்த் தண்ணீரும் குடித்து இனிச் செத்தாற் போலத்தான் என்று எண்ணிய பிறகு என்னைக் கரையில் இழுத்துக் குற்றுயிரும் குலை உயிருமாகப் போட்டு விட்டு அந்தப் புண்ணியசாலிகள் போய்ச் சேர்ந்தார்கள். இந்த மட்டும் உயிர் கொடுத்தார்களே, அவர்கள் பிள்ளைகுட்டிகள் தலைமுறை தலைமுறையாக நன்றாயிருக்க வேணும்.

7

தும்பைப் பூப்போல் நரைத்த தலைமயிரையுடைய கிழவர் மேற்கண்டவாறு கதையைச் சொல்லி நிறுத்தினார். ஆனால் கதை பூர்த்தியாகி விட்டதாக எனக்குத் தோன்றவில்லை.

"அப்புறம் என்ன?" என்று கேட்டேன்.

"அப்புறம் என்ன? எல்லாருக்கும் தெரிந்த விஷயந்தானே? மறுநாள் மணியாச்சி ஜங்ஷனில் கலெக்டர் ஆஷ் துரையை வாஞ்சி ஐயன் சுட்டுக் கொன்றுவிட்டுத் தானும் சுட்டுக் கொண்டு செத்தான். நீலகண்ட பிரம்மச்சாரி முதலிய பதினாலு ஆட்கள் மீது சதியாலோசனைக் குற்றம் சாட்டி வழக்கு நடத்தினார்கள். தண்டனையும் கொடுத்தார்கள்!"

"அவர்களில் முருகையன் மட்டும் இல்லை போலிருக்கிறது!"

"இல்லை; ஏனென்றால் அவன் பெயர் போலீஸுக்கு முதலில் போன ஜாபிதாவில் இல்லை. அவன் அதிர்ஷ்டக்காரன்; பொன்னியும் அதிர்ஷ்டக்காரி."

"ஆமாம்; முருகையனும் அவன் மனைவியும் உங்களை ஏன் அப்படிப் பொங்குமாங் கடலில் தள்ளி வதைத்தார்கள்! என்ன காரணம்?" என்று கேட்டேன்.

"அந்த முட்டாள்கள் நான்தான் துரோகி என்றும் போலீஸுக்கு எழுதியது நான்தான் என்றும் எண்ணினார்கள். அதற்காக என்னை அப்படித் தண்டித்தார்கள்."

"எப்பேர்ப்பட்ட முட்டாள்கள்? இதற்குத்தான் படிப்பு அவசியம் வேண்டும் என்று சொல்கிறது."

"ஆம், ஆம்; இதற்குத்தான் படிப்பு வேண்டும் என்கிறது. இதில் ரொம்ப ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், படிப்பில்லாத அந்த முட்டாள்களுக்கு எப்படியோ உண்மை தெரிந்து விட்டது."

"என்ன? அப்படியானால் தாங்கள் தான்.....?"

"இல்லாவிட்டால் ஏன் இத்தனை வருஷமாக இப்படி அமைதியின்றி அலைகிறேன்?"

"கடிதங்கள்? — வாஞ்சி ஐயரின் கையெழுத்து?"

"ஓ! கதை ஆசிரியரே! இன்னும் உமக்குத் தெரியவில்லையா? நீர் என்ன கதை எழுதப் போகிறீர்? 'போர்ஜரி' கேஸில் ஏழு வருஷம் சிட்சைப் பட்டவனாயிற்றே நான்? சிதம்பரம் பிள்ளை கையெழுத்தையும் 'போர்ஜரி' செய்தேன். வாஞ்சி ஐயர் கையெழுத்தையும் போர்ஜரி செய்தேன். எதற்காக என்று கேட்கிறீரா? நீர் எதற்காகக் கதை எழுதுகிறீர்? யாருக்கு எந்தக் கலை மேல் பிரியமோ அந்தக் கலையில் ஈடுபடுவது இயல்புதானே? அதோடு சர்க்காரிடமிருந்து ஒரு பெரிய சன்மானம் பெறலாம் என்ற ஆசையும் கொஞ்சம் இருந்தது....."

இப்படி அந்த மனிதர் சொல்லிக் கொண்டிருந்த போது, கலகலவென்று குழந்தைகள் சிரிக்கும் சத்தம் கேட்டது. செண்பகாதேவி கோயில் முடுக்கைத் தாண்டி ஐந்தாறு குழந்தைகள், ஒரு யௌவன புருஷன், ஒரு இளம் பெண், ஒரு கிழவன், கிழவி இவ்வளவு பேரும் வந்து கொண்டிருந்தார்கள்.

உடனே திரும்பிப் பார்த்தேன். எதிரேயிருந்த கிழவரைக் காணோம்; மாயமாய் மறைந்து விட்டார். அவர் வைத்திருந்த தாடியும் சடையும் தண்ணீரில் கீழே போய்க் கொண்டிருந்தன.

வந்தவர்களில் கிழவி என்னிடம் வந்து, "ஏன், ஐயா! இங்கே இப்போது இன்னொரு ஆள் உட்கார்ந்திருந்தார் அல்ல?" என்றாள்.

"இல்லையே, அம்மா! நான் மட்டுந்தான் உட்கார்ந்திருந்தேன்!" என்று ஒரு கற்பனையைச் சொல்லி, "உன் பெயர் என்ன, பாட்டியம்மா?" என்று கேட்டேன்.

"என் பெயர் பொன்னியம்மா!" என்றாள்.

"கிழவனாரின் பெயர்?"

"நான் சொல்லலாமா? சுப்பிரமண்ய சுவாமியின் இன்னொரு பெயர்!"

"முருகையனா?"

"ஆமாம்."


"குழந்தைகள் உங்கள் பேரன் பேத்திகளா?"

"ஆம், ஐயா! குழந்தைகள் நல்லாயிருக்க வேணுமென்று அம்மனை வேண்டிக்கத்தான்!"

"அப்படியே, தாயே!" என்றேன்.


அருவியில் அரைமணி நேரம் நின்று குளித்து விட்டுக் கீழே இறங்கத் தொடங்கினேன்.

பலாத்கார பயங்கரங்கள் எல்லாம் இல்லாமல் அஹிம்சா முறையில் இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த மகாத்மாவை வாழ்த்திக் கொண்டே இறங்கினேன். அதனால்தானே தமிழ் நாட்டுக் குழந்தைகள் இவ்வளவு சந்தோஷமாகச் சிரித்து விளையாடிக் கொம்மாளம் அடிக்க முடிகிறது!



சேஸாரி
கலெக்ஷனின் சூட்டிங்ஸ்
பாம்பே டையிங்
ஸ்தாபிதம் 1879

REGISTERED No. M. 4395
Registered as a Newspaper in Sri Lanka



ஜண்டு பாம்
ஜலதோஷம், தலைவலி மற்றும் நோவுகளை நொடியில் நீக்குகிறது.

வேலைகளுக்கு இடைஞ்சலும் ஏற்படாது. தலைவலியில் இருந்து துரிதமான விடுதலையும் கிடைக்கிறது. எனவேதான் தேவை ஜண்டு பாம். தலைவலி நீங்கலாக, ஜலதோஷம், இடுப்புவலி, மூட்டுவலி, தசைப் பிடிப்பு மற்றும் சுளுக்கு வலிகளில் இருந்தும் குணம் அளிக்கிறது. தவிரவும், மற்ற பாம்களோடு ஒப்பிடும்போது ஜண்டு பாம் கூடுதல் வீரியம் கொண்டது. நிறமற்றது. எனவே கறை படியுமோ என்ற பயமில்லை. பிசுபிசுப்பற்றது. அதனால் வீட்டிலோ வெளியிலோ உபயோகிக்கலாம். நறுமணமும் கொண்டது. ஜண்டு பாமை கொஞ்சமாக உபயோகித்தால் போதும். அதனால் சிக்கனமானது. மிருதுவான சருமத்துக்கும் இதமானது. ஆகவேதான் தாய்மார்கள் தங்கள் குடும்பத்தினருக்கு ஜண்டு பாமையே தடவ விரும்புகிறார்கள்.

சீசாவின் மேல் இருக்கும் சிகப்பு சீலைப் பார்த்து வாங்குங்கள்.



5, 10 மற்றும் 30 கிராம்களில் கிடைக்கிறது

ஜண்டு பாம் வலிகளை நீக்கும் பாம்

ULKA-Z-1-88 TAM